கழக வெளியீடு-௪௬

உ

திருச்சிற்றம்பலம்

# மனுமுறைகண்ட வாசகம்

[மனுச்சோழன்]

வடலூர்

இராமலிங்க சுவாமிகள்

அருளியது

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி :: & சென்னை
இரக்தாக்ஷி௵ தைமீ

Published by

*The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited,*
:: *Tinnevelly and Madras* ·
*January 1925*

[*Copy-right.*]

***Printed by C. Munisawmy Mudaliar & Sons, Madras.***

# பதிப்புரை

செந்தமிழ்மொழியில் சிறந்த நூல்கள் பல இருப்பினும் அவையெல்லாம் செய்யுட்களாக இருப்பதால் அவற்றைப் பயிலத் தொடங்கும் மாணவர்க்கு அவை அறிதற்கு அருமை யாயிருக்கின்றன. ஆகவே, அவர்கள் எளிதிலுணர்வதற்கும் எழுதும் வகை தெரிவதற்கும் உரை நூல்கள் பல வெளி வருதல் இன்றியமையாததனவாகும். இக்கருத்துப் பற்றியே ஆசிரியர் காஞ்சிபுரம் சபாபதி முதலியார் சிறுவர் படிப் பதற்கு உரைநடைநூல் ஒன்று இயற்றும்படி விரும்ப, சுவாமி கள் அங்ஙனமே 'மனுமுறைகண்டவாசகம்' என்னும் இந் நூலைச் செந்தமிழ்ச்சுவை விளங்கும்படி எழுதினர்.

இந்நூலின்கண் பொலிவுபெற்று விளங்கும் பொருட் செறிவும், சொல்லழகும், பத்திச்சுவையும் கற்பார்க்குக் கழி பேருவகை ஊட்டுவனவாகும். இதன்கண் நீதிகள் சங்கிலித் தொடர் போல அமைந்து கிடக்கின்றன. பெண்டிரும் பிள்ளை களும் யாரும் படித்தும், கல்லாதார் கேட்டும் இன்புறத் தக்க அவ்வளவு எளிய இனிய நடையில் இஃது ஆக்கப் பெற்றுளது. இதனைப் படிப்பவர் இனிமையான தமிழ் நடை எழுதும் திறத்தை அடைவதோடு திருத்தமான நல்லறி வும், இறவாத இன்பமும் அடைவர் என்பது திண்ணம்.

திருத்தமான உரை நடை நூல்கள் யாவும் இக்கழக வழி யாக உயர்ந்த முறையில் பதிக்கப் பெற்று வெளிவருதல் வேண்டு மென்பது பற்றி இந்நூலாசிரியரே இயற்றி யருளிய 'சீவகாருணிய ஒழுக்கம்' என்னும் நூலை முதற்கண்

## பதிப்புரை

பதித்து வெளியிட்டு, பின்னர் இந்நூலையும் அழகுறப் பதித்து வெளியிடலாயினேம்.

இந்நூலில் இடையிடையே பொருளுக்கேற்பத் தலைப்புக்கள் கொடுக்கப் பெற்றிருக்கின்றன. அன்றியும் ஆசிரியரது வரலாற்றுச் சுருக்கமும், நூலிற் பயின்றுவரும் பழமொழிகளும், அருஞ்சொல்லகராதியும் இதன்கண் சேர்த்திருக்கின்றோம். இச்சிறப்புக்களான் முன்னரே பல பதிப்புக்களுடையார்க்கும் இஃது இன்றியமையாததாகும்.

திருநெலவேலி,
25—1—1925.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# பொருளடக்கம்


**இராமலிங்கசுவாமிகள் வரலாற்றுச் சுருக்கம்** ௭

**நூல்** ௧

அரசனை வணங்கி அமைச்சர்கள் கூறல் ௫௨

அரசிளங்குமரன் ஆலயம்போதற் கநுமதிபெறல் ௧௬

அரசிளஞ்சேயை ஆடவர் போற்றல் ௨௫

இளங்கன்று இறந்தது விதியெனத் தேற்றல் ௩௪

இளவரசால்வந்த இடரென்றறிந்து ஆற்றொணாத்
துயரில் அரசன் ஆழ்தல் ௪௰

இளவரசை இழக்க இறைவன் துணிதல் ௬௰

இளவேந்து உறாத்துணனி இறைவனை இறைஞ்சுதல் ௨௮

இளைஞன் தேர்க்கீழ் இளங்கன் றரைபடல் ௨௭

இறைவன் வெளிப்படுதல் ௮௫

பெருமான் அருள்புரிந்து மறைய அரசன் ஆலயந்
தொழுது வணங்கல் ௯௩

கன்றிழந்த ஆ கதறி வருந்தல் ௩௭

கோமகன் குடும்ப கதை கூறல் ௩௩

செயத்தகுவ திதுவெனக்கூறல் ௫௯

சோரவுடைச் செல்வனைச் சூழ்ந்தோர் தேற்றல் ௩௨

சோழநாட்டுச் சீர்மையும் திருவாரூர்ச் சிறப்பும் ௧

தானைபுடைசூழத் தலைவன் வெளிப்போதல் ௧௯

பழிக்குப்பழி வாங்கப் பார்த்திப னினைத்தல் ௫௪

பிராயச் சித்தத்திற்குப் பெரியோரை நாடல் ௩௫

பிள்ளைப்பேறுகருதிப் பெருநோன்பாற்றல் ௯

பிள்ளையைப் பெற்றுப் பெருவிழாச் செய்தல் ௧௧

# பொருளடக்கம்


| | |
|---|---|
| மகனைக்கொல்ல மந்திரியை ஏவல் | ௬௧ |
| மகன்மேற் றேரை மன்னன செலுத்தல் | ௮௫ |
| மந்திரிதானே மாய்த்துக்கொளல் | ௭௧ |
| மனுச்சோழன் மாண்பு | ௫ |
| மன்னனுமிறக்க மனந்துணிதல் | ௭௫ |
| மாநிருகரும் பாரியானை மன்னன் புகழ்ந்தேற்றல் | ௮௮ |
| மைந்தன் எழில்கண்டு மங்கையர் மையல்கொளல் | ௨௨ |
| யாவரும் வருந்த இளங்கோ கொலைக்களம் புகுதல் | ௭௯ |
| வீதிவிடங்கற்கு வித்தைகற்பித்தல் | ௧௪ |
| வீதிவிடங்கன் வீதியிற்கிடத்தல் | ௮௧ |
| **நூலிற் பயின்றுவரும் பழமொழிகள்** | ௧ |
| **அருஞ்சொல் லகராதி** | ௯ |

திருச்சிற்றம்பலம்

# இராமலிங்க சுவாமிகள் வரலாற்றுச் சுருக்கம்

சிவபெருமான் ஐந்தொழில் சிறப்புற்று விளங்கும் சிதம்பரத்திற்கருகேயுள்ள மருதூரில் சிவபக்தி அடியார் பத்திமிக்கவராக இராமையாப் பிள்ளை என்பவருக்கும் அவரது ஆறாவது மனைவியாகிய பொன்னேரி சின்னம்மை என்பவருக்கும் சுபானு ஆண்டு, புரட்டாசித் திங்கள், உக-ம நாள் (5-10-1823) ஐந்தாவது குழந்தையாகத் தோன்றியருளினார். இவருக்கு, சபாபதிப் பிள்ளை பரசுராமப் பிள்ளை என்ற இரண்டு தமையன்மார்களும், சுந்தரத்தம்மாள், உண்ணாமுலையம்மாள் என்ற இரண்டு தமக்கைமார்களும் இருந்தனர். இவர் தோன்றிய ஆறாந் திங்களிலேயே தந்தையார் இறந்தனராக, மூத்த தமையனார் சபாபதிப்பிள்ளை, தமது குடும்பத்துடனே சென்னைக்கு வந்து, புராண விரிவுரை நிகழ்த்தி வாழலாயினர்.

சுவாமிகள் முதலில் தமது தமையனாரிடத்தும் பின்னர் காஞ்சிபுரம்-சபாபதி முதலியாரிடத்தும் கல்வி பயின்றனர். இளம்பருவத்திலேயே இவர் முருகக் கடவுளை மனமொழி மெய்யொன்ற வழிப்பட்டுப் புகழ்ப்பாக்கள் தொடுக்கலாயினர். இவர் அடிக்கடி திருவொற்றியூர்க் கோவிலுக்கும் சென்னைக் கந்தசாமி கோவிலுக்கும் போய்த் திருவருளைச் சிந்தித்து வருவர்.

இவர் முதற்கண் எழுதியது மாணவர்க்கு மாண்புடை உரை நடை கற்பிக்கும் உயர் நூலாய 'மனுமுறைகண்ட வாசகம்' என்பது. இதன்பின் பல நூல்களை ஒன்றன்பின் ஒன்றாகச் செய்தருளியதோடு அரிய பல விரிவுரைகளும் ஆங்காங்கு நிகழ்த்தினர். ஒரு நாள் வடமொழியிலும் தென்மொழியிலும் வல்ல சாஸ்திரியார் ஒருவர் சுவாமிகளிடம் வந்தபோது, வடமொழியே முதன் மொழி எனக் கூறினர். உடனே இவர், 'தமிழ்' என்னும் மொழியைக் குறித்து ஒரு விரிவுரை செய்து, அதன்கண் தமிழ் என்பது ஏனைய மொழிகளைப் போலாகாமல் பெரும்பாலும் உச்சரிப்பதற்கு எண்ணளவு சுருக்கமாயும், ஒலி யிலேசாயும், எழுத்துச் செய்யுளியற்றவும் மிக நீர்மையாயுள்ள பெருமொழியெனவும், மிகவும் எளிதாகச் சின்னாளுள் சேர்ப்பிக்கும் செவ்விய மொழியெனவும் விளக்கிக் காட்டியருளினர். இவருக்குத் தமிழில் எவ்வளவு பயிற்சியுளதோ அவ்வளவு வடமொழியிலுமுண்டு. அன்றியும் சோதிடம், மந்திரம், வைத்தியம், மூலிகை, இலக்கணம், வேதாந்த சித்தாந்தம், குளிகைமணி முதலிய பொருள்களில் தேர்ந்த ஆற்றலுடையவர். இவர் தமையன் தனிப் பெருவாழ்வை நாடிய இத்தகையர்க்கு விருப்பத்திற்கு மாறாக, உரியபொழுது மணவினை முடித்து வைத்தனர். மணமகன் மணமகள் இன்பந் துய்க்கும் அன்றிரா முற்றும் இவர் திருவாசகத்தை உள்ளம் உருகப் பாடிக் கழித்தனராம். பின்னரும் இவர் குடும்பத்திலிருந்து வாழவில்லை யென்பதாகச் சொல்கின்றது. இவருக்கு முதன் மாணவர் தொழூர்-வேலாயுத முதலியாரென்பர்.

பின்னர், இவர் சிதம்பரஞ் செல்லுகையில் புதுச்சேரியில் சின்னாள் தங்கி, சிதம்பரமடைந்து நடராஜர் திருமுன் பெற்று அங்கே கோடகநல்லூர் சுந்தரசுவாமிகளோடு அள

வளாவினர். பிறகு மதுரை முதலிய திருப்பதிகளுக்குப் போய்க் கருங்குழியில் பல ஆண்டுகள் தங்கி, ஆங்காங்குப் பல பாடல்கள்பாடி, கூடலூருக்குச் சென்று, ஆங்கு பிரம சமாஜத்தினர்க்கு வடிவ வழிபாட்டின் உண்மை ஈதெனை அறிவுறுத்தி, பின்னர் சிதம்பரத்திற் கருகேயுள்ள வடலூருக்கு வந்து சேர்ந்தனர். அப்போது அங்கே மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களும திருப்புகழ்ச் சுவாமி என்னும் குமரகுருதாச சுவாமிகளும இவரைக கண்டு அளவளாவிச் சென்றனர். இவர் பல்வேறிடங்களில் பற்பல சமயங்களில் தமது அடியார்களுக்குப் பலவகை அற்புதங்கள் செய்தருளிப் பெருஞ் சித்தராய் விளங்கினர். இதற்குள் இவருக்கு மாணவர்களும் அடியார்களும் பல்கிப் பெருகுவாராயினர். அவர்களுதவி கொண்டு வடலூர்ப் பெருவெளியில் அறச்சாலை ஒன்று கட்டுவித்து, அதற்குள் ஞானசபை ஒன்றை எண் கோண வடிவில் அமைத்தனர். அஃது இன்றும் யாவருக்கும் அற்புதங் காட்டி வருகின்றதென்பது அறிந்ததே.

இவர், பிறகு வடலூருக்கு இரண்டு மைல் தூரத்திலுள்ள மேட்டுக்குப்பத்தில் சித்திவிளாகம் என்னுங் குடிசையில் சில ஆண்டுகள் தங்கி ஸ்ரீமுகஆண்டு (1872) தைத்திங்கள், புனர்பூச நாளில் மறைந்தருளினர்.

மனுமுறைகண்ட வாசகம், சீவகாருணிய ஒழுக்கம், தொண்ட மண்டல சதக இலக்கணம், தமிழ், உண்மை நெறி, ஒழிவிலொடுக்கப் பாயிரவிருத்தி என்னுஞ் சில உரை நடை நூல்களும், ஆறு திருமுறையாக வகுத்த 6,214 பாக்களடங்கிய திருவருட்பாவும் இவர் இயற்றியருளியன வாம். இவற்றில் சைவசமயாசாரியர் நால்வர் மீதும் ஆளுடையபிள்ளையார் அருண்மணிமாலை, ஆளுடைய அரசுகள்

அருண்மணிமாலை, ஆளுடைய நம்பிகள் அருண்மணிமாலை, ஆளுடைய அடிகள் அருண்மணிமாலை என உருகப் பாடியிருக்கின்றனர். அவற்றை ஆராய்வார்க்கு அரும் பெருங் கருத்துக்கள் தோன்றுவன பலவாக அமைந்து கிடக்கின்றன.

இவர் பாக்களிற் சொற்சுவையும், பொருட்சுவையும் நிரம்பித் ததும்பிக் கற்றார் கல்லாதாரையும் உருக்கும் இயல்பையும் தன்மையுமுடையன. இவற்றினைக் கற்றோர்க்கு இவற்றின் சொல்லடுக்கும், அரும்பொருட் செறிவும் பொருந்திய பெரியார் கேண்மை போலவும், பிறைமதிபோலவும் இன்பம் பயவா நிற்கும்.

இராமலிங்கர் இணையடி வாழ்க

## இவர் பாக்களிற் சில

சீரார் சண்பைக் கவுணியர்தஞ் செய்வ மணியே திகழ்விளக்கே
தெவிட்டா துளத்திற் றித்திக்குந் தேனே யமுதே செம்மே
காரார் மிடற்றுப் பவளமலைக் கண்ணின் முளைத்த கற்பகமே
கரும்பே கனியே பொன்னிரண்டு கண்ணே கண்ணிற் கருமணியே
ஏரார் பருவ மூன்றிலுமை யினிய முலைப்பா லெடுத்தூட்டும்
இன்பக் குதலை மொழிக்குருவே யென்னுள் ளிருக்கு மெய்க்குருவே
பேரா ஞான சம்பந்தப் பெருமா னேநின் றிருப்புகழைப்
பேசு கின்றோர் மேன்மேலும் பெருஞ்செல் வத்திற் பிறங்குவரே.

தேர்ந்தவுளத் திடைமிகவுந் தித்தித் தூறுஞ்
செழுந்தேனே சொல்லரசாந் தேவே யெம்மைச்
சார்ந்துதிகழ் அப்பூதி யடிகட் கின்பந்
தந்தபெருந் தகையேயெந் தந்தை யேயுட்

கூடாந்தமதி நிறைவேயென் குருவே யெங்கள்
குலதெய்வ மேசைவக் கொழுந்தே துன்பம்
தீர்ந்தபெரு நெறித்துணையே யொப்பி லாத
செல்வமே யப்பனெனத் திகழ்கின் றோனே.

தேன்படிக்கு மமுதாமுன் றிருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதென்னை நானறியே னஃதொன்றோ
ஊன்படிக்கு முளம்படிக்கு முயிர்படிக்கு முயிர்க்குயிருந்
தான்படிக்கு மநுபவங்காண் தனிக்கருணைப் பெருந்தகையே.

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து வுயிர்கலந்து வுவட்டாம லினிப்பதுவே.

திருநெறிமெய்த் தமிழ்மறையாந் திருக்கடைக்காப் பதனாற்
றிருவுளங்காட் டியநாளிற் றெரிந்திலனிச் சிறியேன்
பெருநெறியென் னுளத்திருந்து காட்டியநா ளறிந்தேன்
பிழைபடாத் தெய்வமறை யிதுவெனப்பின் புணர்ந்தேன்
ஒருநெறியி லெனதுகரத் துயந்தளித்த நாளி
லுணராத வுளவையெலா மொருங்குணர்ந்து தெளிந்தேன்
தெருணெறிதந் தருளுமறைச் சிலம்பணிந்த பதத்தாள்
சிவகாம வல்லிமகிழ் திருநடத்தெள் ளமுதே.

மாற்றறி யாத செழும்பசும் பொன்னே
மாணிக்க மேசுடர் வண்ணக்கொ ழுந்தே
கூற்றறி யாத பெருந்தவ ருள்ளக்
கோயி லிருந்த குணப்பெருங் குன்றே

வேற்றறி யாத சிற்றம்பலக் கனியே
விச்சையில் வல்லவர் மெச்சும் விருந்தே
சாற்றறி யாதவென் சாற்றுங் களித்தாய்
தனிநட ராஜவென் சற்குரு மணியே.

கோடையிலே யிளைப்பாற்றிக கொள்ளுமவகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே யூறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீ ரிடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே யெனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற வரசேயென் னலங்கலணிந் தருளே.

உன்னைமறந் திடுவேனோ மறப்பறியேன் மறந்தால்
உயிர்விடுவேன் கணந்தரியேன் னுன்னாணை யிதுநீ
என்னைமறந் திடுவாயோ மறந்திடுவா யெனில்யான்
என்னசெய்வே னெங்குறுவே னெவர்க்குரைப்பே னெந்தாய்
அன்னையினுந் தயவுடையாய் நீமறந்தா யெனினும்
அகிலமெலா மளித்திடுநின் னருள்மறவா தென்றே
இன்னுமிகக் களித்திங்கே யிருக்கின்றேன் மறவேல்
இதுதருண மருட்ஜோதி யெனக்குவிரைந் தருளே.

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

---

# மனுமுறைகண்ட வாசகம்

## காப்பு

அன்ன வயல்சூ ழணியாரூர் வாழ்மனுவா
மன்னன் முறைகண்ட வாசகத்தைப்—பன்னுதற்கு
நேய மிகத்தா னினைப்போர்க் கருள்புழைக்கைத்
தூய முகத்தான் றுணை.

கங்கைச் சடையான்முக் கண்ணுடையா னன்பர்தம்மு
ளங்கைக் கனிபோ லமர்ந்திருந்தா—னைங்கை
முகத்தான் கணங்கட்கு முன்னின்றான் மூவாச்
சுகத்தான் பதமே துணை.

## சோழநாட்டுச் சீர்மையும் திருவாரூர்ச் சிறப்பும்

கடல்சூழ்ந்த உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலுஞ் சிறப்புடையதாய், காவேரியென்னுந் தெய்வத் தன்மையுள்ள நதியினால் எந்தக் காலத்திலுங் குறைவுபடாத நீர்வளப்பமுள்ளதாய்; வாழைச்சோலை, பலாச்சோலை, மாஞ்சோலை, தென்னஞ்சோலை, கமுகஞ்சோலை, கருப்பஞ்சோலை முதலாகிய பலனுள்ள சோலைகள் அணியணியாக ஒன்றையொன்று சூழ்ந்தோங்கப் பெற்றதாய்; அசோகு, குருக்கத்தி, சண்பகம், பாதிரி

முதலான விருக்ஷங்களால் நெருங்கப்பெற்று, வண்டுகள் பாடுகின்ற மலர்ச்சோலைகளும், தாமரைத் தடாகங்களும், அல்லி, நீலம் முதலான புட்பங்கள் மலர்கின்ற நீர் நிறைந்த ஓடைகளும், பொய்கைகளும், ஏரிகளும், குளங்களும் பலவிடங்களிலு முள்ளதாய்; செந்நெல் முதலாகிய பயிர்கள் மாருது முப்போகமும் விளைகின்ற குறைவற்ற விளைவையுடைய வயல்கள் நெருங்கியுள்ளதாய்; சிதம்பரம், பஞ்சநதம், மத்தியார்ச்சுனம், சமபுரேகசசுரம் முதலான திவ்விய க்ஷேத்திரங்கள் இடையிடையி லுள்ளதாய்; இல்லற தருமத்தில் எள்ளளவும் பிழைபடாது செல்வத்திலும் கல்வியிலும் நிறைவுள்ள குடிகளுக் கிடமானதாய்; பல வளப்பங்களுங்கொண்டு பூமிதேவிக்கு முகம்போல விளங்குகின்ற சோழதேசத்திலே, பாதாள லோகத்தைப் பார்த்திருக்கின்ற ஆழமுள்ள அகழியினுற் சூழப்பட்டு, இந்திர லோகத்தை யெட்டிப் பார்க்கின்ற உன்னதமுள்ள கோபுரங்களையுடைய மதிலும், உய்யானம், நந்தவனம், பூஞ்சோலை முதலானவைகளும், தெய்வதீர்த்தம், பிரமதீர்த்தம், வசந்தவோடை, செங்குவளையோடை முதலான நீர்நிலைகளு முள்ளதாய்; தேர்நிலைகள், யானைக்கூடங்கள், குதிரைபந்திகள், சேனையிடங்கள், ஆஸ்தான மண்டபம், அரசமண்டபம், விசித்திரமண்டபம், விநோத மண்டபம், நியாய மண்டபம், நிருத்த மண்டபம், கல்வி மண்டபம், கணக்கறி மண்டபம், பாடல் மண்டபம், பரிசன மண்டபம், சித்திர மண்டபம், தேவாசிரிய

மண்டபம், சித்திரத்தெற்றி, சிலம்பக்கூடம், ஆயுத சாலை, அமுதசாலை, அறச்சாலைகளு முள்ளதாய்; ரத்ந பீடிகைகளும், கனக மாளிகைகளும், பளிங்கு மாடங்களும, மணிப்பந்தல்களும், மகர தோரணங்களும், மங்கல கோஷங்களு முள்ள கடைவீதி, கணிகையர்வீதி, சூத்திரர்வீதி, வைசியர்வீதி, அரசர்வீதி, அந்தணர் வீதி, ஆதிசைவர்வீதி, சைவர்வீதி, வைதிகர்வீதி, தபோதன ரிருக்கை, சைவமுனிவர் மடம, உட்சமயத்தா ருறையுள் முதலான வளாகங்களை யுடையதாய்; தியாகராஜப் பெருமா னெழுந்தருளிய கமலாலயமென்னுந் திருக்கோயிலை உள்ளே யுடையதாய்; சோழராஜர்கள் பரம்பரையாக அரசாட்சி செய்வதற்குரிய ராஜதானியாய்; நிலமகள் திருமுகத்தி லிட்ட திலகம்போல் விளங்கிய திருவாரூரென்கிற நகர மொன்றுண்டு.

## மனுச்சோழன் மாண்பு

அதிமேல் மூன்று சுடர்களி லுயர முதற் சுடராகி மேன்மையடைந்த சூரிய குலத்திற் பிறந்து அரசாட்சி செய்துவந்த சோழராஜர்களில் சிறந்தவராய்; அறுபத்துநான்கு கலைகளிலும் வல்லவராய்; உயிருக் குறுதியைத் தருகின்ற நல்ல கேள்விகளை யுடையவராய்; எல்லா உயிர்களுக்கும் இதஞ்செய்கின்றவராய்; வேத மோதுதலும், யாகஞ் செய்தலும், இரப்பவர்க் கீதலும், பிரஜைகளைக் காத்தலும, ஆயுதவித்தையில்

பழகுதலும், பகைவரை அழித்தலுமென்னும் ஆறு தொழில்களும், வீரமுள்ள சேனைகளும், செல்வமுள்ள குடிகளும், மாறாத பொருள்களும், மதிநுட்பமுள்ள மந்திரியும், பகைவரா லழிக்கப்படாத கோட்டையு முடையவராய்; வழக்கை அறிவிப்பவரையும், தங்களுக்குள்ள குறைகளைச் சொல்லிக்கொள்பவரையும் இலேசிலே தமது சமுகத்துக்கு அழைப்பித்து அந்த வழக்கைத் தீர்த்தும் அக்குறைகளை முடித்துங் கொடுப்பவராய்; பாலொடு பழஞ்சேர்ந்தாற்போல முகமலர்ச்சியோடு இனிய வசனஞ் சொல்பவராய்; பின்வருவதை முன்னே அறிந்துகொள்வதும் உறவினர், அயலார், சிநேகர், பகைவர், இழிந்தோர், உயர்ந்தோர் முதலான யாவரிடத்தும் காலவேற்றுமையாலும் குணவேற்றுமையாலும் உண்டாகின்ற நன்மை தீமைகளை உள்ளபடி அறிந்துகொள்வதுமாகிய விவேகமுள்ளவராய்; அகங்காரம், காமம், கோபம், லோபம், மோகம், பொறாமை, வஞ்சகம், டம்பம், வீண்செய்கை முதலான குற்றங்களைத் தினையளவுங் கனவிலும் புரியாதவராய்; துர்க்குணங்களையுடைய சிறியோர் சேர்க்கையை மறந்தாயினும் நினையாமல், செய்வதற்கு அரிதான செய்கைகளைச் செய்து முடிக்கவல்ல நற்குணங்களையுடைய பெரியோர்களைச் சகாயமாகக் கொண்டு செய்யத்தக்க காரியங்களைத் தெரிந்து செய்தும், செய்யத்தகாத காரியங்களைத் தெரிந்து விடுத்தும், பகைவலியும் தன்வலியும் துணைவலியும் கால நிலைமையும் இட

நிலைமையு மறிந்து காரியங்களை நடத்தியும், அடுத்தவர்களது குணம் வல்லமை ஊக்கம் முதலான தன்மைகளை ஆராய்ந்து தெளிந்து அவரவர் தரங்களுக்குத் தக்க உத்தியோகங்களை அவரவர்க்குக் கொடுத்தும், பழமைபாராட்டியும், சுற்றந்தழுவியும், கண்ணோட்டம் வைத்தும், சாதியியற்கை, ஆசிரமவியற்கை, சமயவியற்கை, தேசவியற்கை, காலவியற்கை முதலான உலகியற்கைகளை அறிந்து அவ்வவற்றிற்குத் தக்கபடி ஆராய்ந்து செய்தும் நல்லொழுக்கத்துடன் நடப்பவராய்; குடிகளுக்கு அணுவளவு துன்பம் நேரிடினும் அதை மலையளவாக வெண்ணித் தமக்கு வந்ததுபோல இரக்கங்கொண்டு மனமுருகுவதனால் தாயை யொத்தவராய்; அத்துன்பத்தை விட்டு இன்பத்தை அடையத்தக்க நல்லவழியே அறியும்படி செய்விப்பதனால் தந்தையை யொத்தவராய்; அவர்களுக்கு அந்த நல்வழியைப் போதித்து அதிலே நடத்துகின்றபடியால் குருவை யொத்தவராய்; அந்தக் குடிகளுக்கு இகபர சுகத்தைக் கொடுப்பதற்கு முன்னின்று, அதுபற்றி முயற்சி செய்யும்போது வருமிடையூறுகளை நீக்குகின்றபடியாலும் அந்த ஒழுக்க வழியிலிருந்து தவறினால் அந்தக் குற்றத்துக்குத் தக்க தண்டனை விதித்து அவ்வழியில் பின்னும் நடத்துகின்றபடியாலும் தெய்வத்தை யொத்தவராய்; குடிகளுக்கு ஆபத்து நேரிடும்போது கட்டிய வஸ்திரம் அவிழ்ந்தவன் கைபோலுடனே அந்த ஆபத்திலிருந்து நீங்கும்படி கை கொடுப்பதனால் சிநேகனை

யொத்தவராய்; நல்ல காரியமிது, கெட்ட காரிய மிது வென்று, காட்டுகிறபடியால் கண்போன்றவராய்; குடிகளுக்கு அச்சம் அவலம் முதலானவை நேரிடாமல் காத்து வருதலால் உயிர் போன்றவராய்; குடிகள் தம்மை நினைக்குந்தோறும், "இப்படிப்பட்ட நற்குண நற்செய்கைகளையுடைய புண்ணிய மூர்த்தியை அரசனாகப் பெற்ற நமக்குக் குறையொன்று மில்லை" என்று களிக்கின்றபடியால் பொன் புதையலை யொத்தவராய்; கைம்மாறு வேண்டாது கொடுத்தலால் மேகத்தை யொத்தவராய்; அறிவே ஆயிரங் கண்களாகவும், கைகளே கற்பகமாகவும், கண்களே காமதேனுவாகவும், திருமுகமே சிந்தாமணியாகவும், மனோதிடமே வச்சிராயுதமாகவுங் கொண்டபடியால் இந்திரனை யொத்தவராய்; சிங்காதனமே செந்தாமரையாகவும், அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கு புருஷார்த்தங்களும் அடைதற்குரிய நான்கு மார்க்கங்களை நான்கு முகங்களாகவுங் கொண்டு அந்தந்த மார்க்கங்களில் அந்தந்தப் பொருள்களை விருத்தி பண்ணுகிறபடியால் பிரமனை யொத்தவராய்; ஆக்கினை சக்கரமே சக்கராயுதமாகவும், செங்கோலே திருமகளாகவும், சிறந்த பெரும்புகழே திருப்பாற் கடலாகவும், யுக்தமல்லாத காரியங்களை ஒழித்திருப்பதே யோக நித்திரையாகவுங் கொண்டு மண்ணுலகிலுள்ள உயிர்களைக் காத்து வானுலகிலுள்ள தேவர்களுக்கு யாகங்களால் அமுது கொடுத்து வருகின்றபடியால் திருமாலை யொத்தவராய்; சோர்வில்

லர்மை தூய்மை வாய்மையென்னு மூன்றுமே, மூன்று கண்களாகவும், துணிவுடைமையைச் சூலமாகவுங் கொண்டு பாதகங்களை யெல்லாம் நிக்கிரகஞ்செய்து வருகின்றபடியால உருத்திரமூர்த்தியை யொத்தவராய்; வாட்டத்தை நீக்கி மகிழ்ச்சி செய்கின்ற அருளுள்ளபடியால அமிர்தத்தை யொத்தவராய்; சிவபக்தியில மிகுந்தவராய், பொறுமையில பூமியை யொத்தவராய்; தருமமே உருவாகக்கொண்டு நடுநிலையிலிருந்து மனுநீதி தவறாது விளங்கிய மனுச்சோழ ரென்னும் பெயரையுடைய சக்கரவர்த்தியானவர் கலிங்கர், குலிங்கர், வங்கர, கொங்கர், அச்சியர, கொரியர், தெங்கணர, கொங்கணர, தெலுங்கர முதலான தேசத் தரசர்களெல்லாம் திறைகட்டி வணங்க உலக முழுவதையும் ஒரு குடைநிழலில வைத்துச் செங்கோல செலுத்தி அரசாட்சி செய்யுங்காலத்தில், உலகமெங்கும் புலியும பசுவும கூடிப்போய் ஒருதுறையில் நீர்குடித்துலாவியும, சிங்கமும யானையுஞ் சேர்ந்து திரிந்தும், பருந்துங் கிளியும் பழகி மகிழ்ந்தும், கூகையுங் காகமும் கூடிப் பறந்தும், பூனையு மெலியும் பொருந்தியிருந்தும், இந்தப்படி மற்றுமுள்ள விரோதமாகிய உயிர்களும் ஒன்றுக்கொன்று விரோதமில்லாமல் சிநேகஞ்செய்து வாழ்ந்திருக்கவும; மரங்கள் புல்லுகள் முதலான நடையில்லாத உயிர்களும வாடுதல் உலர்தல் உதிர்தல வெட்டுண்ணல் முதலான குறைகளில்லாமல் வளர்ந்தோங்கி வாழ்ந்திருக்கவும்; பெருங்காற்று பெருவெள்ளம் பெருமழை தீப்பற்றல் இடிவிழுதல்

முதலான உற்பாதங்கள் சிறிது மில்லாமல் சுகுணமான காற்றும் மிதமான வெள்ளமும பருவ மழையும தவறும லுண்டாயிருக்கவும்; பசிநோய் உடம்புநோய் அவமிருத்து உயிரச்ச முதலான துக்கங்களொன்றுஞ் சேராமல் சுகமே சூழ்ந்திருக்கவும்; பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்கின்ற ஜாதியாரும, பிரமசாரி கிரகஸ்தன் வானபபிரஸ்தன் சந்நியாசி என்கின்ற ஆசிரமத்தாரும், சைவர் வைணவர் வைதிகர் என்கின்ற சமயத்தாரும், தங்கள தங்களுக்குரிய ஆசாரங்களில் குறைவு படாமல் வாழ்ந்திருக்கவும; அன்னதானம், சொர்ணதானம், கோதானம், பூதானம் முதலான தானங்களும், தேவாலயங் கட்டுவித்தல், திருக்குள மெடுத்தல், செழுஞ் சோலை வைததல, தண்ணீர்ப் பந்தல வைத்தல், சத்திரங் கட்டுவிததல முதலான தருமங்களும், சாந்திராயண முதலான விரதங்களும, தியானஞ் செய்தல் ஜெபஞ்செய்தல முதலான தவங் களுந் தவறுபடாமல ஓங்கியிருக்கவும; தியாகேசப் பெருமானுக்கும் மறறுமுள்ள தெய்வங்களுக்கும் திரி கால பூசைகளும் திருப்பணிகளும் திருவிழாமுதலான சிறபபுக்களும் குறைவில்லாமல நடக்கவும அவரது ஆக்கினையே செய்வித்து வநதது.

அவரது ஒப்புயர்வில்லா அரசாட்சியிலே பூவே பறிபடுவது; புனலே சிறைபடுவது ; காற்றே அலைபடு வது; கல்லே கடினமுடையது; மாவே வடுபடுவது; வாழையே குலைபடுவது; வண்டே மதுவுண்பது; பந்தே அடிபடுவது ; பரியே கட்டுண்பது; நெல்லே குத்துண்

பது; நெற்கதிரே போர்படுவது; வயலே வளைபடுவது; மாதரிடையே நுறைபடுவது ; தரித்திரமே தரித்திரப் படுவது; துககமே துககபபடுவது; பொய்யே பொய் படுவது; இவையல்லாமல பொருள் பறிக்கப்படுவோரும், சிறைசசாலையில வைக்கபபடுவோரும், பகைவரால அலைககபபடுவோரும, கடின மனமுள்ளவர்களும, வடுப்படுவோரும், குலைபடுவோரும், மதுவுண்போரும், அடிபடுவோரும, குத்துண்போரும, போரிற படுவோரும், கட்டுண்போரும, வளைபடுவோரும், குறைபடுவோரும, தரிததிரபபடுவோரும், துக்கபபடுவோரும், பொய்ப்படுவோரும் வேறே யில்லாமையால அநநாட்டில மேன்மையே விளங்கி யிருநதது.

## பிள்ளைப்பேறுகருதிப் பெருநோன்பாற்றல்

இநதப பிரகாரமாக மநதிரி முதலான அங்கங்களுடன் அரசாண்டிருநத அபமனுசசோழனென்னும் சககரவர்ததியானவர் புத்திரபபேறில்லாமல் மனம வருநதி, அப்பேறறைப் பெறும்படி அறுபது வருஷ காலமாக அநேக தானங்களும், தருமங்களும், யாகங்களும், விரதங்களுஞ் செய்தும், புத்திரோற்பத்தி யில்லாமையால, "புததிரசசெலவம் பெறுதவர் பொருட்செல்வம் பெற்றும் பயனிலலையே; புத்திரன் போல் நமக்கு இந்த அரசசசெல்வம் இமமை மறுமை யின்பங்களைக் கொடாதே; சநததியிலலாவிட்டால் பிற் காலத்தில் கண்களில்லாத முகமும் சூரியனில்லாத பக

னும் போல அரசனில்லாது இவ்வுலகந் தலைதடுமாறிப் போமே; ஆதலால் இனிப் புத்திரனைப் பெற்றுக்கொள்வதற்குத் தக்க முயற்சி நமது ஆண்டவனாகிய தியாகராஜப் பெருமானை வழிபடுவதேயல்லது வேறொன்றுமில்லை; ஆனால், மோக்ஷப்பேற்றைக் குறித்து நிஷ்காமியமாக இதுகாறும் நாளும் வழிபட்டு வந்த நாம் இப்போது புத்திரப்பேற்றைக் குறித்துக் காமியமாக நமதாண்டவனை வழிபடுவது தகுதியல்லவாயினும், 'தீராக்குறைக்குத் தெய்வமே முடிவு' என்கிறபடி எவ்விதத்திலும் தீராத புத்திரனில்லாக் குறையைச் சிவபெருமானது திருவருளாலே தான் தீர்த்துக் கொள்ளல் வேண்டும்" என்று ஆலோசித்துத் துணிவு கொண்டு, தமது மனைவியாருடன் ஆகம விதிப்படிக் கமலாலயமென்னும் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பயபக்தியுடன் பூங்கோயிலைப் பஞ்சாவரண வலமுஞ் செய்து உட்புகுந்து, தியாகராஜப் பெருமானது சந்நிதிக்கெதிரே அஷ்டாங்க பஞ்சாங்கமாக நமஸ்கரித்து, வணங்கிய முடியும், மலர்ந்த முகமும், நீர் பொழிந்த கண்ணும், துதிமருவிய நாவும், கூப்பிய கையும், புளகமுற்ற உடம்புங்கொண்டு நின்று, "எம்பெருமானே! புத்திரப்பேறில்லாத குறையைத் தீர்த்தருளல் வேண்டும்" என்று விண்ணப்பித்துப் பலவிதமாகத் தோத்திரஞ் செய்து தமது அரண்மனைக்குச் செல்வர். இந்தப் பிரகாரம் நாள்தோறும் போய் வழிபட்டுப் பிரார்த்தித்துக் கொண்டே வந்தார்.

## பிள்ளையைப் பெற்றுப் பெருவிழாச்செய்தல்

அவர்செய்யும் வழிபாட்டுக்கும் வந்தனைக்கும் இரங்கித் தியாகராஜப்பெருமான் புத்திரப்பேறுண்டாகும்படி அநுக்கிரகஞ் செய்ய, அந்த அநுக்கிரகத்தால் மகாராஜனுக்கு மகிழ்ச்சி யுண்டாகும்படி வலம்புரிச்சங்கு விலையுயர்ந்த வெண்முத்தினைக் கருப்பங்கொண்டது போலத் தேவியார் தமது திருவயிற்றிற் கருப்பங்கொண்டு, பத்து மாதமுஞ் சென்று நல்ல சுபதினத்தில் தர்மதேவதை தாண்டவமாடவும், வானத்தார் மலர்சொரிந்து வாழ்த்தவும், வையகத்தார் மனங்களிக்கவும், அதிதியானவள் ஆதித்தனைப் பெற்றது போலவும், பவளக்கொடி மணமுள்ள மலரைப் பெற்றதுபோலவும், எவ்வெவர்களும் அதிசயிக்கத்தக்க சர்வ லட்சணங்களும் நிறைந்த வடிவுள்ள ஒரு புத்திரனைப் பெற்றாள்.

புத்திரன் பிறந்த சந்தோஷமான சமாசாரத்தைப் பாங்கிகள் அதிசீக்கிரமாக வந்து தம்மை மறந்த மனக்களிப்புள்ளவர்களாக எதிர்நின்று, "ஆண்டவனே! எங்கள் தலைவியார் திருவயிற்றிலிருந்து தேவரீர் புகழே வடிவாகவும், புண்ணியமே உயிராகவுங்கொண்டு, பொன்னுலகத்தைக் காக்கின்ற புரந்தரனும் நாணமடையப் பூவுலகத்தைக் காக்கத்தக்க வல்லமையுள்ள புத்திரசிகாமணி உதயஞ் செய்தது" என்று விண்ணப்பஞ் செய்யக் கேட்ட மனுச் சக்கரவர்த்தியானவர் தூரதேசத்

திற்போயிருந்த கப்பல் துறைமுகத்தில் வந்ததென்று சொல்லக் கேட்ட வர்த்தகனைப் போலவும், கூடிப் பிரிந்த மங்கையின் குரலோசையைக் கேட்ட நாயகனைப்போலவும், தாகங்கொண்டு தவிக்குங் காலத்தில் சமீபத்தே தண்ணீருண்டென்று சொல்லக் கேட்ட தேச சஞ்சாரியைப்போலவும், மனங்குளிர்ந்து உடல் பூரித்து அளவிடப்படாத களிப்புடையவராய் அந்தப் பாங்கிகளுக்கு விலையுயர்ந்த ஆடையாபரணங்களை வெறுப்படையும்படி பரிசு கொடுத்துத் தாம் நீராடி நியமங்கள் முடித்து, வேதவித்துக்களாகிய பிராமணர்களுக்கு வித்தியாதானம் சொர்ணதானம் கன்னிகாதானம் அசுவதானம் கஜதானம் பூதானம் கோதான முதலான தானங்களைக் கொடுத்து, புத்திரன் பிறந்தநாள் தொட்டுப் பன்னிரண்டு வருஷ மட்டுங் குடிகள் வரிகொடாமல் சர்வமானியமாகத் தாமே அநுபவித்துக்கொள்ளவும், திறை கட்டி வரும் அரசர்கள் ஏழு வருஷ மட்டும் அந்தத் திறைகளைக் கட்டாமல் தாங்களே எடுத்துக்கொள்ளவும், சிறைச்சாலையிலிருந்து சத்துருக்களை விட்டுவிடவும், பொக்கிஷசாலையைத் திறந்துவிட்டு நகரிலும் நாட்டிலுமுள்ளோர் யாவரும் தங்கள் தங்களுக்கு வேண்டிய மட்டில் ஏழுநாள் வரையில் எடுத்துக்கொண்டு போகவும், தேவாலயங்களிலெல்லாம் புதிதாகத் திருப்பணிகளும், திருவிழா முதலான சிறப்புக்களும் செய்விக்கவுங் கட்டளையிட்டு, பின்னர்த் தான் தேடி வைத்த திரவியத்தைத் தெரியக் கண்டுகொண்டவனைப்போலத் திரை மறைவிலிருந்த

அசசெல்வக் குழந்தையை வெளிப்படக் கண்டு மன மகிழ்ச்சி யடைந்து, இளஞ்சூரியோதயம் போல இந்தப் புத்திரன் இவ்விடத்தில் உதயஞ் செய்தது சிவாநுக்கிரகமேயல்லது வேறல்லவென்று வியப்படைந்து, சோதிட சாத்திரங்களில் வல்லமையுள்ள பெரியோர்களைக் கொண்டு ஒப்பற்ற செல்வங் கல்வி வெற்றி முதலிய அதிர்ஷ்டங்கள் நடனஞ் செய்கின்ற சாதக பலனைக் குறித்துத் தியாகராஜப் பெருமானது திருவருளால் வந்தது பற்றி அக்கடவுளின் திருப்பெயர் கொண்டு வீதி விடங்கனென்னும் நாமகரணமும், அன்னப்பிராசனம் சௌளம் முதலான சடங்குகளும் மிகுந்த விபவமாகவும் வேதமுகதமாகவும் அதது செய்யத் தக்க பருவங்களிற் செய்வித்தும், அந்தப் புதல்வனை வாசநீராட்டுவித்தும், இனிய உணவுகளை யூட்டுவித்தும், பொன்னாலும் இரத்தினங்களாலுஞ் செய்த பூஷணங்களைப் பூட்டுவித்தும், மார்மேலுந் தோள்மேலும் மடிமேலும் வைத்து வைத்து முத்தாடியும், திருந்தாத குதலைச் சொற்களைக் கேட்டு மகிழ்ந்தும், கற்பக விருக்ஷத்தின் கனியைக் கேட்பினும் அந்தக் கணமே தருவித்துக் கொடுத்தும், சிறிய விளையாடல்களைச் செய்யக் கண்டுகளித்தும், கற்புள்ளவள் கணவனை உபசரிப்பது போல உபசரித்தும், படிப்பில் ஆசையை வைத்தவர் பாடத்தைப் பாராட்டுவது போலப் பாராட்டியும், தன்னை உயர்ந்தவனுக்க நினைத்தவன் தருமத்தை வளர்ப்பதுபோல வளர்த்தும், முன் சிறுமையடைந்து பின் செல்வத்தைப் பெற்றவன் அச்

செல்வத்தைப் பாதுகாப்பது போலப் பாதுகாத்தும் புத்திர சம்பத்தினால் வரும் பயனை யுடைந்தவரா யிருந்தார்.

## வீதி விடங்கற்கு வித்தை கற்பித்தல்

இந்தப்படி இணையில்லாத செல்வப் பெருக்கத்தில் வளர்க்க வாழை யிளங்குருத்துப்போல வளர்ந்து வருகின்ற புத்திரனுக்கு ஐந்தாம் வயதில் அட்சராப்பியாசம் செய்வித்து, ஏழாம் வயதில் சகல தேசத்தரசர்களுக்குந் தெரிவித்து, நகரை யலங்காரஞ் செய்வித்து, பத்மராகம் கோமேதகம் வயிரம் வைடூரியம் முதலான இரத்தினகசிதமான கலியாண மண்டபத்தில் வேத வேதாங்கங்களில் வல்லவரான பிராமணர்களும், சபாநுக்கிரக சாமர்த்தியமுள்ள தபோதனர்களும் ஆசீர்வதிக்கவும், மன்னர் மண்டலீகர் பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர் அமைச்சர் உறவினர் சிநேகர் முதலானவர் கண்டு களிக்கவும், சுமங்கலப் பெண்கள் சோபனம் பாடவும், பேரி சங்கம் மிருதங்கம் முதலான மங்கல வாத்தியங்கள் முழங்கவும், நல்ல சுபமுகூர்த்தத்தில் வேதவிதிப் பிரகாரம் உபநயன கலியாணமும், சகல வேதாகம சாஸ்திரங்களிலும் வல்லமையுள்ள ஆசாரியரைக் கொண்டு வித்தியாரம்பமுஞ் செய்வித்தார். சில நாட்களுக்குள்ளே வீதிவிடங்க னென்னும் அப்புத்திரனானவன் வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள், ஸ்மிருதிகள், இதி

காசங்கள் முதலான கலைகளில் ஆசிரியனைப் பார்க்கி லும் எண்மடங்கு வல்லமை யுள்ளவனாகி; யானையேற் றம், குதிரையேற்றம், ரதாரோகணம், வில்வித்தை வாள்வித்தை, இந்திரஜாலம், மகேந்திரஜாலம், முத லான சமஸ்த வித்தைகளையுங் குறைவறக் கற்றுக் கொண்டு; ஆதிசேடனைப்போல அறிவும், காமனைப் போல கட்டழகும், ஆளிசிங்கம்போல ஆண்மையும், மதயானை போல நடையும், மார்த்தாண்டன்போல் வாய்மையும், கற்பகவிருட்சம்போல கொடையு முடையவனாய்; சிவபக்தி, சீவகாருணியம், பொறு மை, அன்பு, ஆசாரம், ஒழுக்கம், ஊக்கம், சாந்தம், சற்சனநேயம் முதலான நற்குணங்களுடன் உயிர்க்கு முடிவு நேரிடுமாளுலும் உண்மையே பேசுவதும், உறுதியே சொல்லுவதும், இனசொல்லே கூறுவதும், இதமே செய்வதும், பயனுள்ள காரியங்களையே பாராட்டுவதும், பிராமணர் தவத்தோர் முதலான பெரியோர்களைக் கண்டால் அன்போடும் அச்சத் தோடும் எதிர்கொண்டு தலையால் வணங்கி வாயால் வாழ்த்துவதுமாகிய நற்செய்கைகளை யுடையவனாய்; மாதா பிதாக்களது மனக்குறிப்பறிந்து அவரிசசை யின்வழி நடந்து மகிழும்படி செய்து; இளமைப் பருவத்திற்றுனே எல்லாம் அறிந்தவனென்று கண் டோர் கொண்டாடவும் கேட்டோர் மனங்களிக்கவும் இளவரசு பட்டத்துக்குத் தகுந்த பருவமடைந் திருந்தான்.

## அரசிளங்குமரன் ஆலயம்போதற் கநுமதி பெறல்

அப்படியிருந்த நாட்களில் ஒருநாள் அவ்வீதி விடங்கனென்னும் இராஜபுத்திரன் தன் பருவத்துக் கொத்த இராஜகுமாரர்களும மந்திரிகுமாரர்களும் சூழ்ந்துவர, தன் பிதாவாகிய மனுசசோழருடைய சமுகத்துக்கு வந்து, பிதாவினது திருவடிகளுக்கு அஷ்டாங்க பஞ்சாங்கமாகத் தண்டனிட்டெழுந்து தூரொதுக்கியும் உடம்பொடுக்கியும் கைகட்டியும் வாய்புதைத்தும் எதிரே நிற்க, அப்போது மனுச சக்கரவர்த்தியானவர் நெடுநாள் பிரிந்திருந்த கன்றினைக் கண்ட பசுவைப்போலவும் இடந்தெரியாதிருந்த புதையலை எதிர்படக் கண்டவனைப்போலவும கண்கள் களிகூரக் கண்டு, உள்ளமும் உடலும் பூரித்துத் தமது இரண்டு கைகளாலுந தழுவி அணைத்தெடுத்து, மடிமேல் வைத்து, உச்சி மோந்து, முதுகைத் தடவி, "எனக்கு நெடுநாளாக இருந்த மனக்குறையைத் தவிர்த்து இம்மை மறுமைப பயனைக் கொடுக்கும்படி பிறந்த அருமையாகிய அமிர்தத்தை யொத்த என் புத்திரனே! உன் மனதில ஏதோவொரு எண்ண முண்டானதாகத் தோன்றுகின்றது; அவ்வெண்ணம் இன்னதென்று வெளிப்படுத்தவேண்டும்" என்று கேட்டார். அது கேட்ட வீதிவிடங்கன் "மூன்றுல கத்திலுங் கேடில்லாத கீர்த்தியை நாட்டிய பெருந்

தன்மையுடைய தேவரீரைப் பிதாவாகப் பெற்ற அடியேனுக்கு எண்ணங் கொள்வதற்கு என்ன குறையிருக்கிறது? நமது குலதெய்வமாயும், இஷ்ட தெய்வமாயும் கமலாலயத்தி லெழுந்தருளிய தியாகராஜப் பெருமானைத் தரிசித்து வரவேண்டு மென்னும் எண்ணமொன்று மாத்திர முண்டு. இவ்வெண்ணம் இடையூறில்லாமல் நிறைவேறும்படி தேவரீர் திருவுள்ளங் கொள்ளவேண்டும்'' என்று விண்ணப்பஞ் செய்தான்.

அதுகேட்ட அரசனவர், "சர்வ வல்லமையுள்ள சுயம்புவாயும், கருணைக் கடலாகிய கடவுளாயும், பிள்ளைக்கலி தீர்த்த பெருமானாயும் விளங்கிய தியாகராஜப் பெருமானைச் சேவிப்பதற்குத் தடையுண்டோ? தனக்கிணையில்லாத் தருமமூர்த்தியைத் தரிசிக்கவேண்டு மானால் தடுப்பவர் யார்? புண்ணியந் தேடப் புத்திரன் தொடங்கினால், தந்தை தடைசெய்வானோ? நானே கற்பிக்கவேண்டிய நல்விஷயத்தை நீயே தெரிந்து செய்யத் தொடங்குவது நான் பூர்வஞ் செய்த புண்ணியமல்லவோ? பிள்ளைதேடும் புண்ணியம் பிதாவுக்கு முண்டென்று பெரியோர் சொல்வது பிழைபடா தென்பதை நானறியேனோ? நெல் முதலான பயிருக்கு நீர் விடுவோரையும், குருடர்க்குக் கோல் கொடுப்போரையும், இரவில் வந்தவர்க்கு இடங் கொடுப்போரையும், அஞ்சி வந்தடுத்தவர்க்கு அபயங் கொடுப்போரையும், தாகங் கொண்டோர்க்குத் தண்ணீர் கொடுப்போரையும், பசிகொண்டு பரிதபிப்போர்க்கு அன்னங் கொடுப்போரையும், சேற்றில்

விழுந்து திகைக்கின்றோர்க்குக் கைகொடுப்போரை யும், ஆற்று வெள்ளத்தில் அகப்பட்டோரைக் கரை யேற்றுவோரையும், சத்திரங் கட்டிக தருமஞ் செய் வோரையும் தடுத்தாலும் குருதரிசனம் சிவஞானி தரிசனம் சிவதரிசனம் செய்வோரை ஒரு காலுந் தடுக்கபபடாது; ஆதலால் புத்திரனே! உனக்கு வேண்டிய சிறப்புக்களுடன் சுகமாகப போய் ஆண்ட வனைத் தரிசனஞ் செய்து சிவஞானமுந தீர்க்காயுளும் பெற்று வருவாய்'' என்று கட்டளையிட்டார்.

அந்தக் கட்டளையை அன்புடன் தலைமேற் கொண்டு வணங்கி விடை பெற்று, மாதாவினிடத்திற் போய்ப் பக்தியுடனே பணிந்தெழுநது கைகூப்பி நின்று, அநேக விரதங்களை அனுஷ்டித்து அடியே னைப் பெற்றெடுத்து, கண்களை இமைகள காப்பன போற் காத்து வளர்த்த தாயே! அடியேன் தெய்வ சிகாமணியாகிய தியாகராஜப் பெருமானைத் தரிசனஞ் செய்ய வேண்டும்; இதற்குத் தநதையாருடைய சம்ம தம் பெற்றுக்கொண்டேன; இனி உமது உள்ளமும் ஒருமித் தருளவேண்டுமெ'' என்று குறையிரநது கொண்டான். அதுகேட்ட தாயானவள உருக்கத் துடன் மனமகிழ்ச்சிகொண்டு, முகமலாநது, முலைகளி லிருந்து பால் பீறிடவும் கண்களில் ஆசை நீர் அரும்பவும் தன்னருமைத் திருமகனை நோக்கி, ''இறைவனையும்* என்னையும் நற்கதியிற் சேர்க்க வந்த நாயகமே! நாங்கள் முன்செய்த தவப் பயனாலே கிடைத்த முத்தமே! எங்கள் வருத்த

* இறைவன் - மனுச்சோழன்.

மெலாந் தீர்க்க வந்த மாணிக்கமே! கல்வியிற் சிறந்த கண்மணியே! சுந்தரவடிவமுள்ள சூரியனே! சாந்த குணமுள்ள சந்திரனே! பேரறிவுடைய பிள்ளாய்! நெடுநாளாகப் பலவிதமான தருமம், தானம், தவம் முதலியவற்றைச் செய்தும் பெற்றுக்கொள்ளாமல், தியாகேசர் சந்நிதிக்கு நடந்து அந்தக் கடவுளின் அநுக்கிரகத்தால் உன்னைப் பெற்றுக்கொண்டோம். அப்படிப்பட்ட பெருங்கருணையுள்ள பெருமானை நீ தரிசிக்கவேண்டுவது அடுத்த காரியந்தான்; ஆதலால், நீ போய்க் கண்குளிரக் கண்டு தரிசித்து, உப நயன முதலான மங்கலக் கோலங்கண்ட எனது கண்கள் மணக்கோலமுங் கண்டு களிப்படைய வேண்டுமென்று எண்ணியிருக்கிற என்னெண்ணம் விரைவில் முடியும் படி ஒரு வரத்தையும் பெற்றுவரக் கடவாய்'' என்று விடை கொடுத்தாள்.

## தானை புடைசூழத் தலைவன் வெளிப்போதல்

அவ்விடையைப் பெற்றுக்கொண்ட வீதிவிடங்கன், தன் அரண்மனைக்கு வந்து தயிலம், சந்தனம், கஸ்தூரி, பால், தயிர், நெய், பழம் முதலான அபிஷேக திரவியங்களும்; மாணிக்கமாலை, மரகதமாலை, முத்து மாலை, பவளமாலை, பொன்மாலை, வச்சிரமுடி இரத்தின குண்டலம் முதலான திருவாபரணங்களும்; கொன்றை மாலை, தும்பைமாலை, வில்வமாலை, சண்பகமாலை, முல்லைமாலை, மல்லிகைமாலை முதலான திருமாலை

களும்; வெண்பட்டு, கோசிகப்பட்டு, பீதாம்பரம் முதலான திருவாடைகளும்; மற்றும் வேண்டிய திரவியங்களெல்லாமும் தியாகேசர் கோவிலுக்குக் காரியக்காரர்கள் வசததில் முன்னதாக அனுப்பி வித்து; பின்பு தான் மஞ்சனச சாலையில் வாச நீராடி, வெண்பட்டுடுத்துச் சிவத்தியானத்துடன் திருநீறு தரித்துத திலகமணிநது; கிரீடம், குண்டலம். கண்டசரம், வாகுவலயம், பதககம, சரப்பளி, கடகம், ஆழி, பொறபூணு நூல, பொன்னரைஞாண், உதரபநதனம், வீரகண்டை முதலான பூஷணங்களும் பூண்டு, ஜோதிமயமான பீதாம்பர வுத்தரியம் மேலே தரிதது; நவரத்தின மிழைத்தவொரு பொற்பிரம் பைக் கையிற பிடித்துக்கொண்டு, அரண்மனை வாசலை விட்டு வெளியே புறபபட்டு, வேதபாரகராகியவேதியர் முதலானவாகளுக்குப பலபல தானங்கள செய்து; மனோவேகமும் பின்னடையத்தக்க வேகமான நடையுள்ள நான்கு குதிரை கட்டிய மகா மேருவைப்போல உயர்வுள்ள ரத்தின கசிதமாகிய ரதத்தின்பேரில் ஆரோகணித்துக் கொண்டனன். அப்போது, வேத வேதியர், மீமாம்சகர், தார்க்கிகர், வையாகரணிகள், சோதிடர், ஆயுள்வேதியர், வேதாந்தியர், ஆகமசித்தாந்திகள், புராணிகர், சமயசாத்திரப் பிரசங்கிகள் முதலான வித்தியா வல்லவர்களும்; மந்திரி, பிரதானி, தானைபதி முதலான காரியத்தலைவர்களும்; உறவினர், புரோகிதர் முதலானவர்களும்; மன்னர், மண்டலீகர், பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர் முத

லான அரசர்களுந் தங்கள் தங்கள் பெருமைக்குத் தக்க வாகனங்களிலேறிச் சூழ்ந்து சென்றனர். நெற்றிப் பட்டம கிம்புரி முதலான அணிகள் சூட்டி அலங்கரிக்கபபெற்ற மதயானைகள் கர்ச்சித்துச் சென்றன; முத்துக்குஞ்சம, முத்துவடம, முத்துவாளி, கிண்கிணிமாலை, பொற்கலனை முதலான அணிகளால அலங்கரிக்கபபெற்ற வலியுள்ள குதிரைகள் கனைத்துசசென்றன; வீரபட்டம, வீரசங்கிலி, வீரகண்டை முதலான அணிகளையணிந்த வீரர்கள் ஆரவாரித்துச சென்றனர்; மங்கலப்பாடகர் பாடினர்; வந்திபாடகர் புகழ்ந்தனர்; மங்கல மங்கையர் வாழ்த்தினர்; நாடகக்கணிகையர் நடனஞ்செய்தனர். பட்டாங்கு படிக்கவும், கட்டியங் கூறவும, அஷ்ட மங்கலங்களை யேந்திச சுமங்கலிகள் சூழ்ந்து போகவும், வெள்ளை வட்டக் குடைகள் நிழற்றவும, வெண்சாமரை வீசவும, மயிர குஞ்சங்கள் சுழற்றவும, பூந்தட்டேந்தவும்; பேரிகை, தம்பட்டம், தக்கை, உடுக்கை, சச்சரி, தாளம், மத்தளம், தாரை, சின்னம, மல்லரி, சங்கம், எக்காளம், ருத்திரவீணை, நாரதவீணை, தும்புருவீணை, இராவணஹஸ்தம், கின்னரி, புல்லாங்குழல முதலான தோற்கருவி, துளைக்கருவி, கஞ்சககருவி, மிடற்றுக்கருவி, நரம்புக்கருவி என்கின்ற ஐவகையானும் முப்பத்திரண்டு வாத்தியங்களு முழங்கின; தேரிற்கட்டிய மணிகளிலோசை கணீர் கணீரென்று சத்தித்தன; ஆடுகின்ற மாதரது அடிகளிற் பூண்ட சிலம்போசை கலீர் கலீரென்று ஒலித்தன; சகல மங்கல சம்பிரம ஆடம்பரங்களுடன் மாளிகை

களின் வாயில்கள்தோறும மலர்ப்பந்தரிட்டு ; மணி மாலைகள் தூக்கி; வாழை கமுகுகள் நாட்டி; மெழுகிக் கோலமிட்ட திண்ணைகளிற பூரணகலசங்களும், பொற் பாவைகளும், முளைப்பாலிகைகளும், முகவிளக்கு களும், வெண்சாமரைகளும, இணைக்கயல்களும், கண் ணாடிகளும், பூந்தட்டுகளும், மங்கலமாக வைத்து அலங்கரித்து; பரிமள திரவியங்களைக் கலந்த பனிநீர் தெளித்தது தூளி எழும்பாமல் தளஞ் செய்தும், ஆடல்பாடல் முதலான விநோதங்களைக் கொண்டும் வீதி விளங்கியது. அவ்வீதியினிடத்துத் தேவேந்தி ரன் தியாகராஜ தரிசனஞ் செய்யப்போவதுபோல அவ் வீதிவிடங்க னென்னும் இராஜகுமாரன் தேரை நடத் தினன்.

## மைந்தன் எழில்கண்டு மங்கையர் மையல்கொளல்

அப்பொழுது இரதி, இந்திராணி முதலான தேவ மாதர்களை யொத்த அவ்வீதியிலுள்ள ஸ்திரீ ஜனங்க ளெல்லாம் அப்புத்திரனைக் கண்டு, மணமுள்ள மலரை வண்டுகள் சூழ்ந்ததுபோலவும், இனிய சுவையுள்ள தேனை ஈக்கள் சுற்றியதுபோலவுஞ் சூழ்ந்துகொண் டனர். அம்மாதர் கலை நெகிழ்ந்தும, கைவளை சோர்ந் தும், கண்ணீர் ததும்பியும், குழலவிழ்ந்தும், கொங் கைகள் விம்மியும், பசலைபோர்த்தும், மையலடைந்த மனத்தவர்களாய், "கரும்பை வில்லாகவுடைய காம னைப் பார்க்கிலும் எண்மடங்கு அழகுடைய இள

வரசே! கன்னிகைப் பருவமுள்ளவளே நான், என் மேற் கடைக்கண் செய்யாயோ" என்றும், "எழுதப் படாத சுந்தரவடிவமுள்ள இளங்காளையே! புருஷர் முகம்பாராத பூவையே நான், என்னைப் புணர்ந்து போகாயோ" என்றும், "கண்களுக்கு நிறைந்த கட்டழகனே! காவலழியாத காரிகையே நான், என்னைக் கலந்து போகாயோ" என்றும், "சுபலக்ஷணங்கள் நிறைந்த சுந்தரவடிவனே! கலியாணமில்லாத கன்னிகையே நான், என்மேற் கருணை செய்யாயோ" என்றும், "மனுசக்கரவர்த்தி பெற்ற மதயானையே! சிறு வயதுள்ளவளே நான், என்னைத் திரும்பிப் பாராயோ" என்றும், "அதிசயிக்கத்தக்க அழகனே! நிறையழியாத நேரிழையே நான், சற்றே நின்று போகாயோ" என்றும், "இந்த இராஜபுத்திரனுக்கு வீதிவிடங்கனென்று பெயரிட்ட பெரியோர்க்கு அனந்ததரம் அடிக்கடி தெண்டனிட்டாலும் போதாதே" என்றும் தம்மிற்றாமே பேசி மனதுருகித் தம்மை மறந்தார்கள். சில மாதரோ, "வாசமுள்ள தயிலம் பூசி மணமுள்ள மலர்மாலை சூழ்ந்து வாழைப்பூவிதழ் போல வகிர்ந்து குயில் முகம்போல முடியிட்டுப் பளிங்குச சிமிழுக்குள் ளிருந்து தோன்றுகின்ற பருத்த நீலக்கல்போல் தாவள்யமான தலைச்சாத்துக்குள்ளிருந்து சிறுகித் தோன்றுகின்ற குடுமியும், பார்க்கின்றவரது பார்வைக்கு இன்பந் தருகின்ற தோற்றமும், மாறாத மலர்ச்சியும், மனோரஞ்சிதமான அழகும், குளிர்ச்சியும் ஒளியும் பெற்றுச் செந்தாமரை மலர்போல் விளங்கும் முகமும்,

கருமை மிகுந்து செம்மை கலந்து காருண்யந ததும்பி இங்கித மறிந்து சிறிதே யிமைத்து மனோரம்மிய மாய் மலர் போன்று நீண்ட கண்களும், ஒளிகொண்டு உயர்ந்து நீண்ட நாசியும், குண்டலமணிநது நீண்டு அகன்ற செவியும், திரிபுண்டரந தரித்துத் திலகந் தீட்டி அழகு பெறறு அகன்று உயர்ந்த நெற்றியும், பவளம்போற் சிவந்து திரண்ட உதடும், முலலைபரும் புகள் போலச சிறுத்து நெருங்கி ஒளிவீசும் பற களும், குறுகி மென்மையாகிச சிவப்பேறிய நாவும், கண்டசர முதலான ஆபரணங்களை பணிநது வலம் புரிச் சங்குபோல் திரண்ட கண்டமும, மததளம் போலத் திரண்டு மநதரமலைபோல உயர்நது கண் டோர் கண்களையுங் கருத்தையுங் கடடுகின்ற புகநத மாலையணிநத வெற்றியுள்ள தோளும், வீணைத் தண்டு போல நீண்டு தாழ்நது கடகமணிநத கையும், தாமரை மலர்போற் சிவநது மிருதுவாகி மழைபோற சொரி ணம் பொழிகின்ற முன் கையும, விளக்க மிகுந்து பதக்க முதலானவை அணிநது களப கஸ்தூரிகள் பூசிக் கண்ணாடிபோல அகன்று மலைபோல உயர்நத மாரபும்,சிறுத்துயர்நத வயிறும்,ஆழ்நது அழகுபெற்ற உந்தியும்,யானைத்துதிக்கைபோன்று திரண்ட தொடை யும், வட்டந் தோன்றாது தசைகொண்டு செழிப்புள்ள முழங்காலும், திரண்டு நீண்ட கணைக்காலும், தாமரை மலர்போன்று வீரகண்டையணிநத கால்களும், வரம்பு கடவாத வடிப்பமுள்ள வடிவமுடைய இநத இராஜ புத்திரனைக் கண்டு களிப்பதற்கு நானென்ன தவஞ்

செய்தேனோ!'' என்றும், ''இராஜ சிங்கமாகிய இந்தக் குமாரனைச் சிருஷ்டித்தவன் பிரமதேவனோ யானால், இவனழகுக்குத் தக்க மாதிரியை இனி எங்கே உண்டு பண்ணுவானோ!'' என்றும, ''இவ்வழகனது வடிவைக் கண்டால் உருகாத கருங்கல்லும் உருகுமானால் பேதைமையுள்ள பெண்கள் மனம் உருகாதிருக்குமோ!'' என்றும், ''இவனது பூரண சந்திர விம்பம்போன்ற புன்னகை ஒன்றுமே மூன்றுலகத்திலுமுள்ள பெண்களுக்கெல்லாம் பித்தேற்றுமே!'' என்றும் பலவிதமாகத் தனித்தனிச் சொல்லி மோகங்கொண்டு நின்றார்கள்.

## அரசிளஞ் சேயை ஆடவர் போற்றல்

அவ்வீதியிலுள்ள வாலிப வார்த்திபர் முதலான புருஷ ஜனங்களெல்லாங் கண்டு, ''ஆ! ஆ!! இந்தப் புத்திரனே இராஜபுத்திரன், இவனுக்குமுன் மற்ற இராஜபுத்திரரெல்லாம இராக்ஷச புத்திரரே'' என்றும்; ''இவன வடிவே வடிவு, இவன் வடிவுக்குமுன் மற்றவர் வடிவெல்லாம பரவடிவே'' என்றும்; ''இவன் கற்ற வித்தையே வித்தை, இவனுக்குமுன் மற்றவர் கற்ற வித்தை யெல்லாம மாயவித்தையே'' என்றும; ''இவன் குணமே குணம், இவனுக்குமுன் மற்றவர் குணமெல்லாம் வில்லின் குணமே'' என்றும்; ''இவனே இளவரசு, இவனுக்குமுன் மற்ற இளவரசெல்லாம் பூவரசே'' என்றும்; ''இவனே சீமான், இவனுக்குமுன்

மற்ற சீமான்களெல்லாங் கலைமான்களே" என்றும் பேசி வியந்தோர் பலர். "இவன் வீரமே வீரம், இவன் வீரத்துக்குமுன் மற்றவர் வீரமெல்லாஞ் சவ்வீரமே" என்றும்; "இவன் யௌவனமே யௌவனம், இவன் யௌவனத்துக்குமுன் மற்றவர் யௌவனமெல்லாம் வெவ்வனமே" என்றும்; "இவன் பாக்கியமே பாக்கியம், மற்றவர் பாக்கியமெல்லாம் நிரபபாக்கியமே" என்றும்; "இவனைப் பெற்றவரே பெற்றவர்; மற்றவரெல்லாம் பெண் பெற்றவரே" என்றும் பேசினோர் சிலர். "இந்தக் குணரத்தினமான புதல்வனைப் பெறுதற்கு நமது மகாராஜனும் அவரது மனைவியாரும் என்ன நோன்பு நோற்றாரோ" என்றும்; "வெற்றியையுடைய வீரசிங்கம்போன்ற இந்தப் புத்திரனது திருமுக மண்டலத்தில் சாந்தந் ததும்புகின்றதே" என்றும்; "இவனது கண்கள் கருணை பொழிகின்றனவே" என்றும்; "இவனது வடிவில் அழகு ஒழுகுகின்றதே" என்றும்; "நெடுநாளாகக் கண்டுகளிக்க வேண்டுமென்று எண்ணி எதிர்பார்த்திருந்த நமக்கு இன்று தியாகராஜப் பெருமான் திருவருளல்லவோ இந்த இராஜபுத்திரனை இவ் வீதியில் வரும்படி செய்தது! இனி, அவ்வருளுக்கு என்ன கைம்மாறு செய்வோம்?" என்றும் பேசி மகிழ்ந்தோர் சிலர். "இந்தப் புத்திரன் தியாகேசப் பெருமான் வரத்தினால் தோன்றினான் என்பதை இவனது அற்புதமான வடிவம் காட்டுகின்றதே" என்றும்; "நமதரசனுக்குச் சந்ததி இல்லாமையால் பிற்காலத்

தில் உலகம் என்ன பாடுபடுமோவென்று எண்ணி இளைத்திருந்த நமது துன்பத்தையெல்லாம் நீக்கி இன் பத்தைக் கொடுத்த இப்புத்திரனுக்கு நாம் செய்யும் உபகாரம் ஒன்றுமில்லையே'' என்றும்; ''மனுச்சோழ மகாராஜனைப்போல நம்மையெல்லாம் பாதுகாத்து வரு வானென்பதற்கு வேறே அடையாளம் வேண்டுமோ! இவனிடத்திற் கருணை ததும்புகின்ற கடைக்கண்களே காட்டுகின்றன'' என்றும் பலர் பலவிதமாகத் தனித் தனிச் சொல்லிக்கொண்டு சூழ்ந்து நின்றார்கள். இந் தப் பிரகாரம் அவ்வவ் வீதியிலுள்ள ஸ்திரீ ஜனங்க ளும் புருஷ ஜனங்களும் பார்த்துப் பார்த்துப் பலவித மாகப் புகழ்ந்து நெருங்க வீதிவிடங்கன் தேரிலேறிச் சென்றனன்.

## இளைஞன்தேர்க்கீழ் இளங்கன்றரைபடல்

அரசகுமாரன் செல்லும்போது, ஒரு வீதியில் தேரிலே கட்டிய குதிரைகள் தேர்ப்பாகன் வசத்தைக் கடந்து தெய்வத்தின் வசமாகி, அதிவேகமாக அத் தேரை இழுத்துக்கொண்டு சென்றன. அத்தருணத் தில் தாய்ப் பசுவானது பின்னேவர, முன்னே வந்த அழகுள்ள ஒரு பசுங்கன்றானது ''இளங்கன்று பய மறியாது'' என்கிற மொழிப்படியே துள்ளிக் குதித் துக்கொண்டு எதிரே வந்து இராஜகுமாரனைச் சூழ்ந்து வருகிற ஜனத்திரள்களுக்குள்ளே ஒருவருமறிந்து கொள்ளாதபடி ஊழ்வினையாற் கண மயக்கம் செய்

வித்து, உட்புகுந்து, அதிவேகமாகச் செல்கின்ற தேர்ச்சக்கரத்தில் அகப்பட்டு, அரைபட்டு, உடல் முறிந்து, குடல்சரிந்து, உயிர்விட்டுக்கிடந்தது.

## இளவேந்து உற்றதுன்னி இறைவனை இறைஞ்சுதல்

உடனே அந்தப் பசுங்கன்று தனது தேர்ச்சக்கரத்தில் அகப்பட்டதைக் கேட்ட வீதிவிடங்கன் இடியோசை கேட்ட நாகம்போலத் திடுக்கிட்டு, நடுநடுங்கித் தேரிலிருந்து கீழே விழுந்து, எண்ணப்படாத துன்பத்தோடும் பயத்தோடும் எழுந்துபோய், அப்பசுங்கன்று இறந்து கிடப்பதைக் கண்டு மதிமயங்கி, மனம் பதைத்துக் கையுங் காலும் நடுக்கெடுத்துப் பெரு மூச்சுவிட்டு, உடம்பு வெயர்த்துச் சோபமடைந்து விழுந்து, சிறிது தெளிந்தெழுந்து, கண்களிலே நீர் ஆறாய்ப் பெருக நின்று, "சிவசிவா! சிவசிவா!! சங்கரா! சங்கரா!! சம்புவே! சம்புவே!! மஹாதேவா! மஹாதேவா!! தியாகராஜப்பிரபு! தியாகராஜப்பிரபு!! தேவரீரைத் தரிசிக்க வேண்டுமென்று வந்த அடியேனுக்கு இப்படிப் பட்ட இடரும் வரலாமா? நன்றி அறியாத பாவி இவன், நம்மைத் தரிசிக்கத் தக்கவனல்லனென்று திருவுளங் கொண்டு தானோ என்னை இந்தப் பழிக்கு ஆளாக்கியது? தேவரீரைத் தரிசனஞ் செய்ய எண்ணி வந்த அடியேன கால்வருந்த நடந்து பயபக்தியுடனே வந்து தரிசிக்க

வேண்டும்; அவ்வாறு செய்யாமல், செல்வச் செருக்கினால் தேரி லேறிக்கொண்டு ஆடம்பரங்களுடன் பக்தியில்லாது பகல் வேஷக்காரன்போல டம்பவேஷங் காட்டி வந்த அன்பில்லாத பாவியாகிய என் பிழையைக் குறித்து நோவதல்லது, என் பெருமானிடத்துக் குறைசொல்லத் தகுமோ?

இப்படிப்பட்ட பெரும்பாதகஞ் செய்யத்தானோ பிள்ளையாகப் பிறந்தேன்! விரிந்த பாற்கடலில் விஷம் பிறந்ததுபோல மறைநெறி தவறாத மனுவின் வம்சத்தில் எதிரற்ற பாவியாகிய நான் ஏன் பிறந்தேன்? பழி பாவங்களைக் கனவிலுங் கண்டறியாத மனுச்சோழராகிய என் பிதாவுக்குப் பெரும்பழியைச் சுமத்தத்தானோ பிறந்தேன்? சிவபெருமானைத் தரிசித்துச் சீர் பெறலாமென்றெண்ணிவந்த எனக்குச் சிவதரிசனங் கிடையாது கோரப்பழி கிடைத்ததே! ஓகோ! “எண்ணம் பொய்யாகும், எளிதம மெய்யாகும்” என்கிற வார்த்தைகள் என்னிடத்திலே இன்று அநுபவப்பட்டனவே; ஐயோ! நான்கற்ற கல்வியெல்லாம் கதையாய் முடிந்தனவே; நான் கேட்ட கேள்வியெல்லாங் கேடாய் முடிந்தனவே; நான் அறிந்த அறிவெல்லாம் அவலமாய்விட்டனவே; நான் தெளிந்த தெளிவெல்லாந் தீங்காய்விட்டனவே! அரகரா! இப்படிப்பட்ட தீங்கு வருமென்று அறிந்தால் தேரிலேறேனே; பசுவைக் கொலை செய்வதே பாவங்களிலெல்லாம் பெரும்பாவம்! அதைப் பார்க்கிலும் பசுக்கன்றைக் கொலை செய்வது பஞ்சமா பாதகத்திலும் பதின்மடங்கு

அதிகமென்று பெரியோர் சொல்லக்கேட்டறிந்திருக்கிற நான், இன்று அந்தப் பாதகத்துக்கு ஆளாகியும் உயிரை விடாமல் உடலைச் சுமந்திருக்கிறேனே; இளங்கன்று எதிரே வரவும் அதைப்பாராமல் அதன்மேல் தேரைநடத்தியது செல்வச் செருக்கல்லவோ என்று உலகத்தோர் பழிக்கும் பழிக்குத்தான் உடம்பெடுத்தேன்; நான் புத்திபூர்வமாக எள்ளளவாயினும் அறிந்திருப்பேனானால் இப்படிப் பட்ட அபாயம் நேரிடவொட்டேன். என்ன செய்வேன்! என்ன செய்வேன்!! மனுச்சோழர் காலத்தில அவர் புத்திரன் ஒரு பசுங்கன்றைக் கொன்றானென்னும் பழிமொழியை உலகத்தில் நிலைபெற நாட்டினேனே; நீதி தவறாது உலகத்தை யெல்லாம் ஆளுகின்ற மனுச்சக்கரவர்த்தி யென்னும் மகாராஜனுக்குப் பிள்ளையாகப் பிறக்கும்படியிருந்த நல்வினை இப்போது பேயாகப் பிறப்பதற்குத் தக்க தீவினையாய் விட்டதே. இந்தப் பிறப்பிலே இப்பழியை ஏற்றுக்கொள்வதற்கு முன் பிறப்பில் என்ன பாவஞ் செய்தேனோ! தூய்மையுள்ள சூரிய குலத்திற்கு ஆதியாகிய மனுவென்பவரும் அவர் வழிக்குப் பின்வழியாகத் தோன்றிய குலோத்துங்க சோழர், திருநீற்றுச் சோழர், காவிரி கரைகண்ட சோழர், மனுநீதிச்சோழர், இராஜேந்திர சோழர், ராஜ சூடாமணிச் சோழர், ராஜராஜ சோழர், உறையூர்ச் சோழர், மண்ணளந்த சோழர், கங்கைகொண்ட சோழர், தேவர் சிறைமீட்ட சோழர், மாபுநிலைகண்ட சோழர், எமனைவென்ற சோழர், சுந்தரச் சோழர்,

மெய்ந்நெறிச் சோழர் முதலான என் மூதாதைகளான முன்னோர்களெல்லாம் தீமையைச் சேராது செங்கோல் நடத்தி யடைந்த கீர்த்தி இக்காலத்தில் எடுக்கப்படாத பழியைச் சுமந்த என்னால் மறைந்து போகும்படி நேரிட்டதே; ஐயோ! இதை எண்ணும்போது நான் குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்பானேனே; மரபழிக்க வந்த வச்சிராயுத மானேனே; கன்றுக்குப் பாலூட்டாதவனைக் கண்டாலும் பாவமென்று சொல்லுகிற பெரியோர்கள், செங்கன்றைத் தேர்க்காலி லிட்ட என்னைக் குறித்து என்ன சொல்வார்கள்?

இந்தக்கன்று எங்கே பிறந்ததோ! எங்கே வளர்ந்ததோ! எங்கேபோக எண்ணியதோ! இங்கே வந்து இறக்க நேரிட்டதே! சுந்தரமுள்ள இக்கன்று இறந்ததைக் கண்ட எனக்கே இவ்வளவு துக்க முண்டாயிருக்கின்றதே, இதை ஈன்ற தாய்ப்பசு கண்டால் என்ன பாடுபடுமோ! இச்செய்தியை என் பிதாவானவர் கேட்பாரானால் ஏதாய் முடியுமோ! வார்த்தை மாத்திரத்திலே பழியென்று சரசஞ் செய்கின்றவர்களையுந் தண்டிக்கின்ற தந்தையார் திருமுகத்தில் தகுதியல்லாத பழியைச் சுமந்து தண்டனைக்காளாகிய நான் எவ்வாறு விழிப்பேன்! இனி இவ்வுலகில் பழிக்காளாகி உண்டுடுத்து உலாவி உயிர் வைத்திருக்கமாட்டேன். இன்றே என்னுயிரை இழந்துவிடுகிறேன்" என்று பலவிதமாகப் பரிதபித்து, துக்க சமுத்திரத்தி லழுந்திக் கரைகாணாதவனாகி நின்றனன்.

## சோர்வுடைச் செல்வனைச் சூழ்ந்தோர் தேற்றல்

உடன் சூழ்ந்துவந்த அந்தணர் அமைச்சர் முதலானோரோ இராஜகுமாரனைப் பார்த்துத் தாங்களும் விசனமடைந்தவர்களாய், "ஓ விவேகமுள்ள வீதி விடங்கனே! நீர் என்ன கெடுதி நேரிட்டதென்று இப்படிப் பிரலாபிக்கின்றீர்! அந்தப் பசுவின் கன்றை நீர் கொல்ல வேண்டுமென்று கொன்றீரோ! அல்லது அந்தக் கன்று தேர்க்காலில் அகப்படுவதை அறிந்தும் அஜாக்கிரதையாயிருந்தீரோ! அக்கன்று ஓடி வந்ததைச் சூழ்ந்திருந்த நாங்கள் ஒருவரும் அறியோமே! நீரெப்படி யறிவீர்? அது கர்மவசத்தாலே எல்லார் கண்களிலும் மண்களைத் தூவி வலிய வந்து மடிந்தது! அதற்கு நீர் என்ன செய்வீர்? மிருக ஜாதிகளிலே உயர்வுள்ள பசுவின் கன்று இறக்கநேரிட்டதேயென்று எண்ணியெண்ணிச் சோர்ந்து போகின்றீர்! ஆனால் அதற்கென்ன செய்வோம்! பொன் கத்தியென்று கழுத்தரிந்து கொள்ளலாமோ! இதனால் நமக்குப் பழிபாவம் ஒன்றுமில்லை; ஆயினும் இது பற்றி உமது மனது அலை பாய்ந்து அவலங் கொள்ளுகின்றபடியால் வேதத்தில் விதித்திருக்கின்ற பிராயச்சித்தங்களுள் இதற்குத் தக்கது எதுவோ அதைக் கேட்டறிந்து செய்து கொள்ளலாம். நீர் சித்தங் கலங்காமல் தேரிலேறும்" என்று சொன்னார்கள்.

## கோமகன் குடும்பகதை கூறல்

அதுகேடட வீதிவிடங்கன் அமைசசர் முதலி யோரைப பார்த்து, "நடுவாகப் பேசுகின்ற நல் லோர்களாக இருநதும காலவேற்றுமையால் கருத்து வேறுபட்டு முக நட்பாகப பேசி முகந் துடைக்கின்ற வர்கள்போற சொன்னீர்கள்; இஃதென்ன ஆசசரியம்! பூர்வம எங்கள் வமசத்தில சிபிசசக்கரவர்த்தி என்பவர் ஒருவர், ஒரு வேடன் துரததிக்கொண்டுவரப் பயநது அடைக்கலமாகப புகுநத புறவுக்கு அபயஹஸ்தஞ் செய்து, பின்பு அவ்வேடன் வநது புறவைக்கேட்டு வழக்கிட்டபோது அநதப புறவுக்கு ஈடாகத் தமது சரீரத்திலுள்ள மாமிசத்தையெலலாம் அரிநதரிநது தராசில வைத்தும் நிறைகாணாமலிருக்க அது கண்டு தாமும் அநதத் தராசிலேறினர். அவர் பட்சி ஜாதி களில் சாமானியப் பிறவியாகிய புறவின் உயிர்க் கொலைக்கே அஞ்சித் தம்முடம்பைக் கொடுத்ததுமன்றி உயிரையுங் கொடுத்தாரானல், அப்பட்சி ஜாதி களில் விசேடப பிறபபாகிய கருடன் முதலான உயிர் களினிடத்து எப்படிப்பட்ட காருண்ய முள்ளவரா யிருக்கவேண்டும்? அதனினும் உயர்ந்த மிருக ஜாதி களில் எவ்வகைப்பட்ட கிருபையுடையவரா யிருக்க வேண்டும்? அதனினும அம்மிருக ஜாதிகளில் விசேட மாகிய பசுக்களிடத்தில் எப்படிப்பட்ட இரக்கமுள்ள வரா யிருக்கவேண்டும்? அதனினும் பசுவின் கன்றுக ளிடத்தில் எவ்வகைப்பட்ட தயையுள்ளவரா யிருக்க

வேண்டும்? அப்படிப்பட்டவருடைய வம்சத்தில் நான் பிறந்தும் இன்று வீதியில் வரும்போது யாரோ பயங்காட்டித் துரத்த அதனால் நடுங்கி என்னெதிரே அடைக்கலமாகத் துள்ளியோடிவந்த இந்தப் பசுங் கன்றை அபயாஸ்தங் கொடாமல அநியாயமாகத் தேர்க் காலில் அகப்பட்டிறந்துபோகச் செய்தேனே! இப் படிப்பட்ட என்னை எனனசெய்தால் தீரும்? என்னை இதற்குத் தக்க பிராயசித்தஞ் செய்துகொள்ளும்படி சொன்னீர்களே; எங்கள் வம்சத்திலிருந்த அரசர் கள் இரக்கத்துடன் நீதி தவறாது அரசு செலுத்தி வந்த கிரமத்தையும், என் பிதாவாகிய மனுச்சோழர் நடுநிலைமை தவறாமல் எவ்வுயிர்களையும் தம்முயிர் போலப் பாதுகாத்து வருகின்ற முறைமையையும், அரசர்க்குக் கோபூசை செய்வது கடனென்ற வேத வாக்கியத்தையும், அரசர் பசுக்களுக்கு யாதொரு குறைவும் நேரிடவொட்டாமல் மிகுந்த ஜாக்கிரதை யுடன் விருத்தி செய்விகக வேண்டுமென்கிற பெரி யோர் வாக்கியத்தையும், ஐயோ! எங்கே அனுப்பி விட்டு இங்கே பிராயச்சித்தஞ் செய்துகொள்ளுவேன்'' என்று துயரத்துடன் சொல்லினான்.

## இளங்கன் றிறந்தது விதியெனத் தேற்றல்

அது கேட்ட அவ்வந்தணர் முதலானவர்கள் அக் குமாரனை நோக்கி, "வாராய் இராஜபுத்திரனே! நாங்கள் முக்குக் கிச்சையாக முன்னென்று பேசிப் பின்

ணென்று சொல்லுகின்றவர்களல்லம்; நெடுநாளாக எங்களுடன் பழகியிருந்தும் எங்கள் சுபாவம் இன்னும் உமக்கு நன்றாகப் புலப்படவில்லையென்று தோன்றுகின்றது. உலகந் தலைகீழாகுமானாலும் உள்ளபடி சொல்லுவோமேயல்லது புதிதாகத் தொடுத்துப் பொய் பேசமாட்டோம். நாங்கள் சொல்லும் வார்த்தையில் நம்பிக்கைவைத்துக் கேட்கக்கடவீர். அந்தப் பசுவின்கன்று ஒருவர் துரத்த அதனால் பயந்து அடைக்கலமாக வேண்டுமென்கிற அறிவோடு உமக்கெதிரே ஓடிவந்ததன்று; அல்லது தானே துள்ளிக் குதித்து ஓடிவந்ததுமன்று; அதை இன்னவிடத்தில் இன்ன காலத்தில் இன்னபடி இறக்குமென்று விதித்திருந்த அதன் தலைவிதியே அதனைத் துரத்திக்கொண்டுவந்து தேர்க்காலில் அகப்படுத்திச் சிதைத்துவிட்டது; அதன்விதி அப்படியிருக்க நீர் வீணாக விசனப்படுவதில் என்ன பலன்? 'கும்பகோணத்துப் பள்ளன் கொள்ளை கொண்டுபோகத் தஞ்சாவூர்ப் பார்ப்பான் தண்டங் கொடுத்தான்' என்னும் பழமொழிபோல அதனுயிரை விதி கொள்ளைகொள்ள உம் உயிரைத் தண்டங் கொடுப்பதேன்; நீர் ஒன்றுக்கும் அஞ்சாமல் தேரிலேறும்" என்று சொன்னார்கள்.

## பிராயச்சித்தத்திற்குப் பெரியோரை நாடல்

அதுகேட்டு இராஜபுத்திரன், "சிவதரிசனஞ் செய்ய எண்ணித் தேரிலேறும்போதே கால்தவறியும்

இடது தோளும் இடது கண்ணும துடித்துங் காட்டிய உற்பாதங்களை ஆலோசியாமல புறப்பட்ட என் மதியை நினைத்துத்தான் துயரப்படுவேனே! அரசர் குலத்திற் பிறநதும் என்னை இழிகுலத்தார் செய்யும் செய்கையைச செய்வித்த என் விதியை நினைத்துத் தான் துயரப்படுவேனே! மாசிலலாத சூரியகுலத்துக்கு மாசுண்டாகும்படி செய்ததைக் குறித்துத் துயரப்படுவேனே! பிதாவுக்குப பழிசுமத்தப பிள்ளையாகப் பிறந்ததைக் குறித்துத் துயரபபடுவேனே! இந்தக் கன்று இறந்ததை நினைத்துத்தான் துயரபபடுவேனே! இக்கன்றின் இறபபைக் கண்ட தாய்ப்பசு துக்கபபடுமென்பதை நினைத்துத துயரப்படுவேனே! நானொருவன் எதறகென்று துயரபபடுவேன்! என்ன செய்வேன்! செய்யத்தக்க தொன்றும் இன்னதென்று அறியேனே! ஆயினும் ‘‘முறற நனைந்தார்க் கீரமில்லை’’ என்பதுபோல முழுதும் பழிப்படட எனக்கு இனியென்ன துக்க மிருக்கின்றது! இனிப் பெரியோர் சொல் கடக்கபபடாதென்பதுபற்றி உமது சொற்படியே இதோ இரதத்தில் ஏறுகின்றேன்; என்னை எப்படிப் புனிதனாக்கவேண்டுமோ அப்படிச் செய்து கடைத்தேற்றுவது உங்களுக்கே கடன்’’ என்று சொல்லி யேறி, இரதத்தை வந்தவழியே திருப்பி விட்டுப பிராயச்சித்தம் அறிந்து செய்விக்கத்தக்க பெரியோர்களிடத்துக்குப் போயினன்.

## கன்றிழந்த ஆ கதறி வருந்தல்

இந்தப் பிரகாரம் இராஜகுமாரன் போனபின்பு, இறந்துவிட்ட அக்கன்றை ஈன்ற தலையீற்றுப் பசுவானது தன் கன்று துள்ளிக் குதித்தோடிய வழியே போய், அந்தக் கன்று கீழேவிழுந்து கிடப்பதைத் தூரத்தே கண்டவளவில் குலைகுலைந்து, நடுநடுங்கி, புத்தி மயங்கி, ஒன்றுந் தெரியாமற் சூறைக்காற்றில் அகப்பட்ட துரும்பைப்போற் சுழன்று சுழன்று ஓடிச் சமீபத்தில் வந்து, உடல் சிதைந்துங் குடல் சரிந்தும் உயிர்விட்டுக்கிடப்பதைப்பார்த்துச் சோர்ந்துவிழுந்து, பிரக்ஞை தப்பிப் பிணம்போற் கிடந்து, பின்பு சற்றே தெளிந்தெழுந்து, பெருமூச்சுவிட்டு, அந்தக் கன்றைச் சுற்றிச் சுற்றிக் கோவென் றலறி யலறி, அதனுடம்பை முகர்ந்து முகர்ந்து, "இஃதென்ன தீவினையோ! இஃதென்ன இந்திரசாலமோ! இஃதென்ன விபரீதமோ! வாலசைத்துக் கால் விசைத்து எனக்கு முன் துள்ளியோட இப்போது பார்த்தேனே! இத்தனை விரைவில் இப்படிப்பட்ட இடியிடிக்குமென்று எள்ளளவு மறியேனே! காவிரி முதலான தீர்த்தயாத்திரை செய்தும், சிதம்பர முதலான ஸ்தலயாத்திரை செய்தும், திருக்கோயில்களிலுந் திருவீதிகளிலு முள்ள புல் முதலானவைகளை வாயினுற் களைந்து திருப்பணி செய்தும், புல் மேயாமலும் நீர்குடியாமலும் நெடுநாள் விரதங்காத்தும் உன்னைப் பெறப்பட்ட பாடு தெய்வம் அறியுமே! அவ்வளவு பாட்டையும்

அவலமாக்கிப் போட்டு, சேங்கன்றே! என்னைத் தெரு வில் விட்டாயே! உன்னைப் பெறுகிறதற்கு நோற்ற நோன்புகளால் வந்த இளைப்பு இன்னும் ஆறவில்லையே! இதற்குள் இப்படிப்பட்ட ஆறாத பெருநெருப்பை அடிவயிற்றில வைத்தாயே! இந்தத் துக்கத்தை இனி எந்த விதத்தினால் சகித்துக்கொள்ளுவேன்! 'பாவிக் குப் பாக்கியந் தக்காது' என்பதற்குச் சரியாகப் பளிங்கு போன்ற நிறமும், பால் வடிகின்ற முகமும், சிறுத்துத் திரண்ட திமிலும், கடைந்தெடுத்தது போன்ற கால்களும், வாழைச் சுருள்போன்று வளர்ந்த வாலும், சித்திரக்கன்றுபோன்று சுபலக்ஷணங்களைப் பெற்ற வடிவமுடைய நீ நிர்ப்பாக்கியமுள்ள எனக் குத் தக்காமற் போய்விட்டாயே! உன்னுடைய சுந்தர முள்ள வடிவத்தைக் கண்டாற் காமதேனுவுங் கட்டி யணைத்து முகங் குளிர்ந்து முத்தங்கொள்ளுமே! நான் உன்னைப்பற்றியல்லவோ உயிர் தரித்து உலகத்தி லுலாவி யிருந்தேன்! இன்னும் ஒருதரம் உன்னழகிய முகத்தைக்கண்டு, எனமடிசுரந்து, பால சொரியக் காண்பேனே! ஐயோ! உன்னை 'ஆயிரங் கன்றுகளி லும் அழகுள்ள கன்று' என்று கண்டோர் சொல்லக் களிப்புடன் கேட்ட என்காதுகளால், இன்று 'இளங் கன்றை இறக்கவிட்டு மலட்டுப்பசுப்போல வருந்து கின்றதே' என்று பலரும் பழித்துப் பேசுகின்ற வார்த்தையை எவ்வாறு கேட்பேன்?" என்று எண்ணி எண்ணி மனமழுங்கி, இளைப்படைந்து, மூர்ச்சித்து, மறுபடியுந் தெளிந்து, இறந்து கிடக்கின்ற கன்றி

னுடம்பை உறுப்பாராதது, இரதத்தின் சக்கரம ஏறுண்டு இரத்தஞ் சொரிய அழுந்திக் கிடக்கின்ற வடுவைக் கண்டு, "ஒகோ! என் ஏழை மதியால் ஏதோ ஒரு சொற்பமான அபாயத்தால் விழுந்திறந்த தென்று எண்ணி இரங்கினேனே! இவ்வடுவைப் பார்க் கும்போது தேர்ச்சக்கரம் ஏறுண்டு உடல சின்னப் பட்டு இறநததாகத் தெரிய வருகின்றதே! ஆ! ஆ!! உனக்கு இப்படிப்பட்ட பெரிய அபாயம் வந்து சம்ப விக்கும்படி நானென்ன பாவஞ் செய்தேனோ! குழந் தாய்! ஓ! நீ தோக்காலில் அகபபட்டபோது எப்படிப் பயநதாயோ! என்ன நினைந்தாயோ! எவ்வாறு பதைத் தாயோ? உயிர்போய் உடல குழம்பிக் கிடக்கின்ற உன்னைப பார்க்கப் பார்க்கப் பெறற வயிறு பற்றி எரிகின்றதே" என்று கண்ணீர் விட்டுக் கதறி, அழுதழுது, புரண்டு புரண்டு, விம்மி விம்மி, வெதும்பி வெதும்பிப் பெருமூச்சு விட்டுக் கீழே விழுந்து மெய்ம்மறந்து கிடந்து பின்பு எழுந்து, "என் கன்றினைத் தேர்க்காலில் அழுத்திக்கொன்ற காருண்யமிலலாத கணமூடியைக் கண்டால் என் னிரண்டு கொம்புக்கும் இரையாக்காது விடுவேனோ! மைந்தரைப பெறுத மலட்டுத்தன முள்ளவர்களும் இப்படிச் செய்யத் துணிவுகொள்ளார்களே! ஆ! இது செய்யத் துணிந்தவன் இன்னுமென்ன செய்யத் துணி யான்!" என்று வெம்பியும், "துன்பஞ் செய்விக்குந் துஷ்டர்களுக்கும், கொலை செய்கின்ற கொடுந் தொழி லோர்க்கும் இடங்கொடாத இந்நகரம், இன்று வலி

யற்ற உயிர்களை மாய்த்து விடுகின்ற வஞ்சகர்க்கும் இடங்கொடுத்ததே! ஐயோ! இதில் அரசனில்லையோ! நீதி யில்லையோ! நெறியில்லையோ! இஃதென்ன அநியாயமோ!'' என்று முறையிட்டு, தன் கன்றை இழந்த தனாலுண்டாகிய துக்கத்தைச் சகிக்கமாட்டாததாய் வருந்தி, ''நமக்கு நேரிட்ட துக்கத்தை நமது இறைவராகிய மனுச்சோழரிடத்திற் சென்று குறிப்பித்து நிவர்த்தி செய்துகொள்ளுவோம்'' என்றெண்ணி, அக்கன்றைப் பசுந் தழைகளால் மூடிவைத்துக் கண்ணீர் சொரிந்து கதறிக்கொண்டே மனுச் சக்கரவர்த்தியின் வாயிலில் வந்து, குடிகளுக்குக் குறைவு நேரிட்டால் அதை அரசனுக்கு அறிவிக்கும்படி அவ்வரண்மனை வாயிலில் கட்டியிருக்கிற ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் மிகுந்த விசையோடும் வலியோடும் அடித்தசைத்தது. அப்படி அசைத்தபோது அந்த நகரத்திலுள்ள ஜனங்களெல்லாம், ''ஒரு காலத்திலாயினுங் கேட்டறியாத ஆராய்ச்சி மணியினது ஓசையை இன்று நூதனமாகக் கேட்டோம், என்ன விபரீதமோ!'' என்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ள, அந்த மணியிலிருந்து காதமட்டுங் கேட்கக் கணீரென்று ஓசையுண்டாயிற்று.

## இளவரசால் வந்த இடரென்றறிந்து ஆற்றொணாத் துயரில் அரசன் ஆழ்தல்

அவ்வோசையைச் சபாமண்டபத்தில் மந்திரி முதலானவர்கள் சூழச் சிங்காசனத்தின் மேல் வீற்

றிருந்த மனுச்சக்கரவர்த்தியானவர் கேட்டு, மாதர்கள் காலிலணிந்த சிலம்போசை கேட்ட மாதவர் போலவும், அழுகுரலோசை கேட்ட அந்தணர்போலவும், சண்டை இரைச்சலைக்கேட்ட சற்சனர்போலவும், புலிமுழக்கங் கேட்ட புல்வாய்போலவுந் திடுக்கிட்டு, திகைப்படைந்து, சிங்காசனத்திலிருந்து பெருங்காற்றால் அடியறவிழுந்த பனைமரம்போலக் கீழே விழுந்து, மூர்ச்சையடைந்து, சிறிது நேரஞ் சென்று தெளிந்தெழுந்து, உடல் நடுங்கி, உள்ளம் பதைத்து, உயிர் சோர்ந்து, நாவுலர்ந்து, கண்கலங்கி, நடை தள்ளாடி அதிவேகமாக அரண்மனை வாசலுக்கு வருமுன், வாயிற் காபபோர் அரசனுக் கெதிரே அஞ்சியஞ்சி வந்து, அடியில் விழுந்தெழுந்து, "ஆண்டவரே! அரண்மனை வாயிலில் கட்டியிருக்கிற ஆராய்ச்சி மணியை ஒரு தலையீற்றுப் பசுவானது தன்கொம்பினால் அடித்து ஓசையுண்டாக்கியது" என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

அதுகேட்டு அரசன் விரைவில வந்து, அவ் வாராய்ச்சி மணியின் அருகே உடலமெலிந்து, முகஞ் சோர்ந்து, கண்ணீர் சொரிந்து, கதறி நிற்கின்ற பசுவைக் கண்டு, சாவியாய்ப்போன தன் பயிரைக்கண்ட தரித்திரனைப்போல மனம் நைந்து நைந்துருகி, நொந்து நொந்து வருந்தி, "ஐயோ! சாதுவான இந்தப் பசுவுக்கு என்ன துன்பம் நேரிட்டதோ! இதன் குறையை இன்னதென்று மதித்தறிந்துகொள்ள வல்லமை இல்லாதவனாக இருக்கின்றேனே!" என்று

பதைத்துத் தம்மருகில் அச்சத்துடன் நிற்கின்ற அமைச்சர்களைப் பார்த்து, "எனக்குப் புகழும் புண்ணியமும் மேன்மேலும் வருவிக்கின்ற உங்கள் மந்திரித்துவம் நன்றாகவிருந்தது! உங்கள் அஜாக்கிரதையினுலல்லவோ இந்தப பசுவுக்கு ஏதோ ஒரு குறை நேரிட்டது!" என்று கோபித்துப் பார்க்க, அது கண்டு அச்சங்கொண்ட மந்திரிகளுள், அப்பசு துயரப் படுவதற்குக் காரணம் இன்னதென்று முன்னே அறிந்தும் அரசனிடத்திற சொலவதற்கு அஞ்சியிருந்த ஒரு மந்திரியானவன், "இனி இதை நாம் மறைத்து வைத்தாலும் வேறொருவரால வெளிபபடுமாதலால், நாமே அறிந்தமட்டில் அறிவிபபோம்" என்றெண்ணி, அரசனை வணங்கி, "தலைவனே! உமது புத்திரன் இன்று ஏறிபபோன இரதத்தின் சக்கரத்தில் இளங்கன்று ஒன்று எதிரே குதித்து வந்து அகப்பட்டு இறநதுவிட்டது; அநதக்கன்றை ஈன்ற இந்தப் பசுவானது ஆருத்துயர்கொண்டு ஆராய்ச்சி மணியை அசைத்தது" என்று சொன்னுன். அச் சொல்லானது வெநத புண்ணில் வேலுருவியது போல், மணியொலி கேட்டு வருநதியிருந்த செவிகளினுள்ளே சென்றுருவிச் சுறுக்கிட்டு வெதுப்ப விழுந்து, விஷந் தலைக்கேறினுற்போல வேதனையடைநது, அஞ்சுபுலனும் அறிவுங் கலங்கிப் பஞ்சப் பிராணனும் பதைபதைத் தொடுங்க, பேச்சு மூச்சில்லாமற் சோர்ந்து கிடந்து, அருகிலிருந்த அமைச்சர்கள் செய்த சாந்தோபசாரத்தால் சோர்வு

அப்பசுவை அடிக்கடி பார்த்துப் பார்த்து, கண்ணீர் கடல் வெள்ளம்போல் பெருகவும், நெருப்பில் விட்ட நெய்யைப்போல நெஞ்சம் உருகவும், "ஐயோ! அந்தப் பசுவுக்கு இப்படிப்பட்ட துக்க முண்டாவ தற்கு நானே முக்கிய காரணமாக இருந்தேனே! தன் கன்றுக்கு அபாயமொன்று மில்லாதிருக்கினுஞ் சுபா வத்திலே காணுந்தோறுங் கதறி உருகுகின்ற அன் பினையுடைய இந்தப் பசுவானது தன்கன்று இறந்து கிடக்கின்றதைக் கண்டபோது எப்படி உருகியதோ! என்ன பாடுபட்டதோ! கன்று சமீபத்திலிராமல் சற்றே தூரத்திலிருக்கினும், பார்த்துப் பார்த்துப் பதைக்கின்றதும், அம்மா! அம்மா!! என்று அலறு கின்றதுமாகிய சுபாவச் செய்கைகளையுடைய பசு வானது, கன்றிறந்து கண்மறைவிற் கிடக்கின்றதை எண்ணி எண்ணி எப்படிப் பதைக்கின்றதோ! ஐயோ! அடிக்கடி அலறுகின்றதே! புலி முதலான துஷ்ட மிருகங்களி லொன்று எதிரிடுமானால் முன் சென்று தன்னுயிரைக் கொடுத்தாயினுங் கன்றி னுயிரைக் காக்கவேண்டு மென்னுங் கருத்துள்ள பசுவுக்கு இறந்த கன்றை எதிர் கண்டபோது எப்படி உயிர் பதறியதோ! சிவசிவா! சிறுகன்று தேர்க்காலில் அகப்பட்டபோது எப்படித் துடித்ததோவென்று எண்ணுந்தோறும் என்னுள்ளம் பகீரென்று பதைக் கின்றதே! இந்தப் பசுவானது குள்ளனைக்கொண்டு ஆழம்பார்க்க வந்ததுபோலவும், பேயைத் தெய்வ மென்று பிள்ளைவரங் கேட்க வந்ததுபோலவும்,

கொல்லை ஆள்காட்டியைக் கூலிகேட்க வந்ததுபோல வும், விழலினிடத்து நிழலுக்கு வந்ததுபோலவும் என்னைக்கொண்டு தன் துயரைத் தீர்த்துக்கொள்ள எண்ணியல்லவோ இவ்வாராய்ச்சி மணியை அசைத்து இவ்விடத்து நிற்கின்றது! இதற்கு என்ன செய்வேன்! எமன் கையிலகப்பட்ட உயிர் எந்தவிதத்தாலும் திரும்பாதென்று உலகத்தார் சொல்லும் உறுதியான வார்த்தை வீண்போக, முன்னொருகாலத்தில் நமது நக ரத்தில் ஓரந்தணனீன்ற சிறுவன் அகாலத்தில் மரண மடைய, அதுபற்றி அவ்வந்தணன் துயர்கொண்டு தமது சமுகத்தில் வந்து "சிவநெறி திறம்பாமற் செங் கோல் செலுத்துகிற உமது காவலைக் கடந்து அகாலத் திலே அந்தகன்* வந்து, இரவும் பகலுந் தவஞ்செய்து யான் அருமையாகப் பெற்ற ஒரு பேறான புத்திரனை உயிர்கொண்டு போனானே; தலைவனே! இது தகுமோ!" என்று முகமும் மனமுஞ் சோர்ந்து முறையிட்டுக் கொள்ள, அது கேட்டு மனமுருகி நொந்து, சிவபெரு மான் திருவடியன்றி மற்றொன்றிலும் மனம் வையாத தமது வல்லமையால் எமலோகத்திலிருந்த உயிரை மீட்டுக்கொண்டு வந்து, முன்னிருந்த உடலில் விட்டு, அவ்வந்தணனை மகிழ்ச்சி செய்வித்து; அன்றுதொட்டு எமனைத் தாமுள்ளளவரையிலும் தமது நகரத்திலும் நாட்டிலும் வரவொட்டாமற் செய்த என் குலமுதல்வ ராகிய சைவச்சோழரைப்போல, அவ்வளவு பெரிதான காரியஞ் செய்யாவிடினும், இப்பசுங் கன்றின் உயி

* அந்தகன் - எமன்.

சொன்னை மாத்திரமானாலும் மீட்டுக் கொடுக்க வலி யற்றவனாக இருக்கின்றேனே! அவமிருத்து நேரிட்ட போது சஞ்சீவகரணி யென்னுந்தெய்வத்தன்மையுள்ள மருந்தைக் கொடுத்துப பிழைப்பிக்கச் செய்த என் குலத்தலைவர்களிற் சிலர்போல் அம்மருந்தையாயி னும் பெற்றுக் கொள்ளத்தக்க தவஞ் செய்தேனோ! தமது அஜாக்கிரதையினால் பிற உயிர்க்குக் கெடுதி நேரிட்டபோது அது பொறாமல் தம்முயிரை விட்டு விட்ட சில அரசர்களைப்போல என் அஜாக்கிரதை யினால் நேரிட்ட இபபசுங்கன்றின் முடிவைக் கேட் டறிந்த நான், உயிரையாயினும் விட்டேனோ! அன்னிய தேசத்தரசா குற்றஞ் செய்தோரைக் கொலை செய்தாரென்று கேட்டாலுங் குறறம் வந்த தென்ன, கொலை செய்த தென்ன என்று குலை நடுங்குகின்ற நல்லோர்கள் மரபிற் பிறநத நான், குற்றம்வரவுங் கொலைசெய்யவும அரசுசெலுத்தி, அந்த நல்லோர்க ளியல்புக்கு நாணமுண்டாகத் தானோ வீட்டின் வாயிலில் வெள்ளெருக்குப் பூத்தது போலத் தோன்றினேன்! நாம் அரசாட்சி செய்ய ஏற்பட்ட நாள்தொட்டு இந்நாள் வரையிலும் எவ் வுயிரும் எவ்விதத்திலும் யாதொரு குறையும் இல்லாமல் வாழ்நது மகிழ்ந்திருக்க, நீதியுடன் முறை தவறாது செங்கோல் செலுத்திவரும்படி சிவானுக் கிரகம் பெற்றோமேயென்று ஒரு நாழிகைக்குமுன் வரையிலும் எனக்கு உண்டாயிருந்த மனக்களிப்பை யெல்லாம் மண்ணிற் கவிழ்த்தேனே! நாமும் பழி

பாவங்களுக்குப பயந்தே அறநெறி தவறாது அரசு செலுத்தி வருகிறோம்; 'பழைய தரித்திரனுக்குப் பணங்கிடைத்தது' போல் நமக்கும் சிவானுக்கிரகத்தால் ஒரு சிறுவன் பிறந்தான்; அவனும் கற்றவர் மகிழக் கல்வி கேள்விகளில் நிறைந்து பண்பும் பருவமும் உடையவனானான்; இனி நமக்கென்ன குறை என்று எண்ணியெண்ணி இறுமாப்பு அடைந்தேனே! புத்திரப் பேறுபெற்றுப் புனிதனானே னென்று பூரித்திருந்தேனே! நமது புத்திரன் இளவரசுப் பட்டத்திற்கு ஏற்றவனானான்; இனிக் கலியாணஞ் செய்விப்போமென்று கனவு கண்டிருந்தேனே! நமது புத்திரன் நற்குணங்களை உடையவனாக இருக்கின்றான்; பெற்றெடுத்த நமது பேர்கொண்டு வருவானென்று மனோராச்சியம் பண்ணி மகிழ்ந்திருந்தேனே! இளங் கன்று எதிர்வரவுங் கண்கெட்டுக் கருத்தழிந்தவன் போலத் தேரை நடத்தித் தீராப் பழிபூண்டானே! ஐயோ! இவன் என் செங்கோலைப் பிடிக்கத்தக்க செல்வப்பிள்ளை யாகாமல் தென்னம்பிள்ளையானானே! சிவ தரிசனஞ் செய்யப் போகிறவன் தேரூர்ந்தே போகப் படாது; அவ்வாறு போயினும் நாற்புறத்திலும் நடப்போர்களை விலக்கும்படி ஆள்விலக்கிகளைவிட்டு, முன்னே பரிக்காரர் வரவு குறித்துப்போகப் பின்னே மெல்லெனத் தேரை விடவேண்டும்; அப்படிச் செய்யாமல் பாலியப்பருவம் பயமறியாதென்பதற்குச் சரியாகப் பரபரப்பாகத் தேரை நடத்திப் பசுங்கன்றைக் கொன்றானே! ஐயோ! இவன் கல்வியறிவுள்ளவனாக

பாவங்களுக்குப் பயந்தே அறநெறி தவறாது அரசு செலுத்தி வருகிறோம்; 'பழைய தரித்திரனுக்குப் பணங்கிடைத்தது' போல் நமக்கும் சிவானுக்கிரகத்தால் ஒரு சிறுவன் பிறந்தான்; அவனும் கற்றவர் மகிழக் கல்வி கேள்விகளில் நிறைந்து பண்பும் பருவமும் உடையவனானன்; இனி நமக்கென்ன குறை என்று எண்ணியெண்ணி இறுமாப்படைந்தேனே! புத்திரப் பேறுபெற்றுப் புனிதனானே னென்று பூரித்திருந்தேனே! நமது புத்திரன் இளவரசுப் பட்டத்திற்கு ஏற்றவனானன்; இனிக் கல்யாணஞ் செய்விப்போமென்று கனவு கண்டிருந்தேனே! நமது புத்திரன் நற்குணங்களை உடையவனாக இருக்கின்றான்; பெற்றெடுத்த நமது பேர்கொண்டு வருவானென்று மனோராச்சியம் பண்ணி மகிழ்ந்திருந்தேனே! இளங்கன்று எதிர்வரவுங் கண் கெட்டுக் கருத்தழிந்தவன் போலத் தேரை நடத்தித் தீராப் பழிபூண்டானே! ஐயோ! இவன் என் செங்கோலைப் பிடிக்கத்தக்க செல்வப்பிள்ளை யாகாமல் கொன்னம்பிள்ளையானனே! சிவ தரிசனஞ் செய்யப் போகிறவன் தேரூர்ந்தே போகப் படாது; அவ்வாறு போயினும் நாற்புறத்திலும் நடப்போர்களை விலக்கும்படி ஆள்விலக்கிகளைவிட்டு, முன்னே பரிக்காரர் வரவு குறித்துப்போகப் பின்னே மெல்லெனத் தேரை விடவேண்டும்; அப்படிச் செய்யாமல் பாலியப்பருவம் பயமறியாதென்பதற்குச் சரியாகப் பரபரப்பாகத் தேரை நடத்திப் பசுங்கன்றைக் கொன்றானே! ஐயோ! இவன் கல்வியறிவுள்ளவனாக

இருந்தும் அறிவழிந்து, அரசன் பிள்ளையாகாமல் அணிற்பிள்ளை யானுனே! கொடிய பாதகங்களிலெல்லாங் கொலைபாதகமே தலைமையென்று வேத முதலாகிய கலைகளில் தான் படித்தறிந்தான்; சான்றோர் சொல்லவுங் கேட்டறிந்தான்; அப்படி அறிந்திருந்தும் அப்பாதகஞ் சேரவொட்டாமல தன்னைக் காத்துக் கொண்டு பட்டபிள்ளையாகாமல் பழிப்பிள்ளையானுனே! ஐயோ! புதல்வனைப் பெற்றால் புண்ணியம் பெறலாமென் றெண்ணிய எனக்கு மலடாயிருந்தாலும் வாழ்வுண்டென்று நினைக்கும்படி நேரிட்டதே! நான் நெடுநாளாகத் தியாகராஜபெருமானை வேண்டிக் கொண்டது இப்படிப்பட்ட பெரிய பழிக்காளாகிய பிள்ளையைப் பெறத்தானே! பிள்ளை யென்ன செய்யும்! பெருமான் என்ன செய்வான்! "மாதா பிதாக்கள் செய்தது மக்களுக்கு" என்னும் பெரியோர் வார்த்தையின்படி நான் செய்த தீவினையே என் புத்திரனுக்கு நேரிட்டதென்று நினைத்து, என்னை வெறுத்துக் கொள்ள வேண்டுமென்றாலும், இந்தப் பிறப்பில் என் புத்தியறிந்து ஒரு தீங்குஞ் செய்ததில்லையே! இந்தப் பிறப்பி லில்லாவிட்டாலும் முற்பிறப்பிலே நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தேனே! வலிய வழக்கிட்டு மானங் கெடுத்தேனே! தானங்கொடுப் போரைத் தடுத்து நின்றேனே! கலந்த சிநேகரைக் கலகஞ் செய்தேனே! மனமொத்த நட்புக்கு வஞ்சகஞ் செய்தேனே! குடிவரி உயர்த்திக் கொள்ளை கொண்டேனே! ஏழைகள் வயிறு எரியச் செய்

தேனே! தருமம் பாராது தண்டஞ் செய்தேனே மண்ணோரம் பேசி வாழ்வழித்தேனே! உயிர்க்கொலை செய்வோர்க்கு உபகாரஞ் செய்தேனே! களவுசெய்வோர்க்கு உளவு சொன்னேனே! பொருளை இச்சித்துப் பொய் சொன்னேனே! ஆசைகாட்டி மோசஞ் செய்தேனே! வரவுபோக்கொழிய வழியடைத்தேனே! வேலையிட்டுக் கூலி குறைத்தேனே! பசித்தோர் முகத்தைப் பாராதிருந்தேனே! இரப்போர்க்குப் பிச்சை இல்லையென்றேனே! கோள் சொல்லிக் குடும்பங் கலைத்தேனே! நட்டாற்றிற் கையை நழுவ விட்டேனே! கலங்கி ஒளிந்தோரைக் காட்டிக்கொடுத்தேனே! கற்பழிந்தவளைக் கலந்திருந்தேனே! காவல் கொண்டிருந்த கன்னியை அழித்தேனே! கணவன்வழி நிற்போரைக் கற்பழித்தேனே! கருப்ப மழித்துக் களித்திருந்தேனே! குருவை வணங்கக் கூசிநின்றேனே! குருவின் காணிக்கை கொடுக்க மறந்தேனே! கற்றவர் தம்மைக் கடுகடுத்தேனே! பெரியோர் பாட்டிற பிழை சொன்னேனே! பக்ஷியைக் கூண்டில் பதைக்க அடைத்தேனே! கன்றுக்குப் பாலூட்டாது கட்டிவைத்தேனே! ஊன்சுவை உண்டு உடலை வளர்த்தேனே! கல்லும் நெல்லுங் கலந்து விற்றேனே! அன்புடையவர்க்குத் துன்பஞ் செய்தேனே! குடிக்கின்ற நீருள்ள குளத்தைத் தூர்த்தேனே! வெய்யிலுக் கொதுங்கும் விருக்ஷத்தை அழித்தேனே! பகைகொண்டு அயலோர் பயிரை அழித்தேனே! பொது மண்டபத்தைப் போயிடித்தேனே! ஆலயக் கதவை

அடைத்து வைத்தேனோ! சிவனடியாரைச் சிறி வைதேனோ! தவஞ் செய்வோரைத் தாழ்வு சொன்னேனோ! சுத்த ஞானிகளைத் தூஷணஞ் செய்தேனோ! தந்தை தாய் மொழியைத் தள்ளி நடந்தேனோ! தெய்வத்தை இகழ்ந்து செருக்கடைந்தேனோ! இன்னும் என்ன பாவஞ் செய்தேனோ! இன்னதென்றறியேனே! ஐயோ! இந்தப் பசுவின் சோர்ந்த முகத்திற் கண்ணீர் ததும்புகின்றதைக் கண்ட என் கண்களை, நுங்கு சூன்றெடுப்பதுபோலப் பிடுங்கி எறியேனோ! இதன் கன்றை உன் புத்திரன் தேர்க்காலில் ஊர்ந்து கொன்றானென்று சொல்லக்கேட்ட என் செவிகளை செம்பு நீருருக்கி விட்டுச் செவிடாக்கேனோ! இந்தப்பசு ஆராய்ச்சிமணியினால் தன் குறையை அறிவித்த நாழிகைதொட்டு இந்நாழிகை வரையிலும் அக்குறையைத் தீர்ப்பதற்குவேண்டிய உறுதி மொழியைக் கூறுதிருக்கிற என்நாவைச் சூடுள்ள நெருப்பாற் சுடுவேனோ! இதற்குத் துன்பமுண்டாக்கினவன் இன்னானென்று அறிந்தும், அவனை இன்னுந் தண்டனை செய்யாது தாழ்த்திருக்கின்ற என் கைகளைக் கத்தியைக் கொண்டு கண்டித்துவிடேனோ! இதன் கன்றைப் பிழைப்பிப்பதற்குத் தக்க நன்முயற்சியைத் தேடி, நாலு திக்குகளிலும் நடவாத என்காலைக் கோடரிகொண்டு குறுக்கே வெட்டேனோ! இதன் மெலிவை அடிக்கடி கண்டும் வற்றி ஒடுங்காத மலபாண்டமாகிய என்னுடம்பை வாளாயுதங் கொண்டு மடித்துக்கொள்ளேனோ! இதன்

பரிதாபத்தையும் நமக்கு நேரிட்ட பழியையும் எண்ணியும் உருகி அழியாத உள்ளத்தை வலிய விஷத்தை விட்டு மாய்த்து விடேனே! நிலையிலா உயிர்க்கஞ்சி இவைகளில் ஒன்றுஞ் செய்யா துயிர் வைத்திருக்கின்றேனே! என்ன செய்வேன்! 'பாவிக்குத் தீர்க்காயுள்' என்பதற்குச் சரியாகப் பெரும் பாவியாகிய என்னுயிர், தனக்குத் தானேயும் போகின்றதில்லையே! 'நல்ல பூஜாபலத்தினால் தெய்வபக்தியுடன் செங்கோல்செலுத்தி வருகின்றான் மனுச்சோழன்' என்று மண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் புகழ்ந்த புகழெல்லாம் பொய்யாய்ப் போய்விட்டனவே; நான் அப்புகழை வேண்டினவனல்ல, ஆதலால் அது போகட்டும்; உயிரினும் ஒன்பது பங்கு அதிகமாகத் தேடிவைத்த புண்ணியமும் போகின்றதே! ஆ! நான் நீதி தவறாது அரசுசெய்கின்றே னென்பதை நினைத்தால் எனக்கே ஏளனமாக இருக்கின்றதே! சேங்கன்றைத் தெருவிற் சிதைக்கவும் ஒருமித்திருந்த என் செங்கோலை அளவுகோ லென்பேனோ! அஞ்சனக்கோலென்பேனோ! எழுதுகோ லென்பேனோ! ஏற்றக்கோலென்பேனோ! கத்திரிக்கோ லென்பேனோ! கன்னக்கோ லென்பேனோ! குருடன்கோ லென்பேனோ! கொடுங்கோ லென்பேனோ! துடைப்பைக்கோ லென்பேனோ! துலாக்கோ லென்பேனோ! மரக்கோ லென்பேனோ! வைக்கோ லென்பேனோ! அல்லது இன்று இறந்த பசுங்கன்றாகிய பிரேதத்தைப் புரட்டிச் சுடுகின்ற பிணக்கோ லென்பேனோ! என்னகோ

லென்றுதா னெண்ணுவேன்! இளங்கன்றைக் கொலை செய்யச் சம்மதித்திருந்த என் ஆக்கினை சக்கரத்தைக் கிரகசக்கர மென்பேனோ! அல்லது இச்சேங்கன்றைச் சிதைத்த தேர்ச்சக்கர மென்பேனோ! என்ன சக்கர மென் றெண்ணுவேன! இந்தப் பசுவின் கன்றுக்கு அபாயம் நேரிடக் காத்திருந்த என் காவலைச சிறு பெண் காக்கின்ற தினைக்காவ லென்பேனோ! குருடன் காக்கின்ற கொல்லைக்காவ லென்பேனோ! புல்லாற் செய்த புருடன் காக்கின்ற புன்செய்க்காவ லெனபேனோ! வருமபடி யில்லான் காக்கின்ற வாயிற் காவலென்பேனோ! பயிரைக காக்கவைத்த பண்ணைக்காவ லென்பேனோ! வேலை வேண்டிக் காக்கின்ற வெறுங்காவ லென்பேனோ! அல்லது இக்கன்றை அடக்கஞ் செய்யக காத்திருக்கின்ற அரிச்சந்திரன் காவலென்பேனோ! என்னகாவ லென்றுதா னெண்ணுவேன்! என்ன செய்வேன்! ஐயோ! இப்படிபபட்ட பாவியாகிய என்னை மனுவென்று பேரிட்டழைப்பது காராட்டை வெள்ளாடென்றும், அமங்களவாரத்தை மங்களவார மென்றும், நாகப் பாம்பை நல்லபாம்பென்றும் வழங்குகின்ற வழக்கம் போன்றதல்லது உண்மையல்லவே! இனி, இப்பசுங் கன்று உயிர்பெற் றெழுந்திருப்பதற்கு உபாயம், என் புத்திரனுயிரையேயன்றி என்னுயிரையும், என் மனையாளுயிரையும், என்னரசாட்சியையும், எனக்கு உரித்தாகிய மற்றெல்லாப் பொருள்களையுங் கொடுத்து விட்டால் நேரிடுமென்று சொல்வா ருண்டானால்,

இதோ கொடுத்துவிடுகிறேன். அவ்வாறு சொல்வோருமில்லையே! இதற்கு நேரிட்ட துக்கமும், எனக்கிதனாலுண்டாகிய துயரமும் எபபடித் தீருமோ! இப்படியென் றறியேனே! என்ன செய்வேன்''! என்று பலவிதமாகப் பரிதவித்திருந்தார்.

## அரசனை வணங்கி அமைச்சர்கள் கூறல்

இநதப் பிரகாரம் பரிதவித்து வருந்துகின்ற மனுச்சக்கரவர்த்தியை அருகிலிருந்த அமைச்சர்கள் நோக்கிக் கைகுவித்துத் தொழுது நின்று "ஓ மனுநீதி தவறாத மகாராஜனே! விதிவசத்தாலே வலிய வந்து மடிந்த இளங்கன்றைக் குறித்து நீர் துன்பப்படுவது உயிர்களிடத்து உமக்குள்ள காருண்யத்துக்கு இயல்பேயென்று எண்ணி, இதுவரையும் எதிரொன்றுஞ் சொல்லாது சும்மா இருந்தோம்; இனிக்காரியக் கெடுதியில் வாய்மூடிக்கொண்டிருப்பது மந்திரிகளுக்கு அழகல்ல என்றபடியால், நாங்கள் சொல்லும் வார்த்தையைக் கேட்டருளவேண்டும். உமது புத்திரன் சீவகாருண்யமே தேகமாகக் கொண்டவன். தான் பூமியதிராது எந்தச் செந்துக்கள் எதிர் வந்து அகப்பட்டுக் கொள்ளுமோவென்று, கீழ்நோக்கி அஞ்சி யஞ்சி மெல்லென நடக்கின்றபோது, வேறோர் அதிர்ச்சியினால் நடுங்கிச் சிற்றெறும்புகள் விரைவாக ஊர்ந்து போகின்றதைப் பார்த்து, திடுக்கிட்டு 'ஓகோ என்ன பாவம்! உயிர்களுக்கு நடுக்கம் உண்டாக நடக்

தோமே' என்று எண்ணி, முகஞ்சோர்ந்து, பிரமை கொண்டு நிற்க நாங்கள் அநேகமுறை பார்த்திருக்கின்றோம். அப்படிப்பட்ட கிருபையுள்ளவன், இந்தக் கன்றை அஜாக்கிரதையினால் கொன்றானென்று எண்ணுவதற்கு இடமில்லை. அன்றியும் அவருடன் சூழ்ந்து போன பிராமணர் முதலானோர்களுக்கும், தேரைச் சூழ்நதுபோன எங்களுக்கும், தேர்க்குமுன் நடந்த ஜனங்களுக்கும், தெருவில்நின்று பார்த்திருந்த பிரஜைகளுக்கும் இலேசமுந் தெரியாதபடி அக்கன்று மாயமாகக் குதித்துவந்து மடிநத தென்று சொன்னார்கள். அன்றியும், தேர்க்கு முன்னே யானைவீரர், குதிரை வீரர் முதலானோர் அணியணியாக யூகம் வகுத்தது போல நெருங்கிப்போக, விருது பிடிப்போர், எச்சரிக்கைசொல்வோர், கட்டியங் கூறுவோர், பட்டாங்கு படிப்போர், சோர்வு பார்ப்போர், ஆள்விலக்குவோர் முதலானவர்கள் நடக்க, இத்தனை பேரையுங் கடந்து, தேர்க்குச் சமீபத்திற் சிங்கக்குட்டியா யிருந்தாலும் வரமாட்டாது. இதுவோ கோல் பிடித்தவனைக் கண்டால் கூப்பிடுதூரம் ஓடுகின்ற இயல்பையுடைய இளங்கன்று; அந்தக் காவலையெல்லாங் கடந்து தேர்க்குச் சமீபத்தில் எதிரே துள்ளியோடி வந்த தென்றால் இந்திரசால மென்றுதான் எண்ண வேண்டுவதாக இருக்கின்றது! ஆதலால் அக்கன்றை அதன் விதியே இப்படிப்பட்ட ஆச்சரிய மரணஞ் செய்வித்த தன்றி உமது புத்திரன் செய்வித்ததன்று; இந்தக் காரியம் இப்படியிருக்க, புத்திரன் கொன்றானென்று

அவனை நோவதும், அவனைப் பெற்றதனுற் பழி வந்த தென்று உம்மை நீர் நோவதும், எய்தவன் இருக்க அம்பை நோவது போலவும், அம்புசெய்து கொடுத்த கருமானை நோவது போலவுமல்லவோ இருக்கின்றது? நீர் சகலகலைகளையுங் கற்று, கேள்வியில் மிகுந்து, அரசர்களெல்லாம் புகழ்ந்து கொண்டாடத்தக்க தன் மையை யுடையவர். உமக்கு இது விஷயத்தில் நாங்கள் விரித்துச சொல்லவேண்டுவதென்ன? இனித் துன்பப்படுவதை விட்டு, உயிர்க்கொலை தம்மையறி யாது நேரிட்டாலும், பிறர் செய்யக் கண்டாலும், அதற்குத் தக்க சாந்தி செய்துகொள்ள வேண்டு மென்றும்; விதிப்படி வினை வசத்தால் நேரிட்ட இந்தக் கன்றின் கொலைக்கு முன்னிலையாக இருந்த உமது புத்திரனையும், பெரியோர்களைக் கொண்டு இதற்குத் தக்க பிராயச்சித்தத்தை யறிந்து செய்விக்க வேண்டு வதே உமக்கு முறை'' என்றுஞ் சொன்னார்கள்.

## பழிக்குப்பழிவாங்கப் பார்த்திபனினைத்தல்

அதுகேட்ட மனுசக்கரவர்த்தியானவர் வியர்வு, துடிப்பு, நகைமுதலான கோபக்குறிகள் தோன்ற மந் திரிகளைப் பார்த்து, ''அமைச்சர்களே! உங்கள் நியா யம் நன்றுயிருந்தது; நீங்கள் சொல்லிய நீதி உங்க ளுக்கே ஒப்பாகு மல்லது தருமதேவதை சம்மதிக் குமோ! கன்றையிழந்து வருந்துகின்ற இப்பசுவின் சஞ்சலத்தையாவது சாந்தப்படுத்துமோ? இப்படி

நீங்கள் சொல்லியது என் முகத்தைக் குறித்தோ, என் புத்திர னுயிருக்கிரங்கியோ, அல்லது உங்கள் சீவனத்தை எண்ணியோ, எதுபற்றியோ?

உலகத்தையாளும் அரசன் ஆசைபற்றியாவது, வெகுளிபற்றியாவது, தாட்சண்யம் பற்றியாவது, உறவுபற்றியாவது நடுநிலையாக நியாயங் கண்டு சொல்லாமல மாறுபட்டால, அதை மறுத்து இது விஷயத்தில் அரசன் நம்மைக கொலலுவானாயினுங் கொல்லட்டும, அவனுக்கு உறுதி கூறுவதே நமக்குக் கடனென்று நிசசயித்துக்கொண்டு, நியாயங் கண்டு நடுநிலையாகச சொல்வது மதியுடைய மந்திரிகளுக்குத் தருமமாகவிருககு, நீங்கள அதை நினையாமல் இப்படிச சொல்லியது என்ன நினைத்தோ? சந்திர சூரியர் திசைமாறினாலும், சமுத்திரந தடைமீறினாலும், மகா மேரு நிலைகுலைநதாலும், மனங் கலங்காது, விவகாரங்களிற பழுது வாராது, பாதுகாக்கின்ற குணததையுடைய நீங்கள், இன்று நீதியில்லாத சில குறும்பரசரைக் கூடி, அவ்வரசர் தூளியென்றால், நிர்த்தூளியெனறும்; கரும்பு கசப்பென்றால் எட்டிக் காய்போற் கசபபென்றும்; தாயைக் கொலை செய்வது தக்கதென்றால், வேதத்தின முதற்காண்டத்தில் விதித்திருக்கின்ற தென்றும்; வெள்ளத்திற் கல் மிதக்குமோ வென்றால், ஆற்றில் அம்மி மிதக்கக் கண்டோமென்றும்; காக்கை வெளுப்பென்றால, நேற்றைப் பொழுதில் நிறக்கக் கண்டோமென்றும்; கல்லின் மேல் நெல்லு முளைக்கு மென்றால், கொத்தாலாயிரங்

குலையாரலாயிரமென்றும்; கள்ளனைப் பிடிக்கலாமோ வென்றால, பிடித்தால் பெரும்பாவ மல்லவோ வென்றும்; பொய் ஆயிரமட்டுஞ் சொல்லலாமோ வென்றால், ஐயாயிரமட்டுஞ் சொல்லலாமென்று விதி யிருக்கிறதென்றும்; பெண்சாதி யுள்ளவனுக்குப் பிள்ளை கொடுப்பது யாரென்றால், ஐயா! பெண் கொடுத்தவனே பிள்ளை கொடுக்கவேண்டு மென்றும்; ஒருவன் மனையாள் மற்றொருவனைக் கூடலாமென்றால், அடக்கத்தில் ஆயிரம்பேரோடு கூடினாலுங் குற்றமில்லை யென்றும்; இந்தக் கழுவில் இவனை ஏற்றலாமோ வென்றால், கழுவுக்குத் தக்க கனமில்லை யென்றும்; என் பிள்ளையும் எச்சரிக்கைக்காரன் பிள்ளையும் ஒருவனை யொருவன் உதாசினமாகத் திட்டினாராம், இதற்கென்ன செய்யலாமென்றால், உமது சற்புத்திரன் வாய்க்குச சர்க்கரையிடவேண்டும், மற்றவன் வாய்க்கு மண்ணிட வேணடுமென்றுஞ் சொல்லுகின்ற துர்மந்திரிகளைப்போல நியாயம் பாராது, நயிச்சிய வார்த்தைகளைச் சொன்னீர்கள். இது காலவேறறுமை யென்றே எண்ணுகிறேன். தன்னைக் கொடுத்தாவது தருமத்தைத் தேடவேண்டு மென்னும் பெரியோர் வார்த்தையைப் பிடிப்பது சற்குண முடையோர்க்குத் தகுதியென்றும், தாய்தநதைபிடத்திலாயினுந் தராசுக்கோல்போலச் செப்பமாக நின்று தீர்ப்புக் கொடுக்க வேண்டுவது அரசர்க்கு அவசியம் வேண்டிய சற்கருமமென்றும் எனக்கு அடிக்கடி அறிக்கையிட்ட நீங்கள், இன்று அதோகதியில் தள்ளிவிடத் தக்க

அநியாயத் தீர்ப்பை அங்கீகரிக்கப் போதிக்கின்றீர்கள். இஃது உங்களிடத்து நேரிட்ட அவஸ்தை வசமென்றே எண்ணுகிறேன். ஒருவரிடத்துத் தண்டனை விதிக்கும்போது எவ்வுயிர்களுந் தன்னுயிர்போ லெண்ணுவதும், எந்தப்பொருள் எந்தப்பிரகாரமா யிருந்தாலும் அந்தப் பொருளி னுண்மையை அறிந்துகொள்வதும், உருவுநோக்காது அறிவை நோக்குவதும், ஊழ்வினை நோக்காது செய்வினை நோக்குவதுமாகிய இப்படிப்பட்ட இலக்கணங்களுக்குப் பொருந்த விதிக்க வேண்டு மென்று எனக்கு அறிவித்து வந்த நீங்கள், இன்று என் புத்திரன் இரக்கமுள்ளவனென்றும், அவன் அஜாக்கிரதையினால் கொன்றதல்லவென்றும், பழவினையாற் பசுங்கன்று மடிந்ததென்றும், அதனால் அதற்குத் தக்க பிராயச்சித்தஞ் செய்விக்க வேண்டுமென்றும், வாதியை மாத்திரம் வரவழைத்துக்கொண்டு நடுக்கொள்ளைக்காரன் நியாயந் தீர்த்தானென்பதுபோற் சொல்லி நின்றீர்கள். ஓகோ! அமைச்சர்களே! நீங்கள் அந்நாளிலிருந்த அமைச்சர்களல்ல; இந்நாளில் என்னைக் கெடுக்க நினைத்துக்கொண்டு எங்கேயிருந்து வந்தவர்களோவென்று எண்ணுகிறேன். ஐயோ! எனக்கு இப்படிப்பட்ட அநியாயத்தைக் கற்பித்தோ இம்மை மறுமை யின்பங்களை வருவிப்பீர்கள்! என்றும் மீளாத சிவகதியை யடையத் தக்க உறுதி வார்த்தைகளைப் பேசிய நீங்கள் இன்று என்றும் மீளாத அவகதியை அடையத் தக்க இழிவுள்ள வார்த்தைகளைப் பேச எங்கே

கற்றுக்கொண்டீர்களோ! ஆ! ஆ!! இந்த ஓரவஞ் சனையை உற்று நினைக்குந்தோறும் நெஞ்சந் திடுக் கிடுகின்றதே! உங்கள் சொற்படி இது காரியத்தில் உடன்பட்டேனானல் தருமமும் தவமும் சலிப் படையுமே! இக்காலத்தில் எனக்கு மேற்பட்ட வர்களில்லையென்று வழக்கழிவு செய்து வஞ்சித்துப் பேசுவேனானல், காலம் போகும் வார்த்தை நிற்குமே! மனு நூலில் சொல்லிய நீதியின்படி நடத்துகின்றபடி யால், மனுசசோழன் மனுசசோழனென்று நெடுந் தூரம் நீண்ட பெயரைச சுமந்த நான், இதற்குச் சம் மதித்தேனானல எழுததறியாதவன் ஏட்டைச் சுமந் ததுபோலவும், கண்ணில்லாதவன் கண்ணாடியைச் சுமந்ததுபோலவும், வாசனை யறியாதவன் மலரைச் சுமதந்துபோலவும் வீணாகவே இந்தப் பெயரைக் கொண்டானென்று ஏழுலகத்தாரும் இகழ்ந்து பேசு வார்களே! இன்றைக்கு என் புத்திரன் செய்த இந்தக் கொடுங்கொலையாகிய பாதகத்துக்குப பரிகாரஞ் செய்து, இலேசாகவிட்டு, நாளை மற்றொருவன் இதைப் பார்க்கினுஞ் சிறிய கொலையொன்று செய்யக் கண்டு, அவனைக் கொலை செய்விப்பேனானல், 'தரும மறியாத இவ்வரசன் தனக்கொன்று பிறர்க்கொன்று செயகிறான்' என்று பார்த்தவர்களெல்லாம் பழித்துப் பேசுவார்களே; அல்லது 'தன் வீட்டு விளக்கென்று முத்தமிட்டால் சுடாதுவிடாது' என்பதுபோல என்புத்திரன் செய்தகொலையென்று புத்திரபேதைமை யால், அடக்கிக் கொள்வேனானல், அதுபற்றிவரும்

பழிபாவங்கள் என்னை அடையாம லிருக்குமோ? ஆதலால் இப்பசுவானது அருமையான இளங்கன்றை இழந்து வருந்துகின்றதைத் தவிர்க்க வலியில்லாதவ ளாகிய நானும், இந்தப்பசுவைப்போல நெடுநாளாக வருந்தி அருமையாகப் பெற்ற என் புத்திரனைப் பழிக் குப்பழியாகக் கொன்று வருத்தங்கொள்வதே தகுதி'' என்று சொன்னார்.

## செயத்தகுவ திதுவெனக் கூறல்

அதுகேட்டு மனங்கலங்கிய மந்திரிகளுக்குள் ஒரு மந்திரியானவர் அரசனை வணங்கி, "தருமநெறி தவறாத தலைவனே! சாவதானமாகத் தயவுசெய்து என் வார்த்தையைக் கேட்டருளவேண்டும். ஆன் மாக்களுக்கு அறிவின் உயர்வு தாழ்வுபற்றியே புண்ணிய பாபங்களும் ஏறிக் குறைந்திருக்கும் என்னுஞ் சுருதி வாக்கியத்தின்படி, தர்மார்த்த காம மோக்ஷங்களைப் பெறுதற்கு யோக்கியமான அறிவுள்ள மனிதப்பிறவி யெடுத்த ஜீவர்களுக்குள் 'ஆனை மதப் பட்டு அடவி யழித்தது' என்னும் நியாயம்போல, மதத்தினால் காமக்குரோதாதிகள் காரணமாக ஒரு வரை யொருவர் கொலை செய்தாரானால் அக்கொலைக்கு ஈடாகக் கொன்றவரைக் கொலை செய்விக்கக் கடவ ரென்றும்; அப்படியன்றிக் "காக்கையேறிப் பனம் பழம் விழுந்தது'' என்னும் நியாயம்போல் வலிமை பகைமை முதலானவை யில்லாமல் விதிவசத்தா

லொருவர் இறந்ததற்கு வியாஜமாக முன்னிட்டு, அவர்களை அவ்வாறு இனி முனனிடவொட்டாம லிருக்கத் தண்டித்து, முன்னிட்டதனுல் வந்த பாபத் துக்குப் பரிகாரஞ் செய்விக்கக்கடவ ரென்றும்; அப் படியன்றி அமுத மூட்டுகின்றபோது அதுவே விஷ மாகிக் கொன்றதென்னும நியாயம்போல், நல்ல வழி யில் நிறுத்தும பொருட்டு அச்சமுறுத்தித் தண் டிக்கும்போது அபாயம நேரிட் டிறந்ததற்கு வேறு காரணமாகி யிருந்த தநதை குரு அதிகாரி முதலானோர்களை அனசன முதலான அரிய விரதங்கள் தவங்கள் செய்விக்கக்கடவரென்றும்; மிருகம் பட்சி முதலான மற்ற உயிர்களுக்கு மனிதர்க ளால் கொலை நேரிட்டால் அந்தந்த உயிர்களின் தரத் துக்கும் அவரவர் குணுகுணங்களுக்குஞ் செய்கை களுக்குங் காரணங்களுக்குந் தக்கபடி யறிந்து பிரா யச்சித்தஞ் செய்விக்கக் கடவரென்றும் பொதுவாக அற நூல்களில் விதித்திருக்கப்பட்ட விதியை இன்று கன்றின் கொலைபற்றி நீர் செய்விக்க எண்ணிய அபூர்வ மான விதி விலக்குகின்றதே; இது தகுதியைக் கடக் கின்ற குற்றமென்று சொல்வதற்கு இடமுண்டு பண்ணுமே'' என்றூர்.

## இளவரசை இழக்க இறைவன் துணிதல்

அதுகேட்ட அரசன், "மந்திரியே! நீர் பயனைத் தரும் விருட்சத்திலுள்ள பழத்தைப் பாராது பிஞ்

சைப் பிடித்ததுபோல பிடித்தீர். நன்றுயிருந்தது உமது வார்த்தை! அறிவின் உயர்வு தாழ்வுகளைப் பற்றிப் புண்ணிய பாபங்கள் ஏறிக்குறையுமென்று பூர்வபாகத்திற் சொல்லிய சுருதி, உத்தரபாகத்திற் பரமேசுவரன் ஆன்மாக்கள்தோறும் விகற்பமில்லாமல் நிறைந்திருக்கிறபடியால்.மாயையின் காரியமாகி வேறுபட்ட அறிவை நோக்காமல், அப்பரமேசுவரனை நோக்கி, எல்லா உயிர்களையும் சமமாக எண்ணி நடத்தவேண்டுமென்ற உத்தரபாகத்தின்படிப் பிறப்பு, குணம், சாதி, தொழில் முதலான விகற்பங்களை நாடாது, உயிர்க் கொலையினிடத்துச் சமானமாகத் தண்டிப்பதே தகுதி; என் புத்திரன் தேரிலேறிக்கொண்டு செல்வச் செருக்கினுல் மறதிபற்றியே இப்பசுவின் கன்றைக்கொன்றுன்; ஆதலால் இவன் ' காக்கையேறிப பனம்பழம் விழுந்தது ' போல வியாஜமானவனுமல்லன்; அமுதமூட்ட விஷமானது போல நன்மை செய்விக்கப்போய்க் கொலைக்குக் காரணமானவனுமல்லன்; ' ஆனைமதப்பட்டு அடவியழித்தது ' என்று நீர் சொல்லிய நியாயத்துக்குச் சரியாக இருக்கின்றுன். ஆதலால் இவனைக் கொல்வதே முடிவு" என்று சொன்னுர்.

## மகனைக் கொல்ல மந்திரியை ஏவல்

அதுகேட்டு மற்றொரு மந்திரியானவர் அரசனைத் தொழுது, "மகாராஜனே! சுருதியில் எல்லா உயிர்

களையும் உயர்வு தாழ்வு நோக்காது சமனாக நோக்க வேண்டுமென்று உத்தரபாகத்தில் விதித்திருக்கின்றது அந்தணரொழுக்கத்துக்கன்றி அரசரொழுக்கத்துக்குப் பொருந்தாதே; அது பொருந்துமானால் பிராமணர் முதலான குலாசாரமும், பிரமசாரி முதலான ஆசிரம தருமமும், பெரியோர் சிறியோர் நல்லவர் தீயவர் என்கிற கிரமப் பாடுகளும் வேறுபட்டு, உலகநிலை தவறி, அரசாட்சி மழுங்கிவிடுமே. இஃது ஒழுக்கத்தைக் கடக்கின்ற குற்றமென்று சொல்வதற்கு இடங்கொடுக்குமே. ஆதலால் பூர்வ பாகத்தில் விதித்த விதிப்படி அறநூல்களிற் குறித்த நியாயங்களைக்கொண்டு தீர்ப்பிடுவதே நெறியாகும்" என்று சொன்னார்.

அது கேட்டு மனுச்சோழர் நகைத்து, "அமைச்சரே! நீர் வழிக்குத் துணையாக வருவான்போல் வந்து நடுக்காட்டிற் பயங்காட்டிப் பணம் பறிக்கின்றவன்போலப் பயம் காட்டுகின்றீர். பரமேசுவரன் அவ்வவ்வுயிர்களிடத்திலும் வேறுபடாமல் விளங்குகின்றபடியால் எவ்வுயிர்களையும் பொதுவாக நோக்க வேண்டுமென்கிற உத்தரபாகத்தின் விதியை நான் அனுசரித்துக்கொண்டது உயிர்க் கொலையாகிய பாப நிவர்த்திக்கு மாத்திரமே யல்லது மற்றொன்றிற்கு மன்று; இக்கருத்தை அறிந்து கொள்ளாமல் 'கருத்தறியாதவன் சொன்னதே கொள்வான்' என்பது போலக்கொண்டு ஒழுக்கங்கடந்த குற்றம் வருமென்று கூறினீர். ஆனால் மற்றவையெல்லாம் நிற்க,

கொலைப்பாதக நிவர்த்திக்கு மாத்திரம் எவ்வுயிர்களையுஞ் சமமாகக் கொள்ளவேண்டு மென்பது எவ்வகையா லென்பீரேல், உயிர்க ளெல்லாஞ் சிற்சத்தியினுருவ மாகலானும், எல்லா உயிர்களுக்கும் இறைவனே தனுகரணங்களைக் கொடுத்தலானும், அவனது சிற்சத்தியாகிய உயிர்களை அவன் கொடுத்தருளிய உடம்பில் நின்றும் நீக்குதல நினைக்கபபடாத அபராதமாகலானும், எந்தெந்த உயிர்களும் இயல்பினா லல்லாமல் இம்சையினாலே உடம்பை விட்டுப் பிரியும்படி நேரிட்டால் அந்தந்த உயிர்களுக்கும் அவ்வவ்வுடம்பை விட்டு நீங்கும்போ துண்டாகும் வருத்தம் பெரிதாக இருக்குமாகலானும், அன்றியும் கொலை செய்யுமிடத்துக் கரும்பையும் எள்ளையும் ஆலையிலுஞ் செக்கிலும் வைத்தாட்டும்போது நெருக்கிலகப்பட்டு அரைபட்டு நசுக்குண்டு சின்னபின்னப்பட்ட அக்கரும்பிலும் எள்ளிலுமிருந்து ரசமும் நெய்யும் எப்படிக் கலங்கிவருமோ அப்படியே உடல் நசுக்குண்டு அரைபட்டுச் சின்னமாக அதிலிருந்தும் நடுநடுங்கி அறிவு கெட்டுத் திகைப்படைந்து கலங்கி வருவது எவ்வுயிர்களுக்கும் பொதுவாகலானும், தமக்குக் கொலை நேரிடுவதை அறிந்தபோது உடம்பு நடுங்கியும் பதைத்தும் வியர்த்தும் தடதடத்துந் தள்ளாடியும் கால் சோர்ந்தும் கண்கலங்கியும் இருளடைந்தும் காதுகள் கும்மென்று அடைபட்டும் நாசி துவண்டும் வாய்நீ ருலர்ந்தும் நாக்குழறியும் வயிறு பகீரென்று திகிலடைந்தும் மனந்திகைத்தும் பறையடித்தாற்

போற் பதபதவென்றடித்துத் துடித்துத் துக்கமுஞ் சோர்வுங்கொண்டு மயங்கவும், பாய்மரச் சுற்றிலகப் பட்ட காக்கைபோலவும், நீர்ச்சுழியி லகப்பட்டவண்டு போலவும், சுழல் காற்றில் அகப்பட்ட துரும்புபோல வும் உயிர் சுழன்று சுழன்று அலையவும் உண்டாகின்ற பயங்கரம் எவ்வுயிர்களுக்கும் இயல்பாகலானும், இறந் தவுடன் அவ்வுயிர்கள் இறப்பினுற்பட்ட இம்சையு மன்றி உடனே பிறப்பினும் வருத்தமடைந்து துக்கப்பட வேண்டுமாகலானும் நாம் வேண்டி ஒருயிரைப் பிறப்பிப்பதற்குச் சுதந்தரமில்லாதபடியால் நாம் வேண்டி ஒருயிரை இறப்பிப்பதற்கும் சுதந்தர மில்லை; இறப்பிப்பதற்கும் பிறப்பிப்பதற்கும் இறை வனே சுதந்தர முள்ளவனென் றெண்ணுமல் ஆகா மியத்தினுற் கொலை செய்வதனுல் மீளாநரகம் நேரு மென்றறிந்து கொள்வீர். ஆதலால் எவ்வுயிர்களிடத் துங் கொலைப் பாதகத்தைச் சமமாகக் கொள்ளவேண் டும். இந்த நியாயத்தின்படி என் புதல்வனைப் பழிக்குப் பழியாகக் கொன்று விடுவதே முடிவு'' என்று சொன்னுர்

அது கேட்டு, வேறொரு மந்திரியானவர் மனுச் சோழனை வணங்கி, "அரசனே! உமது பெயரினுல் விளங்கும் மனு நூலிற் குடுமியையும் முகரோமத்தை யும் க்ஷவரஞ்செய்து, தான் கொன்ற பசுத்தோலைப் போர்த்துப் பசுமந்தையினிடத்தில் வாசஞ்செய்து, கோசலத்தினுல் ஸ்நானம் பண்ணி, இந்திரியங்களை யடக்கியிருத்தல், கஞ்சு குடித்தல், அவிசுபண்ணி

உண்டல், பட்டினியிருத்தல், பசுமந்தையினுடன் போதல், பசுக்களுக்கு உபசாரஞ்செய்தல், பசுத் தானஞ்செய்தல் முதலான செய்கைகளைப் பசுக்கொலை செய்தோர்க்குப பிராயசசித்தமாகச் செய்விக்க வேண்டுமென்று விதித்திருக்கின்றதே; அதற்கு மாறுகப் புதல்வனைக் கொலை செய்வீராளுல் விதி மாறுட்டமென்னுங் குற்றம் வருவதாகத் தோன்று கின்றதே" என்று சொன்ஞர்.

அதுகேட்ட மனுச்சக்கரவர்த்தியானவர், "மந்திரி ! நீர் சொன்னது பால்வேண்டி அழுகின்ற குழநதைக்குப பழத்தை எதிர்வைத்துப் பராக்குக் காட்டுவதுபோ லிருக்கின்றது. விதிமாறுட்ட மென்னுங் குற்றம வருவதாகத் தோன்றுகின்ற தென்று சொன்னீா. அநத மனுநூல் அநித்திய மாகிய தேகத்தில் அபிமானமும், அசுத்தமாகிய பிரபஞ்ச போகத்தில ஆசையும் வைத்த காமிகளுக்கே அவ்விதி கூறியதலலது நித்தியமாகிய சிவத்தில் அபிமானமும், சுத்தமாகிய சிவபோகத்திலாசையும் வைதத என்பிதா மூதாதை முதலானவர்களுக்குக் கூறியதன்று. உயிர்க்கொலை நேரிட்டால் உயிர் விடக் கடவரென்றே குறிப்பினுற் கூறியிருக்கின்றது. என் பிதா மூதாதைக்கு எவ்விதியோ அவ்விதியே எனக் கும் என் புத்திரனுக்கும் வேண்டத் தக்கது. ஆதலால் விதி மாறுட்டமாகாது. 'இந்த நியாயத்தால் என் புத்திரனை இழந்துவிடுவதே முடிவு" என்று சொன்ஞர்.

அதுகேட்ட மற்றொரு மந்திரியானவர் மகாராஜனை வணங்கி, "உலகந் தோன்றியது முதல் இது பரியந்தம் தெய்வ கடாட்சத்தினாலும் வல்லமையினாலும் நீதியுடன் உலகாண்ட அரசர்கள், தாங்கள் ஆளுங்காலங்களிற் பசுமுதலான மிருக வர்க்கங்களுள் ஒவ்வொன்றை அகங்காரத்தால் அடித்துக்கொன்ற அந்நியமானவர்களையும் பிராயச் சித்தஞ் செய்வித்தார்களே யல்லது கொலை செய்வித்தவர்க ளுண்டென்று கேட்டதில்லை. அப்படியிருக்க உமது புத்திரன் இந்தப் பசுவின் கன்றைக் கொல்ல வேண்டுமென்று கருவுகொண்டு கொன்றவனல்லன். நீரெப்படி யவனைக் கொலைசெய்யும்படி தீர்ப்பிடலாம்? அவ்வாறு தீர்ப்பிட்டால் முன்னோர் செய்கைக்கு முரணானதென்னுங் குற்ற முண்டாகுமே" என்றார்.

அதுகேட்டு மனுச்சோழரானவர், "மந்திரி! நீர் மரபறியாதவன் மணம்பேச வந்ததுபோற பேச வந்தீர். முன்னோர் செய்கைக்கு முரணானதென்னுங் குற்றம் வருமேயென்றீர். ஆனால், நான் சொலவதை நன்றாகக் கேளும். பூர்வம் என் முன்னோர்கள் ஆளுங்காலங்களில் இப்படிப்பட்ட கொலை நேர்ந்ததே யில்லை. ஏகதேசங்களில் ஒவ்வொரு கொலைப்பாதகம் நேரிட்டபோது தம்முயிரையுங் கொடுத்துப் பழிக்கு ஈடுகாட்டியிருக்கின்றார்கள். அவர்கள் நிற்க, மற்ற அரசர்களோவென்றால் தாங்கள் ஆளுங்காலங்களில் தேசாசார முதலான கற்பனைகளைப்பற்றி நூதன நூதனமான நியாயங்களை ஏற்படுத்திக்கொண்டு

அவைகளின்படி நடத்தினார்கள். அவ்வரசர்கள் என்னோடு சேர்க்கப்பட்டவர்களல்லர். ஆதலால், என் தீர்ப்பின்படி நடத்துவதே துணிவு" என்றார்.

அதுகேட்டு மற்ற மந்திரிகளெல்லாம் சேர்ந்து வணங்கி நின்று, "மகாராஜனே! கூறியதே கூறுகின்றார்களென்று கோபஞ் செய்யாமல் யாங்கள் சொல்லும் வார்த்தையைக் கேட்டருள்வீராக. இந்தப் பசுவோ ஐயறிவுள்ள மிருகவர்க்கத்துள் ஒன்று; இது பெற்ற கன்றோ பால் கொடுத்தற்குரிய பசுவர்க்கத்ததன்று. ஏருழுதற்குரிய எருதாகத் தக்க சேங்கன்று. உமது புத்திரனோ ஆறறிவுள்ள ஆண் மக்களிற் சிறந்த நல்லறிவுடையவன். அவனோ அக்கன்றைக் கொல்ல வேண்டுமென்று கொன்றவனல்லன். இக்கொலையோ கன்றினுடைய ஊழ்வினையென்று உலகமெல்லாஞ் சொல்லும். ஆதலால், இதற்குத் தக்க பிராயச்சித்தஞ் செய்விப்பதே முறை" என்று சொன்னார்கள்.

அதுகேட்ட அரசன், "மந்திரிகளே, நீங்கள் உண்மையைக் கண்டறிந்து சொல்வதற்குச் சக்தியற்றவர்கள்போல் இலேசாகச் சொல்லுகின்றீர்கள். நல்லது, நான் சொல்லுகின்றதைக் கேளுங்கள். இப்பசுவோ ஐயறிவுள்ள மிருகவர்க்கத்தி லொன்றென்று சொன்னது நன்றாயிருக்கின்றது. உங்கள் நியாயம் உயர்வு தாழ்வுகளை உயிர்களின் அறிவினிடத்து வைத்து, தாழ்ந்த அறிவுள்ள மிருகங்களைக் கொன்றால் பிராயச் சித்தமென்றும், உயர்ந்த அறிவுள்ள

மனிதர்களைக் கொன்றால் கொலைசெய்வதென்றும் சொல்லுகின்ற உங்கள் வார்த்தையின்படியே இப்பசு மனிதரறிவைப் பார்க்கினும் உயர்ந்த அறிவுள்ளதாக இருக்கின்றது. எவ்வாறெனில், எந்த உலகத்தில் எந்தக் காலத்தில எந்தப்பசு இந்தப் பசுவைபபோலக் கன்றிறந்ததைக் குறித்து ஆறறபபடாத துக்கத் தோடும், அதிகாரிகளாலும், பகைவராலும், அயலா ராலும், மற்ற உயிர்களாலும் ஒருவர்க்குக் குறை நேரிட்டால் அக்குறையை அரசன், தனக்குத் தெரி விப்பதற்கு அரண்மனைவாயிலில ஆராய்ச்சிமணி கட்டு வித்திருக்கிறானென்று சாதாரண மனிதர்களாலும் அறியபபடாத இநதக் காரியத்தை அறிநது வந்து, அந்த மணியைக் கொம்பினலடித்துச சத்தமெழுப்பிக் கதறிக் கண்ணீர் வடித்துக்கொண்டு நின்றது ? இதனை எப்போதாவது கேட்டிருக்கின்றீர்களோ ? இல்லையே. இந்தப் பசுமாத்திரம் அபபடியறிந்து செய்ததை இன்று பார்த்து நின்றீர்கள். ஆதலால், இது முன் தவக்குறையால் பசுவுடம்பெடுத்ததாயினும் மனிதப் பிறப்பில் உயர்குலத்தில மேலான அறிவோடு பிறந் திருக்கிறதாகவே கொள்ளவேண்டும். அன்றியும், பசு எலலாப் பிறப்பிலும் உயர்வு உள்ளதென்றும் ; அதன் கொம்பின் அடியிலே பிரம விஷ்ணுக்கள் இருக்கின்றார்களென்றும் ; காவிரி முதலான புண் ணிய தீர்த்தங்கள் அந்தக் கொம்பி னுனியில் இருக் கின்றனவென்றும் ; சிவபெருமான் சிரசிலும், சிவ சத்தி நெற்றியிலும் இருக்கின்றார்களென்றும் ; சுப்

பிரமணியக் கடவுள் நாசியிலும், அசுவினிதேவர் காதுகளிலும், சந்திரசூரியர் கண்களிலும், வருணன் நாவிலும், சரஸ்வதி குரலிலும், கந்தருவா மார்பிலும், இந்திரன் கழுத்திலும், உருத்திரர் முதுகிலும், சத்தமாதர்கள் குறியிலும், இலக்குமி குதத்திலும்,கங்கை மூத்திரத்திலும், பூமிதேவி வயிற்றிலும், யமுனை சாணத்திலும், திருபபாற்கடல் முலையிலும், பாகாக்கினி வயிறு முகம் இதயம் என்னும உறுப்புக்களிலும், அருந்ததி முதலான கற்புள்ளவர்கள் உடம்பிலும் இருபபார்களென்று சொல்லியிருக்கின்றதே. அன்றியும், பரமசிவன் திருமுடிக்கு அபிஷேகஞ் செய்ய யோக்கியமான பால் முதலான திரவியங்களைக் கொடுக்கின்றதே; அன்றியும், திருவெண்ணீற்றின் காரணமான திரவியம் பிறப்பதற்கும் இடமாகவுமிருக்கின்றதே. அன்றியும், நான்கு வேதமும் கால்களாகவும், கருமமும் ஞானமும் கண்களாகவும், ஆகமங்களும சாத்திரங்களும் கொம்புகளாகவும், தருமமே உடலாகவும், தவமே நடையாகவுங்கொண்டு பரமேசுரனுக்கு வாகனமாக விளங்கிய தரும இடபத்துக்கு இனமாகவும் இருக்கின்றதே; இப்படிப் பட்ட மேன்மையுள்ள பசுவை ஐயறிவுடைய மிருக வர்க்கத்துள் ஒன்றென்று சொல்லல் தகுமோ; இதன் கன்றோ பால் கொடுத்தற்குரிய பசுவாவதில்லை, ஏருழுதற்குரிய எருதாகத்தக்க சேங்கன்று என்று சொன்னீர்கள். தேவர்களெல்லாம் பிறப்பதற்குத் தவஞ்செய்கின்ற மகத்துவமுள்ள இந்தத் திருவா

ரூரிலே பிறந்த எல்லா உயிர்களும் சிவகணங்களென் கிற சித்தாந்தப்படி இந்த க்ஷேத்திரத்திலே பிறந்த இக்கன்றைச் சிவகணமென்று கொள்வதை விட்டு, சேங்கன்றென்று சொல்லல தகுமோ? புத்திரனே ஆறறிவுள்ள ஆண்மக்களிற் சிறந்த நல்லறிவுள்ளவ னென்றீர்கள். சிவதரிசனஞ் செய்யத் தேரூர்ந்து போய்ச் செல்வ மறைபயின்ற கண்மறைந்து கன்றைக் கொன்றவன் நலலறிவுள்ளவனென்று சொல்லப்படு வனோ? கன்றிறநததை ஊழ்வினையென்று உலகஞ் சொல்லுமென்றீர்கள்; பிராரத்துவ வாதிகளே யல் லாமல் காமக்குரோதாதிகளாற் பாபங்களைச் செய்வ தற்குச் சீவனே ஆகாமிய கர்த்தாவென்று கொள்கிற உத்தம மார்க்கத்தை யுடையோர்கள் ஊழ்வினை யென்று சொலவரோ? இதற்குத் தக்க பிராயச்சித் தஞ் செய்விப்பதே முறையென்றீர்கள்; மலையை எடுத்துண்டு வயிறு நோகின்றவனுக்குச் சுக்கிடித் துக் கொடுக்கின் அது சொஸ்தபபடுமோ? அது போலக் கொலைப்பாதகஞ் செய்தோர்க்குப் பிராயச்சித் தஞ் செய்யின் அப்பாபம் நிவாரணமாமோ? அவ்வாறு செய்வேனாயின் மீளா நரகத்தில் என்புத்திரனை வீழ்த்துவதுமன்றி, யானும் விழுந்து வருந்துவேன்; இவ்வுலகத்தினும் என்றும் மீளாத பழிக்கு ஆளாகச் சமைவேன்; அன்றியும், எண்ணிறந்த பெருமை பெற்ற இரவி குலத்திற்கும் என்னை அடுத்திருக்கின்ற உயிர்களுக்கும் ஒரிழுக்கு வார்த்தையு முண்டாக்கின வனாவேன். ஆதலால், இனி என் சொல்லுக்கிரண்

டில்லை; இந்தப் பசுவின் கன்றைக் கொன்றபழிக்கு ஈடாக என் புத்திரனைக் கொலைசெய்வதே நிச்சயமாகிய தீர்ப்பு" என்று சொல்லிவிட்டு, மந்திரியைப் பார்த்து, "மந்திரி! என் புத்திரனை அழைத்துப் போய் அந்தக் கன்று இறந்துகிடக்கின்ற வீதியிற் கிடத்தி, நீ தேரி லேறிக்கொண்டு அவனுடம்பின் மேல் தேர்ச்சக்கர மேறும்படி செய்து கொலைசெய்து வருவாய்" என்று கட்டளையிட்டார்.

அப்போது மற்ற மந்திரிகளெல்லாம் கை நெரித்துக்கொண்டு கண்களிலே நீரரும்ப மனங்கலங்கிப் பிரமைகொண்டு நின்றார்கள்.

## மந்திரிதானே மாய்த்துக் கொளல்

கலாவல்லபனென்கிற மந்திரியானவன் கடுந்தவம் புரிந்து பெற்ற கவுத்துவ மணியைக் கடலிலெறிந்து விட்டுவாவென்றும், பலநாள் வருந்தி வளர்த்த பஞ்சவர்ணக் கிளியைப் பருந்துக் கிரையிட்டுவாவென்றும், செய்தற்கரிய தவஞ்செய்து பெற்ற தேவாமுதத்தைச் சேற்றிற் கழித்துவா வென்றுஞ் சொல்லக் கேட்டவன் போல் திடுக்கிட்டு உணர்வழிந்தும், திகைப்பூண்டு மிதித்தவன்போல மயங்கி நின்றும் சற்று உணர்வு தோன்ற, அது விஷயத்தில் மனமில்லாதவனு யிருந்தும் அரசன் ஆணையைத் தடுப்பதற்கு அஞ்சி வணங்கி விடை பெற்றுக்கொண்டு, அவ்விடம் விட்டுப் புறப்பட்டுத் தளர்ந்த நடையோடு

முகங்கருகி, நெடுமூச்சு விட்டுக்கொண்டு "சிவசிவா! சம்போ! சம்போ!! இந்தப்பாதகஞ் செய்யத் தானோ நான் மந்திரியாக ஏற்பட்டேன்! கொலை யென்று சொல்லுகின்றோர்களைப் பார்த்தாலும் பயங் கொள்ளு கின்ற எனக்குததானோ இப்படிப்பட்ட விதிவர வேண்டும்! இந்தக் காரியத்தைச் செய்யாது விடுவோ மென்றால் அரசன் கட்டளையைக் கடநதானென்னுங் குற்றம் நேரிடுமே யென்றும், அல்லது செய்வோமென் றால் நமது உயிர்போற சிறநத வீதிவிடங்கன் விஷயத் தில் எப்படிக் கொலைசெய்யத் துணிவு உண்டாகு மென்றும், எண்ணியெண்ணி என் மனம் இருதலைக் கொள்ளிக்குள் அகபபட்ட எறும்புபோல் திகைக் கின்றதே! இதற்கு என்ன செய்வேன், என்ன செய் வேன்" என்று வருந்தி வருந்தி ஒருகால் முன் வைப்பதும், மற்றொருகால் பின் வைப்பதுமாகி ஊசலாடுகின்றவனைப்போல் அலைந்தும், "வேந்தன விஷமுண்ணெனக் கட்டளையிடினும் உண்ணவேண் டிய உரிமை நமக்கிருக்கிறபடியால் போய்த் தொலைப் போமென்று சற்றே நடநது, எண்ணுதற்கும் யோக் கியமல்லாத இப்பாதகத்தை எப்படிச செய்வோம்" என்று சற்றே நின்று நடைத்தூக்கங் கொண்டவன் போல் தெளிந்தும், மயங்கியும், பித்தம் பிடித்தவன் போல் பிதற்றியும் கண்ணீர் சொரிந்து கலங்கினவனு கிப் பின்புதெளிந்து, "அரசன் நமக்குத் தந்தையா தலால் வீதிவிடங்கன் செய்த குற்றத்தை நாமேற் றுக்கொண்டு நம்முயிரைக் கொடுத்துவிடுவோம்"

என்று துணிவுகொண்டு, அக்கன்று இறந்து கிடக்கிற வீதியினிடத்து அணைகடந்த வெள்ளம்போல அதி வேகமாக வந்து நின்று, தன்னரையிலிருந்த உடைவாளை உறையிலிருந்துருவி எடுத்துக்கொண்டு, தனது கழுத்தில் வைத்து, ஊடறுமை அரிந்துகொண்டு உயிரிழந்து விழுந்தான். அதுகண்டு சில ஒற்றர்கள் அதி சீக்கிரமாய்ப்போய் மனுசசோழரிடத்தில், "ஆண்டவரே! தேவரீர்க்குக் கண்போல விளங்கிய கலாவல்லபனென்னும் மந்திரியானவர் சேங்கன்று இறந்துகிடக்கின்ற தெருவிற்போய் அரையிலிருந்த உடைவாளைக் கொண்டு தமது கழுத்தை அரிந்துகொண்டிறந்து விட்டார்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

## மன்னனுயிறக்க மனந்துணிதல்

அதுகேட்ட அரசன் அளிந்த புண்ணில் அம்பு பட்டதுபோல் துடிதுடித்து, மிகவும் மனங்கலங்கி "ஒகோ இஃதென்ன பாபம்! இஃதென்ன பாபம்!! ஐயோ! கலாவல்லபனென்கிற மந்திரியானவன் நானிட்ட ஏவலைச் செய்வதற்குச் சம்மதித்தவன் போல் சென்றது, நம் மரசனுக்குக் கன்றைப்பற்றி வந்த பழிமாத்திரம் போதாது, நாமும் பழி சுமத்துவோமென நினைத்துத் தானோ! எனக்கு நேரிட்ட இடரையறிந்தும் எரியுங் கொள்ளியை யேறத்தள்ளுவதுபோலவும், நீண்டெரியும் நெருப்பில் நெய்விடுவது போலவும், அவ்விடருக்குமே விடருண்டாகும்படி

செய்தானே! கப்பல் உடைந்து கலங்கும்போது தெப்பமும் உடைந்ததுபோல், கன்றின் பழிக்குக் கலங்கும்போது மந்திரி பழியும் விளைத்துக் கொண்டதே! எனக்கு வந்த துன்பமெல்லாந் தனக்கு வந்ததாக எண்ணி, என்னை இரவும் பகலும் காத்திருந்த மதியுள்ள மந்திரியை இனி எக்காலத்திற் காண்பேன்! இதைக் கேட்டவர்களெல்லாம் இஃதென்ன கொடுமையோ! கொள்ளை கொண்டவனைவிட்டு குறுக்கே வந்தவனமேற் குற்றம் நாட்டியதுபோலவும், கொண்ட மனையாளிருக்கக் கூலிவாங்க வந்தவளைத் தாலி வாங்கச் சொன்னது போலவும், பசுங்கன்றைக் கொன்ற தன் புதல்வனிருக்க, அவனை விட்டு அப்பழியை அமைச்சன்மேல் வைத்து அவனுயிரை வாங்கச்சொன்ன இவ்வரசன் அநியாயக்கார னென்று இகழ்ச்சி செய்வார்களே! அறிவில்லாதவன் செய்த காரியம் பயன் படாது மாத்திரமோ! பழியும் பாவமுங் கொடுக்குமென்ற பெரியோர் வார்த்தைக்கு இலக்கா யினேன்!, ஐயோ! நான் என்ன காரியஞ் செய்தேன்! திருவாரூர்ப் பூங்கோயிலினிடத் தெழுந்தருளிய தெய்வமே! அடுத்தவர்களுக்கு அருள்செய்கின்ற ஆண்டவனே! உன்னை நம்பியிருக்கின்ற அடியேனை இப்படியுஞ் சோதனை செய்யலாமோ! உன் திருவடிகளுக்கு ஆளாகியிருக்கின்ற அடியேனை இப்படிப் பட்ட பழிக்கும் ஆளாக்கலாமோ!'' என்று பலவிதமாகப் பரிதவித்துக்கொண்டு, "பின்னே துக்கந் தருவதான காரியங்களை முன்னே அறிந்து அக்காரியத்தைச்

செய்யாது விடவேண்டும்; ஆலோசித்தறியாது செய்துவிட்டால் அது பற்றித் துயரப்படாமல் மேல் செய்யத்தக்க காரியங்களை ஆலசியப்படுத்தாமல் செய்ய வேண்டுமாதலால், வருவது தெரியாது மந்திரியை யனுப்பிய நாம் துக்கப்படுவதிற பயனென்ன? இனி நாமே போய்ப் புத்திரனைத தேர்க்காலி லூர்ந்து, மந்திரி பழிக்கு நம்முயிரைக் கொடுத்து விடுவோம்" என்றெண்ணி, அரண்மனைக்குப் புறத்தில் வந்து, தமது புத்திரனை அழைத்து வரும்படி காவற் காரர்களுக்குக் கட்டளையிட்டார்.

## மாவரும் வருந்த இளங்கோ கொலைக்களம் புகுதல்.

அவர்கள் கண்ணீர்வடிநத முகததுடன் "ஐயோ! மனுநீதி தவறாத மன்னனுக்கும் இப்படிப்பட்ட ஆபத்து நேரிடலாமா! நமது இளவரசனாகிய வீதி விடங்கனிடத்திற சென்று, 'ஐயா! உம்மை அரசன் அழைதது வரச்சொனனார்' என்று எவ்வாறு சொல் வோம்! என்ன செய்வோம்" என்று துயர்கொண்டு வீதிவிடங்கனிருக்கும் அரண்மனைக்குச் சென்றார்கள்.

அதறகு முன்னதாகவே, பெரியோர்களிடத்துப் பிராயசசித்த விதியைக் கேட்கப்போன வீதிவிடங் கன், தமது பிதாவினிடத்தில் பசுவானது வந்து முறையிட்ட சமாசாரத்தை ஒற்றர்களாலே கேள்விப் பட்டு, "இனி நமக்கென்ன பிராயச்சித்த மிருக்கின்

றது! நமது பிதாவானவர் செய்கிற தீர்ப்பின்படி நடந்துகொள்வோம்" என்று தேகமெலிந்து, மேனி வேறுபட்டு, மனந்தளர்ந்து, முகஞ்சோர்ந்து தனது அரண்மனையினிடத்து வந்திருந்தான். அப்போது அரசன் அனுப்பிய காவற்காரர்கள், அவ்வீதிவிடங்கனைக் கண்டு, கைகுவித்து எதிர் நின்றார்கள். அவர்களைப் பார்த்து, "நீங்கள் என்ன காரியமாக என்னிடத்தில் வந்தீர்கள்?" என்று கேட்க, அவர்கள் ஒன்றுஞ் சொல்லாது ஊமைகளைப் போல விம்மி விம்மி அழுது கண்ணீர் வடித்துக்கொண்டு நின்றார்கள். அதுகண்டு வீதிவிடங்கன், இவர்கள் ஏதோ ஒரு துன்பமான சமாசாரத்தைச் சொல்ல வந்தவர்கள்; அதனால் நாவெழாமல் நடுங்குகின்றார்கள் என்று அறிந்து, "ஓ காவற்காரர்களே! வந்த காரியம் இன்னதென்று சொல்லாமல் துக்கப்படுவதில் பலனில்லை; அந்தக் காரியம் எனக்குத் தெரியும், ஆயினும் துயரப் படாமல் சொல்லுங்கள்" என்றான். அதுகேட்டு, "ஐயா எப்படிச் சொல்லுவோம்! என்ன செய்வோம்! எங்கே போவோம்! எல்லார் குடியையுங் கெடுக்க இருந்தோ தாட்சண்யமில்லாத தலையீறறுப்பசுவானது ஒன்று வந்து ஆராய்ச்சி மணியை அசைத்து இனி உலகத்தை ஆள்வாரில்லாமல் அழிந்து போகும்படி உம்மை அரசன் அழைத்துவரச்செய்வித்தது" என்று சொன்னார்கள். அதுகேட்டு வீதிவிடங்கனைச் சூழ்ந்திருந்த உறவினர், சிநேகர் முதலானோரெல்லாம் "இப்படிப்பட்ட அவதி நேரிடத்தானோ தியாகேசர்

கோவிலுக்குப் போகத்தொடங்கியது! எள்ளளவும் இப்படி வருமென்று அறியோமே! இதற்கு என் செய்வோம்'' என்று அழுது சோர்ந்தார்கள். அந்தப் பிரகாரமே அரண்மனையிலுள்ள மற்றவர்களும் புலம்பி ஆவலித்தார்கள்.

இந்த அழுகையொலியை வீதிவிடங்கன் தாயான வள் கேட்டு இஃதென்ன காரணமென்று விசாரித்து, இன்ன காரணமென்று அறிந்து கொழுகொம்பற்ற கொடியைப்போல கீழே விழுந்து மூர்ச்சையடைந்து, சற்றே அறிவுவரத் தெளிந்து, பாவியாகிய விதி யென் பாக்கியத்தை அழித்ததே! தீமையாகிய வினைப்பயன் என் செல்வத்தை அழித்ததே! வஞ்சமாகிய ஊழ் என் வாழ்வை அழித்ததே! பலநாள் வருந்திப் பெற்ற என் வயிறு பற்றுகின்றதே! பகீரென்று பதைக்கின்றதே! ஐயோ, என் புத்திரன் செய்த குற்றத்திற்கு என்னைக் கொன்றாலாகாதோ'' என்று பலவிதமாகச் சொல்லிக் கைநெரித்துக் கண்ணீர்விட்டு, வயிறு பிசைந்து, மாரடித்து, வாயிலறைந்து, மனம் பதைத்து, கோவென்று அழுதழுது புலம்பினாள்.

அப்போது வீதிவிடங்கனென்கிற இராஜபுத்திரன், அழுகின்ற தாய் முதலானவர்களைப் பார்த்து, ''வீணாக நீங்கள் அழுது புலம்புகின்றதனால் என்ன பிரயோஜனம்! பிரமதேவன் முதலான கர்த்தர்களுக் காலும் விதியைக் கடக்கக் கூடுமோ! எலும்பு நரம்பு தோல் முதலான அசுத்தங்களாற் கட்டிய இந்தச் சிறுவீட்டை நிலையென்று நம்பப் படுமோ!

என்று பிறந்தார்களோ அன்றே இறந்தார்களென்று நினைக்கவேண்டும். ஆறிலுஞ்சாவு நூறிலுஞ்சாவென்றும், நிலத்தில் முளைத்த பூண்டுகள் நிலத்திலே மடியுமென்றும், சாமானியரான அபேதனர்களும் சொல்லிக்கொள்ளுகின்றார்களே; அறிவுள்ள உங்களுக்குத் தெரியாமற் போனதென்ன? இதுபற்றி எவ்வளவுந் துயரப்பட வேண்டுவதில்லை" என்று பலவிதமான உறுதி வார்த்தைகள் கூறி, அவ்விடத்திலிருந்து புறப்பட்டு மனதில் நாணமும் நடுக்கமும உண்டாகத் தந்தையாரிடத்திற்குப போய்த்தொழுது வணங்கித் தூரத்திலே நின்றான். அப்படி நின்ற புதல்வனை மனுச்சக்கரவர்த்தியானவர் நேரே பாராதவராய் வேறொருவன் முகத்தைப் பார்த்து, "இவன் இளங் கன்றை எவ்வாறு கொன்றானோ, அவ்வாறு கொலை செய்யப்படுதற்குத் தக்க குற்றவாளியாயினான்" என்றார். அப்பொழுது புத்திரன், "பசுங்கன்றைக்கொன்ற பாவியாகிய நான் அப்போதே உயிர்விட்டுப் பழிக்குப் பழி சரிக்கட்டுவேன்; ஆனால், தேவரீர் கட்டளை எப்படி நடப்பிக்கிறதோ, அப்படியே நடப்போமென்று அக்கட்டளையை எதிர்பார்த்திருந்தேன்" என்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டான். உடனே அரசன் கொலைவீரர்களை அழைப்பித்து இந்தக் குற்றவாளியை ஏற்பாட்டின்படி கடுங்காவல் செய்து கன்று இறந்து கிடக்கின்ற வீதியிற் கொண்டுபோய்க் கிடத்துங்களென்று கட்டளையிட்டார். அந்தக் கட்டளைக்கு அஞ்சி, அவ்வீரர்கள் உருவிய கத்தியோடு சூழ்ந்து,

நடுவே இராஜபுத்திரனைக் காவல்செய்து நடத்திக் கொண்டுபோக, மனுச்சக்கரவர்த்தியும் மலைபோல் உயர்ந்த ஒரு தேறிலேறிக்கொண்டு பின்னே நடந்தார்.

அதுகண்ட அந்நகரத்திலுள்ள ஜனங்களெல்லாம் "இந்த இராஜகுமாரனுக்கு ஐசுவரியமும் அழகும் அறிவும் குறைவில்லாது கொடுத்த தெய்வம் இடையிலே இந்தப் பழிக்கு ஆளாகச்செய்து, நல்லவிதி நடுவே இருக்கக் கோணிய விதி குறுக்கே வந்ததென்று சொல்வதற்குச் சரியாக்கியதே! இன்பத்தை அநுபவிக்கின்ற இளமைப் பருவத்தில் எடுக்கபபடாத பழிவந்து சூழ்ந்து, சோறுண்ணும்போது தொண்டை விக்கிக் கொண்டதென்பதுபோல் துன்பத்தை உண்டுபண்ணியதே! வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்ததென்பது போலக் கலியாணக்கோலங் கொள்வதற்கு இசைந்து வரும் பருவத்தில் இச்செல்வத்திருமேனிக்குத் தீங்கு உண்டாகும்படி நேரிட்டதே! சிவதரிசனத்துக்குப போனவிடத்தில் சேங்கன்றின் பழிவந்து 'கிணறு வெட்டப் போனவிடத்தில் பூதம் புறப்பட்டதுபோல்' தோன்றியதே! 'கடைகொள்ளப் போகும்போது கள்ளனெதிர்ப்பட்டதுபோல்' அருள்பெறறு வரப்போகும் போது இந்தப் புத்திரனுக்கு அந்தக் கன்றானது எமனைப் போல எங்கேயிருந்து எதிர்ப்பட்டதோ! இந்தக் குமாரனைப்பற்றி நமக்கெல்லா முண்டாகிய இரக்கம் பழிவாங்கவந்த பசுவுக்கு முண்டாயிருக்குமானால்,

ஆராய்ச்சிமணியை அசைத்து முறையிட்டுக்கொள்ளா தே! ஐயோ! இந்தப் பசுவானது சூரிய வம்சத்தை அழிக்கத் துசங் கட்டிக்கொண்டதே! இனி நம்மரச னுக்குப் பிற்காலத்தில் நீதியுடன் அரசாட்சி செய்யத் தக்க அரசனைப் பெறாமல் எல்லா உயிர்களும் நிலை தடுமாறி நின்று மயங்குமே! இந்த இராஜபுத்திரன் முன்பு சேனை சூழத் தேரிலேறிவந்த மங்கலமாகிய கோலத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்த நாம் இப்போது இப்புத்திரன் காவல் சூழக் காலால் நடந்து வருகின்ற பரிதாபமாகிய கோலத்தைப் பார்ப்பதற்கு என்ன பாபஞ் செய்தோமோ! இந்தப் புத்திரனுயிர்க்கு ஈடாக நம்முயிரை யெல்லாங் கொடுத்துவிடுவோ மென்றாலும் அரசன் சம்மதிக்க மாட்டாரே! இந்தப் புத்திரன் உயிரிழந்தால் பின்பு அரசனும் உயிரிழப் பார். பின்பு நாமிருந்து என்ன செய்வது! இதற்கு முன் இறந்துவிடுவதே சுகமாகவிருக்கின்றதே! ஆ! ஆ!! நம்மரசனைப்போல இப்படிப்பட்ட அருமையான நீதியோடு அரசு செய்கிறவர்கள் முன்னுமில்லை, பின்னுமில்லையே! தியாகராஜப் பெருமான் நமது இராஜனுடைய மனதைச் சோதிக்கும்படி இவ்விதஞ் செய்வித்ததாகத் தோன்றுகின்றதே! தருமதேவதை நமது அரசனது உண்மையாகிய நீதியின் தன்மை யைச் சோதிக்கும்படி இவ்விதஞ் செய்வித்ததாகத் தோன்றுகின்றதே!'' என்று பலவிதமாக அவரவர் களுந் தங்கள் தங்களுக்கு நேரிட்ட ஆபத்தென்று நினைத்துப் புலம்பியும் அதிசயித்தும் நின்றார்கள்.

•ஆகாயத்தினிடமாக இவவதிசயத்தைப் பார்க்கும்படி வநதிருககின்ற தேவர்களெல்லாம், "இந்த மனுசசக்கரவர்த்தியானவன் செய்யத் துணிந்த காரியம் இவற்கு முன்னிருந்த அரசர்களுக்குச் சொல்லத்தான் கூடுமோ ? இப்மனிதர்களைப் பார்க்கிலும் உயர் பிறப்பினராகிய நர்மவர்களுக்குத்தான் செய்யக் கூடுமோ ? இவ்வரசன் நீதியிலும் மனோதிடத்திலும் சிறந்தவனாக இருக்கின்றான். இவனுக்குச் சிவ கடாக்ஷங் கைகூடுமல்லது மற்றவர்களுக்குக் கூடுமோ? ஆயினும், இன்னும் நடக்கபபோகிற அற்புதங்களை யெல்லாம் பார்க்கறிவோம்" என்று புகழ்ந்துசொல்லி நின்றார்கள்.

## வீதிவிடங்கன் வீதியிற்கிடத்தல்

இந்தப் பிரகாரமாகச சொல்லிக்கொண்டு நிற்க, மனுச்சக்கரவர்த்தியானவர் அந்தப் பசுங்கன்று இறந்து கிடக்கின்ற வீதியிற்போய், தமது புத்திரனைக் காவல் செய்து, முன்னே நடத்திவந்த கொலை வீரர்களைப் பார்த்து, "இனிக் காலதாமதம் பண்ணாமல் இந்தப் பசுங்கன்றை எடுத்து அப்புறத்தே வைத்து, அவ்விடத்தில் இவ் வீதிவிடங்கனைக் கிடத்தி வையுங்கள்" என்று கட்டளையிட்டார். அதுகேட்டுக் கொலைவீரர்கள் மனம் பதைத்து மதிமயங்கி நின்றார்கள். அப்பொழுது தந்தையாகிய மனுச்சக்கரவர்த்தியின் கட்டளையைக் கேட்டு மயங்கி நிற்கின்ற கொலை

வீரர்களை விட்டுவிட்டதனைப் பார்த்து, "நீங்களேன் மயங்கி வருந்துகின்றீர்கள்? அந்தக் கட்டளையின்படி நானே செய்துகொள்ளுகிறேன்" என்று சொல்லித் தியாகராஜப்பெருமான் சந்நிதிக் கெதிராகத் திரும்பி, இரண்டு கைகளையுங் குவித்துச் சிரசின் பேரில் வைத்துக்கொண்டு, "சிறு பிள்ளைக்குத் திருப்பாற் கடலை அழைத்துக் கொடுத்த தியாகராஜப் பெருமானே! அகண்ட பரிபூரண சச்சிதானந்த சுயம்பிரகாச சாட்சாத்கார சிதாகாச சொரூப சின்மயனாகிய சிவசங்கரனே! அடியேன் பசுங்கன்றைக் கொன்ற பாதகனாயினேன். அதுவும் போதாமல், ஐயோ! எனக்கு நல்வழியைக் கற்பித்துக் கண்போல் விளங்கிய நின்னடிமையிற் சிறந்தவனாகிய மதியுள்ள கலாவல்லப னென்கிற மந்திரியையும் இறப்பிப்பதற்குக் காரணமாகியு மிருந்தேன்! இப்படிப்பட்ட என்போல் பாவிகளெங்கே யுண்டு? என் பிதா தண்டிக்கப்போகிற தண்டனை என் பாதகத்துக்குத் தக்க தண்டனையு மல்லவே! என்ன செய்வேன்! பாவியாயினும் எனக்கு வேறொரு கதியுமில்லாதபடியால், முன் தாயைக் கூடித் தந்தையைக் கொலை செய்தவனது மாபாதகத்தை மன்னித்து அனுக்கிரகஞ் செய்தது போல், அடியேனுக்கும் அனுக்கிரகஞ் செய்ய வேண்டும்; என் பிதாவுக்கும் எனக்கும் உரித்தாகி யிருந்த மற்றவர்களுக்கும் என்னைப் பற்றிவந்த பழி பாபங்களை நீக்கி யருளவேண்டும்; என்பொருட்டு இறந்த மந்திரியை எழுப்பிக் கொடுத்தருள வேண்

டும்; இதோ இந்தப புலாலுடம்பைப போட்டுவிட்டு வருகிறேன்; என்னையுந் திருவடி நீழலிற் சேர்த்துக் கொள்ள வேண்டும்; இந்தப் பிறப்பிலே எனக்குத் திருவடி கிடையாதானால் மறுபிறப்பிலாயினும் கிடைக்கத்தக்க நல்லறிவும் பேரன்பு முள்ளவனாகப் பிறப்பிக்கவேண்டும" என்றுசொல்லி விண்ணப்பஞ் செய்துகொண்டு திரும்பிநின்று, மாதா, பிதா, குரு முதலானவர்களுக்கும மனத்திலே வந்தனஞ்செய்து, இம்மனுசசோழருடைய செங்கோல் மாறாது நிலை பெற்றிருக்க வேண்டுமென்று இஷ்ட தெய்வத்தைப் பிரார்த்தித்துப பஞ்சாக்ஷரத்தை உசசரித்து, வடக்கே தலையும் தெற்கே காலும் வைத்து, இரண்டு கண் களையும் மூடிச சிந்தையைச சிவபெருமான் திருவடித் தியானத்தில் சேர்த்து, யோகநித்திரை செய்பவன் போல் உடம்பைக் கிடத்தினான்.

## மகன்மேற் றேரை மன்னன் செலுத்தல்

அப்போது மனுச்சக்கரவர்த்தியானவர் சிவத் தியானஞ் செய்துகொண்டு, தியாகேசர சந்நிதியை நோக்கி "அடியேனை ஆட்கொண்ட ஆண்டவனே! இவ் வீதிவிடங்கனென்பவன் பசுங்கன்றைக் கொலை செய்தானென்பது பிரத்தியக்ஷமாக உண்மையென்று வெளிப்பட்ட படியால், இந்தக் குற்றவாளியின் கொலைப்பாதகந் தீரத்தக்க தண்டனை செய்வதற்குச் சக்தியில்லாத அடியேன், தேவரீர் திருவுளப்பாங்கின்

படி, மேலோர் ஏற்படுத்திய தரும நூல்களில் கொலை செய்தவனைக் கொலை செய்யக் கடவரென்று விதித்திருக்கிற விதியின்படி, விதிமாறுட்ட முதலான குற்றங்களுக்குச் சிறிது மிடங்கொடாமல், இவனைக் கொலைசெய்யும்படி திரிகரணசுத்தியாகத் தீர்ப்பிட்டுக் கொண்டு, இதோ தேர்க்காலி லூர்ந்து கொலைசெய்யத் தொடங்குகின்றேன். இத் தீர்ப்பினிடத்துத் தேவரீர் திருவடி சாக்ஷியாக என் மனமறிந்து யாதொரு பிசகும் நேரிட்டதில்லை. என்னையுமறியாது ஏதாகிலுங் குறை நேரிட்டிருக்குமானால் அதைத் தேவரீர் மன்னித்துக்கொள்ளவேண்டும். இந்தக் குற்றவாளியின் பாபாத்மாவை அப்பாபத்தினின்று நீங்கும் வண்ணந் தக்க தண்டனை செய்வித்தருளி, மறுபிறப்பிலாயினும் கடைத்தேறும் வழியைக் கடாக்ஷிக்க வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொண்டு, தேரிற் கட்டிய குதிரைகளை விழுந்து கிடக்கின்ற வீதிவிடங்கன் கழுத்தடியிற் சக்கர மழுந்தும்படி நேராகமுடுக்கித் தேரை நடத்தினார். அப்போது தேர்ச் சக்கரமானது வீதிவிடங்கன் மேல் அழுந்திக் கறகற வென்று இழுத்துக்கொண்டு அதிக வேகமாகச் செல்ல உடல் குழம்பிச் சின்னபின்னப்பட்டு, நசுக்குண்டு, கையாற் பிசைந்து, ரசம் பிழிந்த மாங்கனியின் கோதுபோல உடல்வேறு உயிர்வேறாக இறந்தான்.

அதுகண்ட தேவர்களெல்லாம், "அருமையாகப் பெற்ற புத்திரனை நோக்காமல் புண்ணியத்தை

நோக்கிய கண்ணியவானே ! உனக்குச் சுபகர முண்டாவதாக'' என்று வாழ்த்திக் கற்பகப் பூமாரி பொழிந்தார்கள். தேவ துந்துமிகள் அதிர்ந்தன. அந்நகரத்தா ரெல்லாம், ''இப்படிப்பட்ட நீதி செலுத்துகின்ற மகாராஜனை என்ன தவஞ்செய்து பெறலுக்கொண்டோம்'' என்றும், ''ஐயோ ! இனி எக்காலத்தில வீதிவிடங்கனைக் காண்போம்'' என்றும், இன்பக் கண்ணீரும் துன்பக் கண்ணீரும் விட்டுக்கொண்டே நின்றார்கள். உடனே மனுச் சக்கரவர்த்தியானவர் மந்திரியின் பழிக்காகத் தம் உயிரைக்கொடுக்கத் துணிந்து தேரிலிருந்து கீழே யிழிந்தார்.

## இறைவன் வெளிப்படுதல்

அப்போது ஸ்ரீகண்டர், அனந்தேசர், காலச்செந்தீயுருத்திரர், துவாதசருத்திரர், ஏகாதசருத்திரர், புத்தியட்டகர், கூர்மாண்டர், ஆடகர், சதவுருத்திரர், அஷ்ட மூர்த்திகள், நீலலோகிதர், கங்காளகபாலர், அசுவாரோகணர், அஷ்டபயிரவர், வீரபத்திரர், சக்ரதரர், நான்முகர் முதலான பதமூர்த்திகளும் ; கபாலிகன், அசன், புதன், வச்சிரதேகன், பிநாகி, கிருதசாதிபன், உருத்திரன், பிங்கலன், சாந்தன், க்ஷயாந்தகன், பலவான், அதிபலவான், பாசாத்தன், மகா பலவான், சுவேதன், ஜயபத்திரன், தீர்க்கபாகு, ஜலாந்தகன், மேகவாகனன், சௌமியகேசன், சடா

தரன், லக்ஷிமீதரன் ரத்நசந்திரன், ஸ்ரீதரன், பிர சாதன், பிரகாசன், வித்தியாதிபன், ஈசன், சர்வஞ் ஞன், பலிப்பிரியன், சம்பு, விபு, கணுத்தியக்ஷன், கிரியக்ஷன், திரிலோசனன முதலான பதத்தலைவர் களும்; இந்திரர், சந்திரர், சூரியன் முதலான தேவர் களும்; வசிட்டர், அகத்தியர், புலத்தியர், பராசரர், வியாசர் முதலான முனிவர்களும்; கண்ணுவர், கருக் கர், சுதானந்தர் முதலான இருடிகளும்; அசுரர், அந் தரர், ஆகாயவாசிகள், விஞ்சையர், வித்தியாதரர், கரு டர், காந்தருவர், இயக்கர், கின்னரர், கிமபுருடர், சித்தர், நிருதர், பூதர், பைசாசர், போகபூமியர், உரகர் முதலான கணங்களும்; நந்தி, பிங்கிரிடி, சண்டன், பிரசண்டன், சங்குகன்னன், வாணன், அந்தகன், கும்போதரன், விரூபாக்ஷன் முதலான பிரமதகணங் களும் சூழ்ந்து துதித்து வரவும்; பேரிகை, மத்தளம், தாளம், சங்கம், சச்சரி, தடாரி முதலான வாத்தியங் கள் முழங்கி வரவும்; "எல்லாம் வல்ல இறைவன் வந்தான், நல்லோர்க்கருளும நாயகன் வந்தான், முப்புர மெரித்த முன்னோன் வந்தான், தப்பிலார்க்கருள் செயுந் தயாநிதி வந்தான், வள்ளல் வந்தான், மறை தேவன் வந்தான், எள்ளி லெண்ணெய்போ லிருப்ப வன் வந்தான், அன்பர்க்கருளும் ஐயன் வந்தான், இன்பங் கொடுக்கும இறைவன் வந்தான், முத் தொழில் நடத்தும் முதல்வன் வந்தான், பக்தர்கள் புகழும் பதத்தோன் வந்தான், தேவர்கள் போற்றுந் தியாகன் வந்தான், மூவர்கள் வாழ்த்தும் முக்கணன்

வந்தான்,'' என்று சின்னங்கள் பிடித்து வரவும், தும்புருநாரதர் யாழிசை பாடி வரவும், உருத்திர கணிகையர் நடனஞ் செய்து வரவும, ஒற்றை வெண் குடை சாமரை முதலான மங்களவிருதுகள் நெருங்கி வரவும், ஆனைமுகக் கடவுளும், ஆறு முகக் கடவுளும், இருபக்கங்களிலும் இசைந்து வரவும், உலகமாதாவாகிய உமாதேவியார் இடது பக்கத்திலிருக்க ஜடாமகுட திரிநேத்திர காள கண்ட சதுர்ப்புஜம முதலானவை விளங்க, தர்ம சொரூபமாகிய இடபவாகனத்தின் மேல் சர்வ மங்கல சக்தியே திருமேனியாகக் கொண்ட தியாகராஜப் பெருமான் எழுந்தருளி, மனுச்சோழ ராஜனுக்குமுன் தரிசனங் கொடுத்தருளி, குளிர்ந்த நிலவு தளும்பி வீசுகின்ற புன்னகை காட்டி அரசனுக்கு ஜில்லென்று உடம்பும், உள்ளமும், உயிரும் குளிரும்படி செய் வித்து, கருணை யென்னும் வெள்ளம் நிறைந்து, பொங்கித் ததும்பி, பெருக்கெடுத்து, ஒளிகொண் டோங்கி மடைதிறந்தோடுகின்ற மலர்போன்ற திருக் கண்களால் அருள் நோக்கஞ்செய்து, அவ்வரசனுக் குண்டாயிருந்த விடாய் முழுதுந் தீர்த்து, நம்மிடத்து "நம்பிக்கையும் பேரன்பும் வைத்து, மனுநீதி தவறாது அரசாட்சி செய்கின்ற மனுச்சோழனே! நீ நடத்து கின்ற நீதியின் பெருமையை உலகத்தவர் செவ்வை யாகத் தெரிந்துகொள்ளும்படி நாமே இவ்வாறு சோதிப்பித்தோம்; இனி ஒன்றுக்கும் அஞ்சவேண் டாம்'' என்று திருவாய் மலர்ந்தருளி, இறந்து கிடக்

கின்ற பசுங்கன்றும், கலாவல்லபனென்னும் மந்திரியும், வீதிவிடங்கனென்னும் இராஜகுமாரனும உயிர்பெற்று எழுந்திருக்கும்படி கடாக்ஷித் தருளினர்.

## மாதிருக்கும் பாதியனை மன்னன் புகழ்ந்தேற்றல்

அந்தக்கணமே நித்திரை நீங்கி எழுகின்றது போல், இளங்கன்றானது உயிர்பெற்று எழுந்து தன தாய்ப் பசுவினிடத்தில் சென்றது. மந்திரியும் புதல வனும உயிர்பெற்றெழுந்து, ஆண்டவனை வணங்கி, அருகே மலர்ந்த முகத்தோடு வந்தனை செய்து கொண்டு மகிழ்ந்து நின்றார்கள். அதுகண்டு அந நகரத்திலுள்ள ஜனங்களும மற்றவர்களும் தமமை அறியாத பெருங்களிப்புடையவர்களாய்ச சிலர், "அற்புதம், அற்புதம்" என்று ஆடினார்கள்; சிலர், "பண்ணிய பூசை பலித்தது, பலித்தது" என்று பாடினார்கள்; சிலர், "சூரியகுலந தோன்றியது, தோன்றியது" என்று துதித்தார்கள்; சிலர், "துக்கம நீங்கியது, சுகம் கிடைத்தது" என்று துள்ளினார்கள்; சிலர், "குறையெல்லாந் தீர்ந்தது, குறையெல்லாந தீர்ந்தது" என்று கொண்டாடினார்கள்; சிலர், "கும்பிட்ட தெய்வம் குறுக்கே வந்தது" என்று குதித்தார்கள்; சிலர், "எம்பெருமா னெதிர்ப்பட்டா லென்ன முடியாது" என்று எக்களித்தார்கள்; சிலர், ஒருவரையொருவர் கட்டித் தழுவிக்கொண்டு ஒருகாதமட்டும் ஓடித் திரும்

பினர்கள்; சிலர், "கலக்கந் தீர்ந்து களிப்புவந்தது" என்று கைகொட்டினார்கள்; சிலர், தோள் தட்டிக் கொண்டும், தொடை தட்டிக்கொண்டும், முகரோமத்தை முறுக்கிக்கொண்டும், முகமலர்ந்துகொண்டும், உடல நிமிர்ந்துகொண்டும் உலாவி நின்றார்கள்; சிலர், "வாழ்வு வந்தது" என்று மனம பூரித்தார்கள். இப்படி அவரவர்களும் அளவில்லாத ஆனந்த முடையவர்களாய் இழந்துவிட்ட பொருளை எதிர்வரப் பெற்றவர்களைபோல சந்தோஷ கோஷஞ் செய்து நிற்க, மனுச்சக்கரவர்த்தியானவர் கங்கையும் இளம்பிறையும் விளங்குகின்ற சடாமகுடத்தையும, திரிபுண்டரமூந திலகமும் திருநோக்கும விளங்குகின்ற நெற்றியையும், அருள் ததும்பி வழிகின்ற திருநோக்கங்களையும், சங்கு குண்டலமணிந்து தாழ்ந்த செவிகளையும், நறுங்குமிழ்போன்று விளங்குகின்ற நாசியையும், வேதமாகிய தெள்ள முததனைதக கொள்ளைகொண்டுண்ணும்படி அன்பர்களுக்கு அருளிச் செய்கின்ற செம்பவளம் போன்ற திருவாய்மலரையும், வானவர்க் குயிர் கொடுத்த மணிகண்டத்தையும், கொன்றைமாலையணிந்து குலவரைகள்போ லுயர்ந்த திருத்தோள்களையும், மானும் மழுவும் வரதமும் அபயமுங்கொண்ட மலர்க்கரங்களையும், சிவந்து மெல்லென்று திருவருள் பழுத்து ஆனந்தமொழுகிப பக்தர்கள் மனத்தில் தித்தித்திருக்கும் பாதமலர்களையும், செம்பவள மலை போன்ற திருமேனியையும், பச்சைக்கொடி படர்ந்தது போன்று பார்வதியார் மகிழ்ந்து விளங்குகின்ற

பாகத்தையுங் கண்குளிரக் கண்டு, களிப்படைந்து, ஆனந்த நீர் ஊற்று நீர்போல் சுரந்து சுரந்து, விழுந்து விழுந்து மார்பினிடத்து வண்டலாடவும், உடல் குழைந்து விதிர் விதிர்த்துச் சிலிர் சிலிர்த்து, மயிர்க் கூசசெறிந்து என்பு நெக்குவிட் டுருகியும், மனங் கனிந்துகனிந்து கசிந்துகசிந்து நெகிழ்ந்துநெகிழ்ந்து படபடவென்று பதறிப் பதறி உருகி யுருகி ஆனந்த வெள்ளத்தி லழுந்தி யழுந்திப பரவச மாகியும், "சிவசங்கர சிவசங்கர சிவசங்கர சிவசங்கர சிற்பர தறபர சிற்குண சின்மய சிவசிவ" என்று வாய்நீர் சுரந்து பாடிபபாடி நாககுழறித் தழும பேறியும், "ஹர ஹர" என்று ஆனநதக் கூத்தாடியும், தண்டு போல் அனந்த முறை கீழே விழுந்து விழுந்து வணங்கி உடமபிற் புழுதியாடியும், குளிர்ச்சி பொருந் திய சந்திர விம்பம்போன்ற முகத்தின்கண் முத்து மாலை யணிந்ததுபோல வியர்வரும்பி இளநகை தோன்றி மலர்ந்து விளங்கக் கைகளைக் கூப்பிச் சிர சின்மேல் வைத்துக்கொணடு, அன்பே வடிவமாகி நின்று, "பிரமன் முதலாகிய பெரிய தேவர்களெலலாம் அரியதவஞ் செய்தும் கனவினுங் காண்பதற் கருமை யாகிய கடவுளே! அன்பு அணுவளவு மிலலாத அடி யேனுக்கு அருமையாகிய திருமேனியை நனவிலே எளிதாகக் காட்டியருளிய தேவரீர் பெருங்கருணையை என்னென்று துதிபபேன்! பொய்யுலகத்தை மெய் யென்று நம்பிப் புன்மையாகிய போகத்தை விருமபி, புவியாண்டு, மீளாநரகில் விழத் துணிந்திருந்த அஞ்

ஞானத்தையுடைய அடியேனையும் ஒரு பொருளாகத் திருவுள்ளத்திற் கொண்டு காட்சி கொடுத்தருளிய கருணைக் கடலே! கண்ணுண் மணியே! கரும்பின் சுவையே! கற்பகக் கனியே! கருணாநிதியே! தேவரீர் திருவருட் பெருமையை என்னென்று சொல்லுவேன்! யான் என்கின்ற ஆணவப்பேயும், எனதென்கின்ற இராட்சதப் பேயும், மாயை யென்கின்ற வஞ்சகப் பேயும், பெண்ணாசை யென்கின்ற பெரும்பேயும், மண்ணாசை யென்கின்ற மானிடப் பேயும், பொன்னாசை யென்கின்ற பொலலாப்பேயும், குரோதமென்கின்ற கொள்ளிவாய்ப் பேயும், உலோபமென்கின்ற உதவாப் பேயும், மோகமென்கின்ற மூடப்பேயும், மதமென்கின்ற வலக்காரப் பேயும், மாற்சரிய மென்கின்ற மலட்டுப் பேயும் மனப்பேயோடு கூடி இரவும் பகலும் ஆட்டம் ஆடி ஆடி யிளைக்கின்ற அடியேனைக் காத்தருளத் திருவுள்ள மிரங்கித் தரிசனமருளித் துன்பத்தை நீக்கி இன்பத்தை யளித்த எம்பெருமானே! என்னாண்டவனே! என் தந்தையே! என் தாயே! என் குருவே! என தெய்வமே! என் குல தெய்வமே! என் னுயிர்த்துணையே! என்னறிவுக் கறிவாகிய இறைவனே! தேவரீர் திருவடிப் புகழை வேதங்களு மறியாது விழித்துக்கொண்டு தேடித் தேடி இளைக்கின்ற தென்றால், கிருமி கீடங்களினுங் கீழ்ப்பட்ட அசேதனனாகிய அடியேன் எப்படி அறிந்து துதிப்பேன்! தேவரீர் திருவடிக் காட்சி பலிக்கும்படி செய்வித்த இந்தப் பசுவுக்குங் கன்றுக்கும்

என்னை அடிமையாகக் கொடுப்பேன் அல்லது வேறென்ன கைம்மாறு செய்வேன்! தேவரீர் திருமேனிக்காட்சி கிடைப்பதற்குக் காரணமாகிய வீதிவிடங்கனென்னும் புத்திரன் இன்றுதான் எனக்குப் புத்திரனாயினான்! தேவரீரது திருவருட் கோலத்தைக் காணப்பெற்ற அடியேனுக்கு இனி என்ன குறை இருக்கின்றது! அன்பர்களுக்கு இன்பமளிக்கின்ற ஆண்டவனே! தேவரீர் கிருபா நோக்கஞ் செய்யப்பெற்று உடல் பூரித்தேன்! உள்ளங் குளிர்ந்தேன்! உயிர் தழைத்தேன்! பசுங்கன்றும் மந்திரியும் மைந்தனும் உயிர்பெற்று எழுந்திருக்கவும் வரம் பெற்றேன்! வாழ்வடைந்தேன்! துக்கமெல்லாம் நீங்கினேன்! சுகப்பட்டேன்! மனதுக்குமடங்காத மகிழ்ச்சி கொண்டு நின்றேன்! இனி அடியேனுக்குத் தேவரீர் திருவடியினிடத்துத் தவறாத தியானமும், சலியாத அன்பும் தந்தருளி யென்னை அடிமைகொள்ள வேண்டும். குற்றஞ்செய்தாலுங் குணமாகக் கொள்கின்ற குணக்குன்றே! பன்றிக்குட்டிக்குப் பால்கொடுத்த பரம்பொருளே! புலிப்பாலைப் புலவாய்க்கு ஊட்டிய புண்ணியமூர்த்தியே! கல்லடிக்கும் வில்லடிக்குங் கருணைபுரிந்த கருத்தனே! திருவாரூர்ப் பூங்கோயிலி லெழுந்தருளிய தியாகராஜப் பிரபுவே! போற்றி! போற்றி!!" என்று தோத்திரஞ் செய்து தொழுது நின்றார்.

# பெருமான் அருள்புரிந்து மறைய அரசன் ஆலயம்புகுந்து வணங்கல்

அரசன் செய்த தோத்திரங்களைத் திருச்செவி ஏறுக்கொண்டு தியாகராஜப்பெருமான், "நம்மிடத்தில் அன்புள்ள அரசனே! நீ இன்னும் நோயற்று வாழ்வுங் குறைவற்ற செல்வமும் பெற்று, நமது அருளை துணையாகக் கொண்டு, இவ்வுலகத்தை யெல்லாம் ஒரு குடையின் கீழ் ஆண்டு, மெய்யறிவு விளங்கி, மாறாத மகிழ்ச்சியோடிருக்கக் கடவாய்! பின்பு எக்காலத்தும் மீளாத பேரானந்த போகத்தை நாம் தருவோம்" என்று அருள்புரிந்து கணங்களுடன் அந்தர்த்தானமாக எழுந்தருளினார்.

அதுகண்டு மனுச்சக்கரவர்த்தியானவர் பின்பும் கீழ் விழுந்து, நமஸ்கரித்துத் தொழுது, தோத்திரஞ் செய்துகொண்டு, அப்பசுவையுங் கன்றையும் உபசாரத்துடன் நல்ல புல்லுள்ள இடங்களில் மேய்த்து மிகுந்த சுகத்திலிருக்கும்படி செய்வித்துக் கலாவல்லபனைக் கட்டியணைத்துக் கொண்டு, "என் புத்திரன் பழிக்கு ஈடாகச் செய்தற்கரிய செய்கையைச் செய்து கொண்ட அன்புள்ள அமைச்சனே! உன்னைப்போலெனக்கினியவர்கள் உண்டோ" என்று உபசரித்து, பின்பு வீதிவிடங்கனென்னும் மைந்தனை எடுத்து மடிமேல் வைத்து, முத்தங் கொடுத்து, உச்சிமோந்து, "யான் செய்த புண்ணியத்தால் கிடைத்த புத்திரனே! உன்னு

லல்லவோ உயர்வை யடைந்தேன்" என்று, உப்சரித்து, பின்பு மைந்தனும் மந்திரியுந் தாமுமாகக் கமலாலயமென்னும் கோயிலுக்குச் சென்று ஆசாரத்தோடும், அனபோடும், விதிபபடி சிவபெருமானைத் தரிசனஞ் செய்து, அபிஷேகாதி சிறப்புககளும் அனேகம் திருப்பணிகளுஞ் செய்வித்துத் தொழுது, வணங்கித் துதித்து, வலங்கொண்டு, விடைகொண்டு புறப்பட்டு, அந்நகரத்திலுள்ள ஜனங்களெல்லாம் மனங்களித்து வாழ்த்திப் புகழும்படி மங்கல வாத்தியங்கள் முழங்க, வீதியை வலமாக வந்து, அஷ்ட மங்கலங்களேந்திய சுமங்கலிகளும், அந்தணர் அமைச்சர் முதலானவர்களும் வாழ்த்தி மங்கலச செய்கைகளோடும் எதிர்கொள்ள அரண்மனையிற் சென்று வேதியர், துறவினர், விருந்தினர், உறவினர் முதலானோர்களுக்கு அவரவர்க்குத் தக்க வரிசைகளைச செய்து மகிழ்வித்து, கற்புநிலை தவறாத மனைவியர் மனங் குளிர்ந்து களிக்கும்படி மைந்தனைக் காண்பித்து, மந்திரி முதலானவர்கள் சூழச் சிவாநுக்கிரகத்தால் சிங்காசனாதிபதியாய், உலகத்தை யெல்லாம் ஒரு குடை நிழலில் வைத்து அறநெறிப்படியே அரசாட்சி செய்திருந்தார்.

# நூலிற் பயின்றுவரும் பழமொழிகள்

அம்பு செய்து கொடுத்த கருமானைநோவதுபோல ௫௪
அழுகுரலோசை கேட்ட அந்தணர்போல ௪௧
அளிந்த புண்ணில் அம்புபட்டதுபோல் ௭௩
ஆனை மதப்பட்டு அடவியழித்தது ௫௧, ௪௧
இடியோசை கேட்ட நாகம்போல ௨௮
இருதலைக்கொள்ளிக்குள் அகப்பட்ட எறும்புபோல் ௭௨
இழந்து விட்டபொருள் எதிர்வரப் பெற்றவர்கள்போல் ௮௧
இளங்கன்று பயமறியாது ௨௭
இனியசுவையுள்ள தேனை ஈக்கள் சுற்றியதுபோல ௨௨
எண்ணம் பொய்யாகும், ஏளிதம் மெய்யாகும ௨௩
எமன்கையிலகப்பட்ட உயிர் எவவிதத்தாலும் திரும்பாது [illegible]
எய்தவனிருக்க அம்பை நோவதுபோல் ௫௪
எரியுங்கொள்ளியை ஏறத்தள்ளுவதுபோல ௭௩
எழுத்தறியாதவன் ஏட்டைச் சுமந்ததுபோல ௫௮
கடைகொள்ளப் போகும்போது கள்ளனெதிர்ப்பட்டது
போல் ௭௧
கட்டிய வஸ்திரம் அவிழ்ந்தவன் கைபோல் ௫
கண்ணில்லாதவன் கண்ணாடியைச் சுமந்ததுபோல ௫௮
கப்பல் உடைந்து கலங்கும் போது தெப்பமும் உடைந்
ததுபோல் ௭௪
கருத்தறியாதவன் சொன்னதே கொள்வான் ௯௨
கற்புள்ளவள் கணவனை உபசரிப்பதுபோல ௯௩
காக்கையேறிப் பனம்பழம் விழுந்தது ௫௧, ௯௧
கிணறு வெட்டப் போனவிடத்தில் பூதம் புறப்பட்டது
போல் ௭௧

கும்பகோணத்துப்பள்ளன் கொள்ளைகொண்டுபோக, தஞ்சாவூர்ப் பார்ப்பான் தண்டங்கொடுத்தான் ௩௫

குலத்தைக் கெடுக்கவந்த கோடரிககாம்பு ௩௧௦

குள்ளனைக் கொண்டு ஆழம்பார்க்க வந்ததுபோல ௪௩

கூடிப்பிரிந்த மங்கையின் குரலோசையைக் கேட்ட நாயகனைப்போல ௧௨

கொண்ட மனையாளிருக்கக் கூலிவாங்கவந்தவளைத் தாலி வாங்கச் சொன்னதுபோல ௭௪

கொல்லை ஆள் காட்டியைக் கூலிகேட்க வந்ததுபோல ௪௪

கொள்ளை கொண்டவனைவிட்டு குறுககேவந்தவன்மேற் குற்றம நாட்டியதும்பால் ௭௪

சண்டை இரைச்சலைக் கேட்ட சற்சனர்போல ௪௧

சாவியாய்ப்போனதன் பயிரைக்கண்ட தரித்திரனைப் போல் ௪௧

சுழல்காற்றில் அகப்பட்ட துரும்புபோல ௧௪

சூறைக்காற்றில் அகப்பட்ட துரும்பைப்போல் ௩௭

சோறுண்ணும்போது தொண்டை விக்கிகொண்ட தென்பதுபோல் ௭௧

தன்வீட்டு விளக்கென்று முத்தமிட்டால் சுடாதுவிடார் து ௫௮

தன்னை உயர்ந்தவனுக்க நினைத்தவன் தருமத்தை வளர்ப் பதுபோல ௧௩

தன்னைக்கொடுத்தாவது தருமத்தைத் தேடவேண்டும் ௫௬

தாகங்கொண்டு தவிக்குங்காலத்தில் சமீபத்தே தண்ணீ ருண்டென்று சொல்லக்கேட்ட தேசசஞ்சாரியைப் போல ௧௨

தான் தேடிவைத்த திரவியத்தைத் தெரியக கண்டு கொண்டவனைப்போல ௧௨

தீராக்குறைக்குத் தெய்வமே முடிவு ௱

தூரதேசத்திற் போயிருந்த கப்பல் துறைமுகத்தில் வந்த தென்று சொல்லக்கேட்ட வர்த்தகனைப்போல ௧௧

நல்லவழி நடுவேயிருக்கக் கோணிய விதி குறுக்கே வந்தது ௭௯

நீண்டெரியும் நெருப்பில் நெய்விடுவதுபோல ௭௩

நீர்ச்சுழியி லகப்பட்ட வண்டுபோல ௯௪

நெடுநாள் பிரிந்திருந்த கன்றினைக்கண்ட பசுவைப்போல ௧௯

நெருப்பிலிட்ட நெய்யைப்போல் ௪௩

படிப்பில் ஆசையை வைத்தவன் பாடத்தைப் பாராட்டுவதுபோல ௧௩

பயனைத்தரும் விருட்சத்திலுள்ள பழத்தைப் பாராது பிஞ்சைப் பிடித்ததுபோல் ௯௰

பழைய தரித்திரனுக்குப் பணங் கிடைத்ததுபோல் ௪௯

பாய்மரச்சுற்றி லகப்பட்ட காகைபோல ௯௪

பாலியப்பருவம் பயமறியாது ௪௯

பால்வேண்டி அழுகின்ற குழந்தைக்குப் பழத்தை எதிர் வைத்துப் பராக்குக் காட்டுவதுபோல் ௯௫

பாவிக்குப் பாக்கியந் தக்காது ௩௮

பாவிக்குத் தீர்க்காயுள் ௫௰

பிள்ளைதேடும் புண்ணியம் பிதாவுக்குமுண்டு ௧௭

புலிமுழக்கங்கேட்ட புல்வாய்போல ௪௧

பெருங்காற்றால் அடியறவிழுந்த பனைமரம்போல ௪௧

பேயைத் தெய்வமென்று பிள்ளைவரங் கேட்கவந்ததுபோல ௪௩

பொன்கத்தியென்று கழுத்தரிந்துகொள்ளலாமோ ௩௨

மணமுள்ளமலரை வண்டுகள் சூழ்ந்ததுபோல ௨௨

மரபழிக்க வந்த வச்சிராயுதம் ௩௧

மரபறியாதவன் மணம்பேச வந்ததுபோல் ௯௯

மலையை எடுத்துண்டு வயிறுநோகின்றவனுக்கு சுக்கிடித்துக்கொடுக்கின் அது செரிக்கப்படுமோ ௭௰

மாதர்கள் காலிலணிந்த சிலம்போசை கேட்டமாதவை போல

மாதாபிதாக்கள் செய்தது மக்களுக்கு ௪௭
முற்றநனைந்தார்க் கீரமில்லை ௫௬
முன்சிறுமையடைந்து பின்செல்வத்தைப் பெற்றவன்
அச்செல்வத்தைப் பாதுகாப்பதுபோல ௧௫
வலம்புரிச்சங்கு விலையுயர்ந்த வெண்முத்தினைக் கருப்பங்
கொண்டதுபோல ௧௧
வழிக்குத்துணையாக வருவான் போல்வந்து நடுக்காட்டிற்
பயங்காட்டிப் பணம்பறிக்கின்றவன்போல ௬௨
வாசனையறியாதவன் மலரைச் சுமந்தது போல ௩௮
வாதியை மாத்திரம் வரவழைத்துக்கொண்டு நடுச்சொன்
னைக்காரன் நியாயந்தீர்த்தானென்பதுபோல் ௩௭
விரிந்த பாற்கடலில் விஷம் பிறந்ததுபோல் ௨௯
விழலினிடத்து நிழலுக்கு வந்ததுபோல ௪௪
வீட்டின்வாயிலில் வெள்ளெருக்குப் பூத்ததுபோல ௪௩
வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியுடைந்ததென்
பதுபோல ௭௯
வெந்த புண்ணில் வேலுருவியதுபோல் ௪௨

# அருஞ்சொல் லகராதி

[எண் . பக்கவெண்]

அசுவம் - குதிரை, கஉ
அசேதனர் - அறிவில்லாதவர், எஅ
அஞ்சனம் - மை, ௫ ய
அடவி - காடு, ௫ க,
அடுத்த - சரியான, கக
அந்தர்த்தானமாக -மறைவிடமாக, கூ௩
அவதி - முடிவு, எசு
அவமிருத்து-துன்மரணம்,அ
அவலம் - கேடு, சு
அவிசு-நெய்கலந்த பச்சரிசிச் சோறு, கூசு
அன்னப்பிராசனம் - சோறூட்டல், க௩
அஷ்டாங்கம் - எட்டுறுப்புக்கள், ய
ஆதித்தன் - சூரியன், கக
ஆலசியப்படுத்தாமல் - தாமதப்படுத்தாமல், எ௫
ஆலோசித்து - சுழன்று, ௩உ
இதம் - நன்மை, ௩,க௫
உதர்பந்தனம்-புருஷர் அரைப்பட்டிகை, உயீ
உற்பாதம் - கொடுமை, ௩சு
ஏளிதம் - இகழ்ச்சி, உக
ஒற்றர் - வேவுகாரர், எ௫
கட்டியம் - புகழ்ந்து பேசல், ௫௩
கலனை - சேணம், உக
கலை - ஆடை, உஉ
கறுவு-தணியாக்கோபம், கசு
கஜம் - யானை, கஉ
கிம்புரி - யானைக்கொம்பிற் பூண், உக
கீடம் - புழு, கூக
குணம் - கயிறு, உ௫
குரோதம் - சினம, கூக
குறையிரந்து - வேண்டிக்கொள்ள, கஅ
கோ - பசு, ௩ச
கோசிகப்பட்டு - செம்மை கலந்த மஞ்சட்பட்டு, உய
சவ்வீரம் - பாதரசமுள்ள நஞ்சு, உசு
சற்சன நேயம் - நல்லவர் கேண்மை, க௫
சாந்திராயணம் - ஓர் திங்கள் விரதம்; இது பௌர்ணமி தொடங்கி அமாவாசை வரைக்கும் ஒவ்வொரு பிடியன்னம் குறைத்தும், அமாவாசை தொடங்கி ஒவவொரு பிடியன்னம் அதிகமாகப் புசித்தும் அநுட்டிக்கும் விரதம், அ
சிறுமை - வறுமை, க௩
சுழைக்காற்று-சுழல் காற்று, ௩எ
சுன்றல் தோண்டல், சக
செங்கன்று ஆனின் கன்று, ௩க
சோபனம் - வாழ்த்து, கச
சௌளம்-மயிர்கழித்தல், க௩

# அருஞ்சொல் அகராதி

தாவள்யமான - வெண்மையான, ௨௫
தாழி - குடம், ௭௯
திலகம் - பொட்டு, ௨௰
தூசு - ஆடை, ௧௬
தூளி - பொடி, ௫௫
தெற்றி - திண்ணை, ௩
நைச்சியம் - தாழ்வு, ௫௬
நிக்கிரகம் - தண்டனை, ௭
நிலமகள் - பூமிதேவி, ௩
நிறை - கற்பு, ௨௫
நிஷ்காமியம்-விருப்பின்மை, ௰
நோற்றல் - புரிதல், ௨௬
நோன்பு - விரதம், ௨௬
பசலை - தேமல், ௨௨
பஞ்சாவரணம்-ஐந்து முறை வலம் வருதல், ௰
பந்திகள் - குதிரைகள் நிற்குமிடங்கள், ௨
பரி - குதிரை, ௮
பரிதபிப்போர் - துக்கப் படுவோர், ௧௭
பன்னுதல் - சொல்லுதல், ௧
பாங்கிகள் - தோழிகள், ௧௧
பிரலாபித்தல் - சொல்லியழுதல், ௩௨
பிராயச்சித்தம் - பாப நிவிர்த்தி, ௩௨
பிள்ளைக்கலி-பிள்ளையில்லாக் குறை, ௧௭
புரந்தரன் - இந்திரன், ௧௧
புரியாதவராய் - செய்யாதவராய், ௪
புழைக்கை - துதிக்கை, ௧
புளகம் - மயிர்ச் சிலிர்ப்பு, ௰
புனல் - நீர், ௮
பூரித்து - களித்து, ௪௬
பூவரசு - ஓர் மரம், ௨௫
பூஷணம் - அணிகலன், ௧௩
பொய்கை - குளம், ௨
மா - மாமரம், ௮
மாகதா-பாணா, ௨௧
மாசு-குற்றம், ௩௬
மார்த்தாண்டன்-சூரியன், ௧௫
மாற்சரியம்-பொறாமை, ௧௧
மூவா-முடிவில்லாத, ௧
யூகம்-அணிவகுத்தல், ௫௩
வந்தனை-புகழ்ந்து பாடல், ௧௧
வந்தியர்-புகழ்வோர், ௨௧
வாகுவலயம் – தோளணி, ௨௰
விடாய்-ஆசை, ௮௭
விபரீதம்-மாறுபாடு, ௪௰
விபவமாக-மகத்துவமாக, ௧௩
வியாஜம்-முகாந்தரம், ௧௰
விருது-கொடி, ௫௩
விழல்-ஓர் புல், ௪௪